ஒளி படைத்த கண்ணினைப் வா! வா! வா!

முன்னாள் மாணவர் [illegible] நூலகம்
அமைச்சர் என்.வி.என். சோமு
நினைவு அன்பளிப்பு

கலைஞர்

மு. கருணாநிதி

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



பாரதி பதிப்பகம்

தியாகராய நகர் :: சென்னை -

முதற் பதிப்பு : ஜூன், 1982.

கலைஞர் அவர்கள் 59-வது
பிறந்த நாள் வெளியீடு

வெளியீடு :

பாரதி நிலையம்

தியாகராய நகர் : : சென்னை-17

36348

894.8115அ

ஞாபக

விலை ரூ. 8-25

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்,
11, வேங்கடசாமி தெரு,
ஜஸ் ஹவுஸ், சென்னை-5

முன்னுரை

கல்லூரிகள் சிலவற்றில் நான் நிகழ்த்திய உரைகளைத் தொகுத்து 'பாரதி நிலைய'த்தார் தமிழ்க்கனி பதிப்பகத்தின் ஒப்புதலோடு இந்த முதல் பதிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

எதிர்காலம் இளைய தலைமுறையினரின் கையில் இருக்கிறது என்ற பெருத்த நம்பிக்கையுடன் கல்லூரி மாணவரிடையே நான் எடுத்துச் சொன்ன கருத்துக்கள், அவர்களால் செயல் வடிவம் பெற்று நாடும் சமுதாயமும் ஏற்றம் எய்திட வேண்டுமென விழைகிறேன்.

என் ஆசை நிறைவேற இந்த நூல் இளைஞர் சமுதாயத்திற்கோர் படைக்கலனாகத் திகழுமென எண்ணுகிறேன். வெளியிட்டுள்ள பாரதி நிலையத் தார்க்கு என் நன்றி.

சென்னை
1-6-82

அன்புள்ள,
மு. கருணாநிதி

பதிப்புரை

தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிப் பேரவைகளில் சமுதாய மாற்றம் ஏற்படவும் இளைய சமுதாயத்தினர் ஏற்றம் கண்டிடவும். — பாரதி கண்ட ஒப்பற்ற சமுதாயம் மலர்ந்திடவும் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து "ஒளி படைத்த கண்ணினைப் வா! வா! வா!" என்ற இந்நூலைக் கலைஞர் அவர்களின் 59 - வது பிறந்த நாள் வெளியீடாகத் தமிழ்மக்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கலைஞர் அவர்கட்கு 59 - வது பிறந்த நாளில் எங்கள் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலினை வெளியிட இசைவு தந்த தமிழ்க்கனிப் பதிப்பகத்திற்கு நன்றி. மற்றும் விரைந்து அச்சிட்டுத் தந்த வெற்றி அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

அன்பன்

பழ. சிதம்பரன்,
நிர்வாகி, பாரதி நிலையம்

சென்னை-17
2—6—82

ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

பாரதியும் புதுமைப் பெண்களும்

இந்தக் கல்லூரிக்கு நீங்கள் அழைக்கின்ற நேரமெல்லாம் வரக்கூடியவன் என்ற முறையில், இந்தத் தடவையும் உங்களுடைய அழைப்பைத் தட்டாமல் இந்த விழாவிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

பாரதி மன்றத்தினுடைய தொடக்க விழா—இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமென்று நம்முடைய மாணவ நண்பர்கள் இந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் நல்லதம்பி அவர்கள் வாயிலாக என்னை அணுகினர்கள்.

சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர் இருந்தால் அவரை எப்படியும் இது போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணியோ என்னவோ அவரைப் பயன்படுத்தினர்கள் என்று கருதுகிறேன்.

அவரை அழைக்காமலேயே என்னிடத்தில் வந்து மாணவ நண்பர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ள வருமாறு கேட்டிருந்தாலும் நான் வந்திருப்பேன். இதில் இருந்து நல்லதம்பியை நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று நீங்கள்முடிவு கட்டிக்கொள்ளக் கூடாது.

எனக்கும் உங்களுக்கும் இடையிலே உள்ள அன்புத் தொடர்பு அவ்வளவு ஆழமானது என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் இதைச் சொன்னேன்.

விழாவின் தலைவர் அவர்கள் தமிழிலே ஆற்றிய உரையை நாமெல்லாம் கேட்டோம். தமிழிலே உரையாற்ற வேண்டும் என்பதிலே அவருக்கு ஆற்றல் இருக்கிறதா இல்லையா என்பதைவிட, அதிலே அவருக்கு இருந்த ஆர்வத்தை நான் பாராட்டுகின்றேன்.

ஒரு காலத்திலே தமிழர்கள் கூடியிருக்கின்ற அவையில் ஆங்கிலத்திலே பேசுவதுதான் தங்களுக்குப் பெருமை என்றும், அப்படிப் பேசினால்தான் தங்களைப் பெரியவர்கள் — திறமையானவர்கள் — செல்வாக்கு உள்ளவர்கள் என்று கருதுவார்கள் என்றும் எண்ணி இருந்த நிலை இருந்தது. அது இன்றைக்குத் தலைகீழாக மாறி என்னதான் ஆங்கிலப் புலமை பெற்றிருந்தாலும்கூட தமிழ் மன்ற விழாக்களில் தமிழிலே பேசினால்தான் பெருமை என்கின்ற அளவிற்கு நிலைமை மாற்றம் அடைந்து இருக்கிறது என்றால், உங்களுடைய பாரதி மன்றத்தினுடைய பொன்மொழியாக நீங்கள் வெளியிட்டிருக்கின்ற அந்த வாசகங்கள்தான் அதற்குக் காரணம்.

"சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்கென்றால்,—இந்தச் செந்தமிழ் நாடே சிவப்பாகட்டும்."

என்கின்ற அந்த வரிகளை நீங்கள் இந்தத் தாளிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

'செந்தமிழ் நாடே சிவப்பாகட்டும்.' எப்போது? 'சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்கென்றால்.'

செந்தமிழுக்காக நம்முடைய செங்குருதியைச் சிந்துகின்றோம் என்றால் அந்த ஒரு நற்காரியத்திற்காக இந்த நாடே சிவப்பாக மாறட்டும் என்று சொல்லுகின்ற வீர உணர்வும், தியாக உள்ளமும் இன்றைக்கு இளைஞர்களிடையே ஏற்பட்டு இருப்பதை எண்ணி எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

செந்தமிழைக் காப்பதற்காக — வளர்ப்பதற்காக — பிற மொழி ஆதிக்கத்திலே இருந்து மீட்பதற்காக — இந்த மாநிலத்தை சிவப்பாக ஆக்கியது மாத்திரமல்ல; தங்களுடைய தேக்கு மரத் தேகங்களையே கரிக்கட்டைகளாக ஆக்கிக் கொண்டு எட்டுப் பேர் தீக்குளித்துச் செத்தார்கள் என்றால் அப்படி மொழிக்காகச் செத்தது என்பது உலக வரலாற்றில் இந்தத் தமிழகத்திலே தானே தவிர வேறு எங்கும் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட தமிழகத்து இளைஞர்களாகிய நீங்கள் கிறித்துவக் கல்லூரியிலே அழைத்து இருக்கின்ற இந்தப் பாரதி மன்றத்தினுடைய வீர வாசகமாக, 'சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்கென்றால், — இந்தச் செந்தமிழ் நாடே சிவப்பாகட்டும்' என்று கூறியிருக்கின்ற வாசகங்கள் மிகப் பொருத்தமாக அமைந்திருக்கின்றன.

சிவப்பு எதை எதைக் குறிக்கிறது?

சிவப்பு புரட்சியைக் குறிக்கிறது. உண்மையான புரட்சியை.

சீனத்திலே ஆட்சி மாற்றத்தையும் கொடுத்து, கலாச்சார மறுமலர்ச்சியையும் சீனச் சிவப்பு குறித்தது.

சோவியத் ரஷ்யாவிலே சிவப்பு, முதலாளி வர்க்கத்துடைய முதுகெலும்பை ஒடித்து, தொழிலாளி வர்க்கத்துடைய கொடியை முகில்முட்டப் பறக்கவிட்டது.

தமிழகத்திலே சிவப்பு — முழுமை பெறவில்லை; பாதி வளர்ச்சியிலேதான் இருக்கிறது. அது முழுமை பெற வேண்டும் என்பதற்காகத்தான் நாமெல்லாம் இருளை அகற்ற முனைந்து, தமிழகத்திலே இருளும் இருக்கிறது என்பதைக் காட்ட இருளையும், அதையும் மீறி சிவப்பு வளர வேண்டும் — முழுமையாகப் புரட்சி தோன்ற வேண்டும் என்பதற்காக அடையாளச் சின்னங்களாக வைத்திருக்கின்றோம்.

அப்படிப்பட்ட சிவப்பு வளர — ரத்தம் சிந்தவும் — குருதி கொட்டவும் தயாராக இருக்கிறோம் என்கின்ற வீரம் மிக்க இளைஞர்கள் இந்தக் கல்லூரியிலே இந்த மன்றத்தை நடத்துகின்றீர்கள் என்பதை அறிய நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தலைவர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள்; ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சியாக இருந்தாலும் நாங்கள் கருணாநிதியை இங்கே அழைக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள்.

உள்ளபடியே எனக்கேகூட அதிலே பெருமை ஆளும் கட்சியாக இருந்தால் மாத்திரம் என்னை அழைத்துவிட்டு, எதிர்க்கட்சியாக இருக்கிற நேரத்திலே என்னை அழைக்காமல் இருந்தால் நீங்களும் என்னிடத்திலே நெருங்கிப் பழகிய சில நண்பர்களைப் போல ஆகிவிட்டீர்களோ என்று நான் எண்ணிக் கொண்டிருப்பேன். ஆனால், மாணவர்கள்— மாசற்ற மனம் படைத்தவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் 'நீங்கள் என்னை ஆளுகின்ற பொறுப்பிலே இருப்பவனா? எதிர்வரிசையிலே இருப்பவனா?' என்றெல்லாம் பேதம் பிரித்துப் பார்க்காமல் ஒரு தமிழனை தமிழர்கள் அழைக்கிறோம் என்கின்ற அந்த உணர்வோடு இங்கே அழைத்திருக்கிறீர்கள்.

தலைவர் அவர்கள் சொன்னார்கள், ஆளும்கட்சியும்— எதிர்கட்சியும் இரண்டு கண்களைப் போன்றது என்று குறிப்பிட்டார்கள்.

இரண்டு கண்களைப் போன்றது என்று சொல்வதுகூட அவ்வளவு பொருத்தமுடையதாக எனக்குத் தெரியவில்லை.

ஏனென்றால் நானே கண் நோய் வாய்ப்பட்டவன். இரண்டு கண்களைப் போன்றவர்கள் என்கிறபோது இரண்டு கண்களில் ஒன்று பழுதானால்கூட ஒரு கண்ணால் பார்க்கலாம். எனவே ஆளும் கட்சி— எதிர்க்கட்சி இரண்டும்

இரண்டு கண்கள் என்று கூறுவதைவிட ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று கூறுவதுதான் பொருத்தமுடைய தாகும்.

ஒரு நாணயத்தினுடைய ஒரு பக்கத்திலே தலையிருந்து, ஒரு பக்கத்திலே பூவும் இருக்கிற நேரத்தில் எந்தப் பக்கம் தேய்ந்து போனாலும் அந்த நாணயம் செல்லாது. அதைப் போலத்தான் ஒரு நாட்டின் ஜனநாயகத்தில் ஆளும்கட்சி— எதிர்க்கட்சி இருக்க வேண்டும். இரண்டிலே ஒன்று தேய்ந் தாலும் அல்லது தேய்க்கப்பட்டாலும் அந்த நாணயம் செல்லாத நாணயமாக ஆகிவிடும்.

எனவேதான் ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சி யானாலும் நம்முடைய கல்லூரி முதல்வர் குறிப்பிட்டதைப் போல, அவரும் முதல்வர்தான்—முதல்வருக்கு முன்னாலே பேசுகிறேன்— எனவே, முதல்வர் சொன்னதைப்போல ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இரண்டு கண்கள் அல்ல! ஒரு ரூபாய் நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இன்று காலையிலேதான் நான் இந்த மன்றத்திலே என்ன தலைப்பிலே பேசுகிறேன் என்று அறிந்து கொண்டேன். காரணம் இரண்டு மூன்று நாட்கள் நெல்லை மாவட்டத்திலே நடைபெற்ற மாநாட்டிற்குச் சென்றுவிட்டு, வந்த பிறகு உடல் நலம் இல்லாமல் ஓய்வு எடுத்துக் கொள்கின்ற பொழுது நான் அழைப்பிதழைக் காண நேரிடவில்லை. இன்று காலையிலே அழைப்பிதழ் தரப்பட்டது. பிறகு பத்திரிகையிலும் பார்த்தேன். பார்த்த பிறகுதான் ஒரு புதுமையான தலைப்பு எனக்கு இங்கே தரப்பட்டிருப்பதை நான் உணர்ந்தேன்.

'பாரதியும் புதுமைப் பெண்களும்' என்ற தலைப்பு. நான் கிறித்துவக் கல்லூரிக்கு பல முறை வந்த நேரத்தில் எல்லாம்— இங்கே மாணவர்களை சந்தித்த போதெல்லாம்

மாணவர்களில் மகளிர் புறத்து மாணவர்கள் குறைவாக இருப்பதைத்தான் நான் கண்டிருக்கிறேன். இருந்தாலும்கூட நீங்கள் ஏன் இந்தத் தலைப்பை விரும்பினீர்கள் என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தேன். எனக்குப் புரியவில்லை. எப்பொழுது வந்தாலும் நம்மைப் பற்றியே பேசுகிறோனே— இந்தத் தடவையாவது புதுமைப் பெண்களைப் பற்றி பேசட்டுமே என்ற ஆர்வத்தின் காரணமாக 'பாரதியும் புதுமைப் பெண்களும்' என்ற தலைப்பினை எனக்குத் தந்திருக் கின்றீர்கள்.

பாரதி இந்த நாட்டிற்காக— மொழிக்காக— நாட்டி னுடைய விடுதலைக்காக— சமுதாய வளர்ச்சிக்காக— சாதி பேதங்களை ஒழிப்பதற்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்.

பாரதி பிறந்த எட்டயபுரத்து மண் ஒரு நல்ல கவிஞனையும் நாட்டுக்குத் தந்தது. அதே எட்டயப்புரத்து மண் யாரைத் தந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அந்த மண்ணில் பிறந்து காசி வரையிலே சென்று கல்வி பயின்று விடுதலைப் போராட்டக் கால கட்டத்திலே இந்தியாவிலே ஆங்கிலேயருடைய ஆதிக்கத்திற்குட்பட்ட நிலப்பரப்பிலே இருப்பது ஆகாது என்ற காரணத்தினால் பிரஞ்சுக்காரர்களுடைய ஆதிக்கத்திலே இருந்த புதுவை மண்ணிலே அலைந்து திரிந்து அப்படி அலைந்த நேரத்திலும் அலை கடல் ஓரத்திலும் நூற்றுக்கணக்கான எழுச்சிக் கீதங் களைப்பாடி — புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை தன்னுடைய மாணவராகப் பெறுகின்ற பேற்றினையும் பெற்று —39-வது வயதிலேயே இந்த உலகைவிட்டு மறைந்து விட்டவர்தான் கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதி.

எண்ணிப் பார்க்கிறோம். வயது 39. எழுதியதை எடுத்துப் பார்க்கிறோம் 39 வயதில் 20 அல்லது 25 ஆண்டுகள் தான் எழுத்துத் துறையிலே ஈடுபட்டிருக்க முடியும். 20 அல்லது 25 ஆண்டுகளிலே எழுத்துத் துறையிலே ஈடுபட்ட

பாரதி நூற்றுக் கணக்கான கவிதைகளை எப்படி! இயற்ற முடிந்தது என்று எண்ணி வியப்படைகிறோம்.

பாரதியாரைப் பற்றி எத்தனை ஏடுகள் எழுதினாலும், எத்தனை பேர் பாரதியாரைப் பற்றி கவிதை வரிகளைத் தீட்டினாலும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாரதியாரைப் பற்றி எழுதிய கவிதை வரிகளுக்கு ஈடாக — ஒப்பாக — நிகராக — யாரும் இதுவரையிலே எழுதவில்லை.

"நீடு துயில் நீக்கப்
பாடிவந்த நிலா
காடு மணக்க வந்த
கற்பூரச் சொற்கோ"

என்று புரட்சிக் கவிஞர் — பாரதியாரைப் பற்றி பாடிய அந்தக் கவிதை வரிகள் என்றைக்கும் நம்முடைய நெஞ்சிலே பதிந்திருக்கக் கூடிய வரிகள்.

அப்படிப்பட்ட பாரதி புதுமைப் பெண்களைப் பற்றி பாடியது மாத்திரமல்ல. இன்று இந்தத் தலைப்பிலே நான் பேசவேண்டும் என்று தெரிந்த பிறகு பாரதியாருடைய கதைகள் என்ற ஒரு பெரிய புத்தகத்தை நான் படித்தேன்.

அந்த உரைநடைக் கட்டுரை — அதைக் கதை என்றும் சொல்லலாம்; கட்டுரை என்றும் சொல்லலாம். அதிலே எப்படிப்பட்ட அழுத்தம் திருத்தமான சீர்திருத்தக் கருத்துக்களை அவர் வைத்திருக்கிறார் என்பதற்கு அவர் கையாண்டு இருக்கின்ற இரண்டொரு வாக்கியங்களை மாத்திரம் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

பார்ப்பனர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு குடும்பம். பாரதியினுடைய கதைகளில், நான்கூட யாரும் தவறுக எண்ணக் கூடாது என்பதற்காகத்தான் பிராமணர் என்று சொன்னாலும்கூட, பாரதி துணிச்சலோடு பார்ப்பனர் என்றே குறிப்பிடுகின்றார். அப்படிப்பட்ட ஒரு அக்கிரகாரத்தில் பூகம்பம் ஏற்பட்டு அந்த அக்கிரகாரத்திலே உள்ள வீடுகள்

எல்லாம் அந்தப் பூகம்பத்திலே அழிந்து ஒழிய, ஒரு வீட்டிலே தாழ்வாரத்திலும் கூடத்திலும் படுத்திருந்தவர்கள் எல்லாம் பூகம்ப அதிர்ச்சியால் வீடு இடிந்து விழுந்து இறந்து விட, அந்த நேரத்திலே பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு பெண்ணும், அந்தப் பெண்ணுக்கு அருகாமையிலே விதவையாக இருக்கின்ற இன்னொரு பெண்ணும் மிச்சப்படுகிறார்கள்.

அந்தப் பெண், குழந்தையும் பெற்று விடுகிறாள் குழந்தை பெற்ற அந்தப் பெண் பூகம்ப அதிர்ச்சியினால் ஏற்பட்ட வேதனையில் அவளும் இறந்து விடுகிறாள். இறந்து போகின்ற நேரத்தில் பக்கத்திலே இருக்கின்ற விதவைப் பெண்ணை— விசாலாட்சி என்கின்ற அந்தப் பெண்ணை பார்த்து அவள் சொல்லுகிறாள்:

"நான் இரண்டு நிமிடங்களுக்கு மேல் உயிரோடு இருக்கமாட்டேன். என் பிராணன் போகும் முன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லி விட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே!—

முதலாவது, நீ விவாகம் செய்து கொள். விதவா விவாகம் செய்யத்தக்கதே. ஆண்களும் பெண்களும் ஒருங்கே எமனுக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை.

எனவே நீ ஆண் மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநலச் சாஸ்திரங்களை கிழித்து கரியடுப்பிலே போட்டுவிட்டு தைரியத்தோடு சென்னைப் பட்டணத்திற்குப் போய் அங்கே கைம்பெண் விவாகத்தைப் பதிவு செய்யும் சபையாரைக் கண்டுபிடித்து அவர்கள் மூலமாக நல்ல மணமகனைத் தேடி வாழ்க்கைப் படு. இரண்டாவது நீ உள்ள வரையில் என் குழந்தையைக் காப்பாற்று. அதற்கு சந்திரிகை என்று பெயர் வை'

என்று சந்திரிகையின் கதை—என்கின்ற கதையிலே வருகின்ற ஒருத்தி சொல்லிவிட்டு உயிர் விடுகிறுள். அவள் உயிர் விடுவது—உயிர் விடுகிற நேரத்தில் பேசுவது, அப்படி பேசுகிற நேரத்திலே சோகம் ஏற்படுவது என்பது முக்கியம் அல்ல. அவள் சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு பெரிய புரட்சிகரமான கருத்தை— அதை பாரதியார் வாழ்ந்த காலத்தோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இப்பொழுது ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அது பெரிதாக நமக்குத் தெரியாது.

கவிதைகள் மாத்திரம் அல்ல; எத்தனை அருமையான கதைகளை எழுதித் தந்திருக்கிறுர் — வசன காவியங்களை இயற்றித் தந்திருக்கிறுர் என்பதை எண்ணும் பொழுது இத்தனை குறுகிய காலத்திற்குள்ளே இவ்வளவு பெரிய சாதனையா என்று ஆச்சரியப்படத் தோன்றுகின்றது.

புதுமைப் பெண்களைப் பற்றிப் பாடிய பாரதி, அந்தக் காலத்து பழமை முறைகளுக்கு ஏற்பத் தன்னுடைய பதினுலாவது வயதில் ஏழு வயது நிரம்பிய செல்லம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் என்பதை எண்ணினுல், அந்தப் பாரதியா புதுமைப் பெண்ணைப் பற்றிப் பாடினுர் என்றுகூட எண்ணத் தோன்றும்.

ஆம், அதனுல்தான் பாடினுர்.

14 வயதில் 7 வயது பெண்ணை திருமணம் செய்து வைக்கின்ற நிலை, அத்தகைய வைதீகம் — சம்பிரதாயம் அன்று இருந்திருக்கிறது என்பதை எண்ணும்போது இன்று தமிழகத்திலே எவ்வளவு பெரிய மாற்றங்களை கடந்த காலத்திலே நல்லறிவாளர்கள் — சீர்திருத்தச் சிற்பிகள் — பகுத்தறிவாளர்கள் உருவாக்கி இருக்கின்றுர்கள் என்பதை நாம் நன்றி உணர்வோடு நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

பாரதியின் பள்ளிப் பருவத்திலேயே அவர் மீது காழ்ப் புணர்ச்சி கொண்ட ஆசிரியர் ஒருவர் அவருக்குப் பாடத் தெரியும் என்று கேள்விப்பட்டு அவரைக் கேலி புரிவதற்காக

"பாரதி சின்னப் பயல்" என்ற ஈற்றடி வருமாறு ஒரு பாட்டு எழுது என்று சொல்ல, 'பாரதி சின்னப்பயல்' என்று தன்னைத் தானே — இழித்தும் — பழித்தும் ஈற்றடி வைத்து எழுதுகின்ற அந்தப் பாடலை பாடுகிறேன் என்று பாரதி ஒப்புதல் அளித்துவிட்டு, அந்த ஈற்றடி வைத்தே பாடிக் காட்டினார்!

இளம் பாலகனை பாரதி ஆசிரியரைப் பார்த்து ஈற்றடியை முடிக்கும் பொழுது "பார், அதி – சின்னப் பயல்" என்று 'இதோ பார் அதி சின்னப் பயல் மிக மிக அதிகமான சின்னத்தனமான பயல்' என்று ஆசிரியரையே குறிப்பிடுகின்ற அளவிற்கு, 'பாரதி சின்னப் பயல் அல்ல. என்னை இப்படி பாடச் சொன்னானே பார் — அதி சின்னப் பயல்' என்று பாடிக் காட்டிய புலமையை இளம் வயதிலேயே பாரதியார் பெற்றிருந்தார்.

அந்தப் பாரதியார் 'தாய்த் திருநாடு தன்னைப் போற்றி மதித்திடுவோம்' என்று பாடிய அந்தப் பாரதியார்

"ஆடுவோமே பள்ளு
பாடுவோமே" என்று சுதந்திரம் வருவதற்கு முன்பே

"ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோம்"

என்று பள்ளுப்பாடுவோமே என்று பாடிய அந்தப் பாரதியார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளில் எப்படிச் சிறப்பிக்கப் படுகிறார்?

ஆனால் அந்தக் கால கட்டத்தில் எவ்வளவு புரட்சிகரமான ஒரு கருத்தை — சுப்பிரமணிய பாரதியார் தான் எழுதிய சந்திரிகையின் கதையில்—அந்தக் கதையில் வருகின்ற ஒரு பாத்திரத்தின் மூலமாக வெளிப்படுத்துகிறார் என்பதை எண்ணிப் பார்த்தால் எத்தகைய புதுமைப் பெண்கள் நாட்டிலே தோன்றவேண்டும் என்பதிலே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

பாரதியும் புதுமைப் பெண்ணும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இப்போது நாட்டிலே நாம் காணுகின்ற புது — ''மை'' — பெண்களை அவர் குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிடுகின்ற புதுமைப் பெண் ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்'' என்கின்ற அந்த திறமை மிக்கப் பெண்ணைத் தான் கவிச் சக்கரவர்த்தி பாரதி குறிப்பிட்டார்.

அத்தகைய பெண்களால்தான் ஒரு நாடு முன்னேற முடியும் என்று அவர் கருதினர்.

நீங்கள் ஜப்பான் நாட்டுச் சரித்திரத்தைப் படித்துப் பார்ப்பீர்களேயானால் அந்த நாடு எதிரிகள் வயப்பட்டு சீரழிந்து — பாழ்பட்டு இனி இது கடைத்தேறுது என்கின்ற அளவிற்கு நினைக்கின்ற நிலை இருந்தது.

அந்த நாடு மீண்டும் உயிர்த்தெழுந்து இன்றைக்கு உலகத்திலே இருக்கின்ற நாடுகளில் வளமுள்ள ஒரு நாடு என்று எண்ணத்தக்க வகையிலே இருக்கிறது என்றாலும்கூட அத்தகைய நிலையை அங்கே ஏற்படுத்துவதற்கு காரணமாக இருப்பவர்கள் அந்த நாட்டுத் தாய்மார்கள்.

அந்த நாட்டுத் தாய்மார்கள் தாங்கள் பெற்ற செல்வங்களுக்கு அத்தகைய வீர உணர்வை — நாட்டுப் பற்றை ஏற்படுத்தியதின் காரணமாகத்தான், எதிரிகளுடைய படையெடுப்பால் சீரழிந்து போன ஜப்பானை மீண்டும் தலைநிமிரச் செய்ய உறுதுணை செய்த தாய்மார்களை ஜப்பான் நாட்டின் சரித்திரம் இன்றைக்கும் நமக்குக் குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய இந்திய நாட்டின் சரித்திரத்திலே பல வீரர்கள் — சாம்ராஜ்ஜியாதிபதிகள் — மராட்டிய மண்டலத்தைக் கட்டியாண்ட வீரசிவாஜி போன்றவர்கள் தாய் ஊட்டிய வீரத்தின் காரணமாகப் பெருமை பெற்று விளங்கினர்கள்.

வீரசிவாஜியின் தாய் ஊட்டிய பால் வீரப்பாலாக அமைந்த காரணத்தினால் அவர் மராட்டிய மண்டலத்தையே கட்டியாளக் கூடிய வீரனாகத் திகழ்ந்தார். அவருடைய

வரலாறு இன்னமும் இந்தியாவில் இருக்கின்ற அத்தனை பேர்களுடைய உள்ளங்களிலும் கொடி கட்டிப் பறக்கின்ற வரலாறுக இருக்கின்றது.

எனவே பெண்கள் ஒரு நாட்டிலே முன்னேறினுல்தான் அந்த நாடு முன்னேற முடியும். ஒரு காலத்திலே ஆண்களுக்கு அடிமைகளாக ஆக்கப்பட்டிருந்த பெண்கள் சமுதாயம், பாரதி போன்றவர்களால் தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்றவர்களால், பெண்ணுரிமைக்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் போன்றவர்களால், 'பெண்கள் விடுதலே தேவை' என்று முழங்கிய பேரறிஞர் அண்ணு போன்றவர்களால், இன்றைக்கு தலே நிமிர்ந்து வாழுகின்ற நிலேயை நாம் நாட்டிலே காணுகின்ருேம்.

எனவேதான் பாரதி தேவை என்று கூறிய அந்தப் புதுமைப் பெண் எப்படி இருக்க வேண்டும் என்ருல், நாகரிகத்தைக் குறிப்பிட்டுப் பாரதி புதுமைப் பெண்ணே உருவாக்கவில்லே. நாட்டுப்பற்று மிகுந்தவளாக, அதே நேரத்திலே மொழிப்பற்று மிகுந்தவளாக, அதே நேரத்திலே விடுதலே உணர்வு கொண்டவளாக அதே நேரத்திலே மூட நம்பிக்கைகளே ஒழித்து விஞ்ஞான ரீதியில் நாட்டை — உலகத்தை — இந்த வையத்தை உருவாக்கக் கூடியவளாக — அந்தப் புதுமைப் பெண் இருந்திட வேண்டும் என்றுதான் பாரதி விரும்பினுன்.

பாரதியினுடைய பாடலில் ஒரு கட்டத்திலே குறிப்பிடுகிருர். ஒரு பெண்ணுடைய காதலே மறுக்கின்ற பெற்ருரைப் பற்றிப் பாரதி குறிப்பிடும் பொழுது,

நாடகத்தில் காவியத்தில் காதலென்ருல்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்ரும் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்ருே ரத்தே
ஊரினிலே காதலென்ருல் உறுமுகின்ருர்
பாடை கட்டி யதைக்கொல்ல வழிசெய்கின்ருர்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க

மூடரெலாம் பொருமையினுல் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின் ருரே...

— என்று குறிப்பிடுகின்ருர்.

நாடகத்தைப் பார்க்கின்ருர்கள். பெற்ருேர் பாராட்டுகிருர்கள். நாடகத்திலே வருகின்ற அம்பிகாபதி — அமராவதி இருவருடைய காதலையும் சுவைத்து மகிழ்கிருர்கள்.

"இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க" என்று அம்பிகாபதி பாடுகிற நேரத்தில் "ஆகாகா" என்று தலையாட்டுகிருர்கள். பிறகு அம்பிகாபதி — அமராவதி காதலை மறுக்கின்ற அமராவதியின் தந்தை சோழ மன்னன், அம்பிகாபதியின் தலையை அறுக்க வேண்டும் என்று ஆணையிடுகிற நேரத்தில் பதைக்கிருர்கள். இப்படி ஒரு தண்டனையா என்று அவர்கள் தவிக்கிருர்கள்.

இவ்வளவுக்கும் பிறகு வீட்டிற்கு வருகிருர்கள். வீட்டிலே அதே கதையைக் கேள்விப்படுகிருர்கள். அம்பிகாபதி நாடகத்தைப் பார்த்து அம்பிகாபதி–அமராவதி காதலைத் தடுத்த சோழ மன்னனைச் சபிக்கின்ற அதே பெற்ருேர் தங்களுடைய வீட்டிலே அப்படியொரு காதல் கதையை அனுமதிக்கிருர்களா? என்ருல் இல்லை.

அதைத்தான் பாரதி சொல்லுகிருன்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்ருல்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்ரும் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்ருே ரத்தே
ஊரினிலே காதலென்ருல் உறுமுகின்ருர்
பாடை கட்டி யதைக்கொல்ல வழிசெய்கின்ருர்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொருமையினுல் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின் ருரே...

—இது பெற்ருேர்களுக்காக எழுதிய பாட்டு. நீங்கள் பெற்ருேர்கள் மத்தியில் பாடிக்காட்டக் கூடிய பாட்டு.

எனவே குடும்பத்தில், வாழ்க்கையில், நாட்டில், சமுதாயத்தில் எல்லாத் துறையிலும் பெண்கள் முன்னேறப் புரட்சிக் கவியாகத் திகழ்ந்த பாரதியார் தன்னுடைய கவிதையைப் பயன்படுத்தினர். நாடு வாழ அவருடைய கருத்துக்கள் பயன்பட்டன. நலிவு தீர அவருடைய கவிதைகள் பயன் பட்டன.

இன்று பாரதியினுடைய கனவுகள் முழுவதும் வெற்றி கரமாக நிறைவேறி விட்டதா? என்றுல் இல்லை. விடுதலை பெற்ற இந்தியாவெங்கும் — இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற வன்முறைச் சம்பவங்களை கேள்விப்படுகிறோம். பலவற்றை நேரிலே பார்க்கிறோம். அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் இன்றைக்கு வன்முறைச் செயல்கள் நடைபெறுகின்ற காட்சி களைக் காணுகிறோம்.

பெண்களுடைய மானத்திற்கு ஆபத்து. பெண்க ளுடைய உயிர்களுக்கு ஆபத்து என்ற அளவிற்கு நிகழ்ச்சி கள் நாள்தோறும் நடந்து வருவதைக் காணுகின்றோம்.

உத்தமர் காந்தியடிகள் சொன்னர்: 'உண்மையான சுதந்திரம் ஒரு நாட்டிற்குக் கிடைத்தது என்றுல் ஒரு அழகான பெண் தன்னுடைய கழுத்திலே நகைகளை அணிந்து கொண்டு இரவு 12 மணிக்கு ஒரு கிராமத்திலே இருந்து புறப்பட்டு இருட்டில் இன்னெரு கிராமத்திற்கு செல்லு கின்ற அளவிற்கு நம்பிக்கையும் துணிவும் அந்தப் பெண் ணுக்கு என்றைக்கு ஏற்படுகிறதோ அன்றைக்குத்தான் இந்த நாடு உண்மையான சுதந்திரம் பெற்ற நாடாகக் கருத முடியும்' என்று.

ஆனல் இருட்டில் அல்ல. ஒரு கிராமத்திலே இருந்து இன்னெரு கிராமத்திற்கு அல்ல. நகை அணிந்த பெண் கூட அல்ல. ரொம்ப அழகான பெண்ணும்கூட அல்ல. பட்டப் பகலில் இன்றைக்கு நடமாட முடியாத சூழ்நிலை நாட்டிலே

இருப்பதைப் பல மாநிலங்களிலே இன்றைக்கு காணுகின் றோம்.

நான் நாடு என்று குறிப்பிடுகிற நேரத்தில் தமிழ்நாடு என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இந்தியத் திரு நாடு முழுவதும் அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு இருப் பதை நாம் காணுகிறபோது இந்த நிலைக்காக சுதந்திரம் வேண்டும் என்று பாரதி அன்றைக்குப் பாடவில்லை.

ஆனாலும் அவர் பாடிய சுதந்திரம் கிடைத்தது. கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பும் - சுமையும் இளைஞர் சமுதாயத்திற்கு உண்டு. அந்த இளைஞர் சமுதாயம் பாரதியை மனதில் நிறுத்தி இளம்பிராயத்திலேயே தேசியக் கவிஞனுக அரும்பி, மலர்ந்து — மணம் வீசிய அந்த பார் புகழ் புலவருடைய பாதையிலே நடைபோட்டு தாயகத்தைக் காப்பாற்றிட வேண்டும். அந்தச் சூளுரையை இன்று இந்த பாரதி மன்றத் தொடக்க விழாவில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

29—8—80 அன்று தாம்பரம், கிறித்துவக் கல்லூரி பாரதி விழாவில் ஆற்றிய உரை.

தமிழ்த்துறை விழா மலர்!

இந்தக் கல்லூரியின் அனைத்து மன்றங்களின் தொடக்க விழா என்ற பெயரில் இந்த மாலை நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தப் பரந்த வெளியில் இந்தக் கல்லூரி துவங்க வேண்டும் என்கின்ற தணியாத ஆசையோடு கல்நாட்டு விழா நடத்திவிட்டு அதன் பின் இங்கே எழுந்துள்ள கட்டிடங்களை காணும் வாய்ப்பினை பெறும் அளவிற்கு இந்தக் கல்லூரி சிறப்புற நடைபெறுகிறது என்ற செய்தியினை, தொடர்ந்து கேட்டு, நேரிலே காணவேண்டும் என்கிற ஆசையும் நிறைவு பெறுகின்ற அளவிற்கு இந்த விழாவிலே நான் பங்கு பெறுகின்ற வாய்ப்பை அடைந்திருக்கின்றேன்.

அனைத்து மன்றங்களின் தொடக்க விழாவில் மாணவர் பேரவைத் தலைவருக்கான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் இங்கே நடைபெற்றிருக்கிறது.

இன்றைக்கு மாணவர் தலைவர் எடுத்துக் கொண்டிருக்கிற உறுதிமொழி அந்தப் பதவி எத்தனை ஆண்டு காலத்திற்கு, எத்துணை மாதங்களுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்

கின்றதோ அந்தக் கால கட்டம் வரையில் அவர் இந்தப் பொறுப்பை ஏற்று பணியாற்றுவார் என்ற உறுதியை நமக்கு தெரிவிக்கின்றது.

ஆனல் இன்றைக்கு அனைத்திந்திய அரங்கத்தில் நாள் தோறும் உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன — முதல்வர் முன்னிலையில் அல்ல. இந்திய குடியரசுத் தலைவர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எடுக்கப் பட்டவர்கள் எவ்வளவு நாளைக்கு உறுதிப்பாட்டோடு இருப்பார்கள் என்ற ஐயப்பாட்டோடு அனைத்து இந்தியாவில் இருக்கின்ற மக்கள் விழிகளை அகல விரித்து இந்திய நகரத்தின் தலைநகரை உற்று நோக்கியவாறு இருக்கிற சூழ்நிலையில்தான் நான் உங்களை இந்தக் கல்லூரியில் சந்திக்கின்றேன்.

நம்முடைய கல்லூரி முதல்வர் தமிழ்க்குடி மகன் அவர்கள் என்னைப் பற்றியும், நான் இந்தக் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் பற்றியும் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து மாணவர் பேரவைத் தலைவர் ராஜசேகரனும், ஆட்சிக் குழுத் தலைவர் கோவிந்தராசனும், தாளாளர் ரங்கசாமியும், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

மாணவர் பேரவைத் தலைவர் உரையாற்றியபோது யாதவப் பெருங்குடி மக்களின் தலைவர் கண்ணனென்றும், அந்தக் கண்ணன் ஏழ்மையிலே துவண்டு கொண்டிருந்த குசேலனுக்கு செல்வத்தை வாரி வழங்கி மாளிகைக்கு அதிபதியாக ஆக்கினன் என்றும் ஒரு உதாரணத்தை எடுத்துச் சொன்னர். குசேலருக்கு 27 குழந்தைகள். குசேலருக்கு அளப்பரிய செல்வத்தையும் அளித்த கண்ணன் குசேலருக்கு எந்த நிபந்தனையும் போடவில்லை. நீ பணக் காரனுகிவிட்ட காரணத்தினுல் உன் பிள்ளைகள் 27 பேருக்கும் படிப்பதற்கான வாய்ப்புகள் கிடையாது என்று அவன் தடுத்துவிடவில்லை. அப்படி தடுத்திருந்தால் குசேலருக்கு இவ்வளவு செல்வம் மிகுந்தவராக ஆகிவிட்டார்—ஆகவே

அவருடைய பிள்ளைகள் படிக்க இயலாது—அவர்கள் எல்லாம் முன்னேறியவர்களாக மாறிவிட்டார்கள் என்று கண்ணன் அன்றைக்கு சொல்லி இருந்தால், குசேலர் பிள்ளைகள் 27 பேரும் கல்வி கற்றிருக்க முடியாது. இன்று அதேநிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. குசேலரின் நிலையிலிருந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு கண்ணன் அல்ல என்னுடைய அண்ணன், அவருடைய தலைவர் தந்தை பெரியார், அவருக்கும் முன்பிருந்த திராவிடர் இயக்கத்தின் பெருந்தலைவர்கள் இவர்களெல்லாம் வழங்கிய கருவூலந்தான், நிகரற்ற செல்வம்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம், வகுப்புரிமை என்பதாகும்.

அதை வழங்கிய அந்தத் தலைவர்கள் எந்த நிபந்தனையையும், எப்படி கதையிலே வருகிற கண்ணன் குசேலருக்கு விதிக்கவில்லையோ, அதைப்போல நிபந்தனைகள் எதுவுமில்லாமல் தாழ்ந்து கிடக்கும் சமுதாயம் தலைமுறை தலைமுறையாக கல்வியறிவற்று, ஏன், கண்ணற்று, கபோதி நிலையிலிருக்கிற சமுதாயம் தலைநிமிர்ந்து எழுந்து நடமாடவேண்டும் என்கிற ஒரே எண்ணத்தோடு அந்தக் கருவூலத்தை வழங்கினார்கள்.

அந்தச் செல்வம் தொடர்ந்து பல ஆட்சியாளர்களால் பாதுகாக்கப்பட்டது. பறிபோகாமல் அதைப் பாதுகாக்க பல ஆட்சிகள் இருந்தன. பெருந்தலைவர் காமராசர், பெரியவர் பக்தவத்சலம், குமாரசாமிராஜா, குலக்கல்வித் திட்டம் கொண்டு வந்த ராஜாஜி அவர்களே ஆனாலும்கூட அந்தச் செல்வத்தைச் சீரழிக்க எண்ணியது இல்லை. ஆனால் இன்றைக்கு அந்தச் செல்வம் கொள்ளை போகின்ற சூழ்நிலையிலேதான் உங்கள் முன்னால், அந்தக் கொள்ளையை தடுக்க உங்களுடைய கரங்களும் எனக்கு உதவிட வேண்டும் என்ற கோரிக்கையோடு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்க்குடிமகன் இங்கே நான் நீண்ட நேரம் உரையாற்ற வேண்டுமென குறிப்பிட்டார். எனக்கு நிறைய

நிகழ்ச்சிகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். நீண்ட உரைக்குத் தலைப்பு எதுவாக இருக்கலாம் என்று மேடையில் இருந்தவாறு நான் யோசித்தேன். தலைப்பு ''தமிழ்க் குடிமகன்'' என்பதுதான். தமிழ்க்குடிமகன் பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களை பிரித்துக் கொண்டு அந்த நிலங்களுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்வு நெறியை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்தவன். அந்தத் தமிழ்க்குடிமகன் உலகத்திற்குப் பண்பாடுகளை கற்றுத் தரும் ஆற்றல் பெற்றிருந்தான். உலகத்தோடு வாணிபத் தொடர்பு கொள்ளுமளவிற்கு திறன் படைத்தவனாக இருந்தான். அந்த தமிழ்க்குடிமகன் தமிழகத்தில் விளைவித்த செல்வங்களை கிரேக்கம், யவனம் போன்ற வெளி நாடுகளுக்கு அனுப்பி வைத்து வெளிநாட்டிலே இருந்து வருகிற பொருட்களை தன்னுடைய நாட்டுத் துறைமுகத்தில் இறக்குமதி செய்து அவைகளை தமிழ் மக்களுக்குத் தருகிற வாணிப வேந்தனாக விளங்கினான்.

கடாரங்கொண்டான், இலங்கையை வென்றான், வரலாற்று வேந்தனாகவும் தமிழ்க்குடி மகன் திகழ்ந்தான். அப்படித் திகழ்ந்த தமிழ்க்குடிமகன் இடைக்காலத்திலேற் பட்ட சில அல்லல்களால், சோதனைகளால், சில குறுக்கீடுகளால் தமிழ்க்குடிமகன் என்ற பெயரையே இழந்தான். அந்தப் பெயர் யாதவர் முக்குலத்தோர், வன்னியர், முதலியார், செட்டியார், பிள்ளை என்று இப்படி பல பெயர்களாக மாறின. பல பெயர்களாக மாறினாலும் அவன் தமிழ்க்குடிமகன்தான். எப்படி கண்ணனை கிருஷ்ணனென்றும், பரமாத்மா என்றும் பரந்தாமன் என்றும், வேணுகோபாலன் என்றும் விஷ்ணுவென்றும் யாதவர்களும், வைணவர்களும் பல பெயரிட்டு அழைக்கிறார்களோ அதைப் போலத்தான் தமிழ்க்குடிமகனைப் பல பெயரிட்டு அழைக்கிற நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டது.

அந்த நிலைக்குக் காரணம் தமிழ்க்குடிமகன் அகராதியிலேயே இல்லாத வார்த்தை—ஜாதி என்ற வார்த்தை—புதிதாக நுழைக்கப்பட்டமைதான். அப்படி நுழைக்கப்பட்டதன் காரணமாகத் தமிழ்க்குடி மகன் பல பிரிவுகளாக ஆக்கப்பட்டான். அப்படிப் பிரிக்கப்பட்டதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டன. அதற்கு ஆண்டவன் சாட்சிக்கு இழுக்கப்பட்டான்! வேதங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் இவைகள்தான் இந்த சமூக நீதிக்குக் காரணம் என்று சமூகத்தில் அநீதியை புரிந்தவர்கள் அவைகளை தங்களுக்கு எடுத்துக்காட்டுக்களாகச் சொன்னர்கள்.

இவன் பிரம்மதேவனின் தலையிலே உதித்தான், அவன் தோளில் உதித்தான், இவன் தொடையில் பிறந்தான், இவன் காலில் உதித்தான், காலில் பிறந்த காரணத்தால் கீழ்சாதிக்காரன், இவன் என்று சொன்னர்கள். ஆண்டவனையே சாட்சிக்கு இழுத்து தமிழ்க்குடிமகனை தாழ்த்தி விட்டார்கள். அப்பொழுதுதான் தன்மான இயக்கம் இந்த மண்ணிலே தோன்றியது. இப்படி சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் வேதங்களின் பெயரால், இதிகாசங்களின் பெயரால் மக்களை தாழ்த்தியிருக்கின்ற நிலை, பிற்படுத்தியிருக்கின்ற நிலை, சரியா? தகுமா? முறையா? என்று தன்மான இயக்கம் கேட்டது.

அந்தத் தன்மான இயக்கத்தின் மொத்த வடிவமாகத்தான் தந்தை பெரியார் குரல் எழுப்பினர். அந்தக் குரலுக்குக் கிடைத்த பதில்தான் இவர்கள் ஆண்டவன் பிறப்பிலேயே தாழ்ந்தவர்கள். கீழ்சாதிக்காரர்கள் என்று சொன்னர்கள். அதற்கு தன்மான இயக்கத்தின் சார்பில் நாம் அளித்த பதில்தான் ஆண்டவன் என்று ஒருவன் இருந்து அவன் தன் நெற்றியிலும், தோளிலும், தொடையிலும், காலிலும் மக்களை பிரசவித்திருப்பானுனால் அப்படி உற்பத்தி செய்யப்பட்ட அனைவரும் அவரது உடலிலே பிறந்த மனிதர்கள் தானே—அவர்களை ஏன் இத்தனை பிரிவுகளாக பிரிக்

கிறீர்கள்? என்று கேட்டது மாத்திரமல்ல, இன்னுன்றையும் கேட்டோம்.

அத்திமரத்தை எடுத்துக் கொண்டால் உச்சியிலும், கிளையிலும், அடிமரத்திலும் காய்கள் காய்க்கின்றன. எங்கே காய்த்தாலும் அதனை அத்திக்காய் என்றுதான் சொல் கிறோமே தவிர, அடிமரத்தில் காய்ப்பதை பரங்கிக்காய் என்றோ, கிளையில் காய்ப்பதைப் புடலங்காய் என்றோ, உச்சியில் காய்ப்பதை வெண்டைக்காய் என்றோ அழைப்ப தில்லை. அதைப் போலத்தான் பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவரும், தோளிலும், தொடையிலும், காலிலும் தோன்றியவரும் மனிதர்கள்தானே தவிர அவர்களில் உயர்வு தாழ்வு எதுவும் இல்லை என்று சொன்னோம். அதற்கு இதுவரை பதில் இல்லை. ஆனால் சாதிகள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் பெருகின.

சாதி பெருகிட பெருகிட, அதனை மூலதனமாக வைத்து ஆதிக்கவர்க்கம் தன்னை வலுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டது! சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற முழக்கம் தமிழகத்தில், தன்மான இயக்கத்தின் சார்பில் எழுப்பப்பட்ட அதே நேரத்தில் இந்திய உப கண்டத்தில் உத்தமர் காந்தியடிகளின் உதடுகளிலே இருந்து அவரின் உள்ளத்து முழக்கம் வெளிப்பட்டது. பல்வேறு அரசியல் இயக்கங்கள் சாதிகள் ஒழியவேண்டும் என்பதிலே முனைப்பைக் காட்டின. அதிலே தலைசிறந்ததாக—எல்லோருக் கும் வழிகாட்டத்தக்கதாக இருந்த இயக்கம் திராவிடர் இயக்கம். சாதி ஒழிப்பு இயக்கங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கியது தன்மான இயக்கம்தான். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்தான் என்பதை வரலாறு படித்த வர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

சாதியை ஒழிப்பதற்கு "சாதி ஒழிக ஒழிக" என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா என்றால் போதாது. எல்லாச் சாதியைச் சேர்ந்த மக்களும் தங்களை ஒருவரோடு

ஒருவர் உடன் பிறப்புகளாகக் கொண்டு பழகிட வேண்டும். தீண்டாமையை ஒழித்திட வேண்டும்.

பெரிய சாதிக்காரர்கள் வாழ்கின்ற பகுதிகளில் தாழ்த்தப் பட்ட சாதிக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் தோளிலே துண்டுகூட போட்டுக் கொள்ளாத நிலை மாற்றப் படவேண்டும்; காலிலே செருப்பு போடுவதற்கும் தடை என்றிருந்த நிலை மாறவேண்டும்; என்றெல்லாம் போராடி போராடிப் பெற்ற வெற்றியின் அடையாளமாகத்தான் இன்றைக்கு இந்த கல்லூரி முதல்வர் பேசும்போது குறிப் பிட்டாரே யாதவர் கல்லூரி என்ற பெயரில் இது அமைந் திருந்தாலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் இந்தக் கல்லூரியில் படிக் கிறார்கள் என்று சொன்னாரே அந்தப் பாகுபாடு இருக்கின்ற நிலையாகும்.

சாதிகள் ஒழிக்கப்பட நம்மிடத்திலே நல்ல உணர்வுகள் வெளிப்பட வேண்டும். ஒரு சாதி இன்னொரு சாதியோடு உறவு கொண்டிட வேண்டும் என்கிற நல்ல வழியை அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நடைமுறைப்படுத்தினர்கள். இப்படி சாதிகள் ஒன்றோ டொன்று இணைந்து 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்பட்டாக வேண்டும். அதுவே நம்முடைய குறிக்கோள்.

ஒன்றே குலம் வேண்டும், அதுவே எங்கள் குறிக்கோள் என்று கூறுகிறாயே, அப்படிக் கூறும் நீ வகுப்புரிமை வேண்டும் என்று கேட்பதிலிருந்து வகுப்புகள் இருந்திட வேண்டுமென்று கூறுகிறாயா என்று நீங்கள் கேட்டிடக்கூடும். இங்கேதான் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஒன்றே குலம் என்பதே நம்முடைய குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடைகிறவரை இருக்கிற வகுப்புகளுக்குரிய உரிமைகள் குறைக்கப்படக்கூடாது. இதுதான் நம்முடைய குறிக்கோள்.

தந்தை பெரியார் அவர்கள் கோயில்களே கூடாது என்ற குறிக்கோள் கொண்டவர். அந்த குறிக்கோளுடைய தந்தை பெரியார் கோயிலிலே அர்ச்சனை செய்கிறவர்கள் எல்லா சாதிகளையும் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அய்யராகவும் இருக்கலாம், அரிசன சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். அதற்கோர் சட்டம் தேவை என்று நாம் ஆட்சியிலிருந்த போது குரல் கொடுத்தார். அந்தக் குரலை நாங்கள் சட்டமாக ஆக்கினேம். ஆனல் உச்ச நீதிமன்றத்தில் சில சனுதனிகள் தொடுத்த போரின் காரணமாகத்தான் நாங்கள் உருவாக்கிய சட்டம் முடமாக்கப்பட்டு இன்னும் எழுந்து நடமாட முடியாமல் இருக்கின்றது. அரசியல் சட்டத்திற்கு எத்தனையோ திருத்தங்கள். ஆனல் இந்த சட்டம் நிறைவேற திருத்தம் கொண்டு வரப்படவில்லை. திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று குரல் கொடுத்த தந்தை பெரியார் மறைந்து விட்டார்.

அவர் மறைந்த நேரத்தில் சொன்னேன் அனைத்து சாதி மக்களும் ஆலயங்களிலே அர்ச்சகர்களாக ஆக வேண்டும் என்று போர்க் கொடி உயர்த்தினர் பெரியார். அதற்கென இயற்றப்பட்ட சட்டம் உச்ச நீதி மன்றத்தில் முடமாக்கப்பட்டு விட்டது. ஆகவே தந்தை பெரியார் இதயத்தில் குத்தப்பட்டிருக்கிற முள்ளை எடுக்காமலேயே அவரைப் புதைக்கிறோம் என்று வேதனையோடு நான் குறிப்பிட்டேன். அந்த முள் வேறு எதுவும் அல்ல. 'ஆண்டவனைப் பூஜிக்கிற அத்தனை பேரும் அர்ச்சனை செய்யும் உரிமை படைத்தவர்களாக இருக்க வேண்டும். யார் யார் அர்ச்சனை செய்யும் தகுதியைப் பெற்று விடுகிறார்களோ, பயிற்சியின் மூலம் தேர்ச்சியைப் பெறுகிறார்களோ அவர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—கள்ளராக, மறவராக, யாதவராக இருந்தாலும், அவர்கள் அர்ச்சகர்களாக ஆகலாம்' என்று பெரியார் கூறினர் என்றால், அதற்கு என்ன பொருள்? கோயில் வேண்டும் என்று அர்த்தம் அல்ல.

'கோயில் கூடாது என்பது குறிக்கோளாக இருந்தாலும், கோயில் என்பது இருக்கும் வரை அங்கே அர்ச்சனை செய்கிற உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும்' என்பதுதான் அவருடைய உரிமை முழக்கம். இப்படிக் கொள்கைக்கும் உரிமைக்கும் வித்தியாசம் தெரியாத சில பேர் தங்களையும் குழப்பிக் கொண்டு, மக்களையும் குழப்பிக் கொண்டிருக் கிறார்கள். கொள்கை என்பது வேறு. அந்தக் கொள்கையை நிறைவேற்ற நடத்துகின்ற பயணத்திலே நமக்கென்று உரிமைகள் இருக்க வேண்டும்.

ஒன்றே குலம் என்பது நம்முடைய குறிக்கோள். நாம் உயிரோடு இருக்கிறோமோ இல்லையோ—இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு பிறகு, ஐம்பது நூறுண்டுகளுக்குப் பிறகு யாதவர், முதலியார், பிள்ளை என்று சாதிப் பெயர் களே இல்லாத நிலை ஏற்படக்கூடும். அப்படி ஏற்படுகிற வரையில் இருக்கின்ற உரிமைகளை நாம் இழந்துவிடக் கூடாது.

அதற்காகத்தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட சமுதா யத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம், இந்தச் சமுதாயத் தின் உரிமைகள் பறிக்கப்படுகின்றபோது பதறுகிறார்கள். பதைக்கிறார்கள், பரபரப்பு அடைகிறார்கள் துடிக்கிறார்கள், துவண்டு போகிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமா? வேண்டாமா என்பதை எதிர்காலத்தை உருவாக்க இருக் கின்ற மாணவக் கண்மணிகள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இந்தக் கல்லூரியில் 87 விழுக்காட்டுக்கு மேலானவர்கள் பிற்படுத்தப்பட்டோர் படிக்கிறார்கள் என்றால் 1928-ம் ஆண்டு நீதிக் கட்சி ஆதரவோடு அமைச்சர் பொறுப்பை வகித்து வந்த முத்தையா அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் காரணமாகத்தான் பிராமணர்கள்—பிராமணர் அல்லாதவர்கள் மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஏற்றவாறு கல்லூரிகளிலும் வேலைவாய்ப்புக் களிலும் இடம் பெறவும் வழி வகுத்தது.

நான் இதைச் சொல்வதால் இங்கே நான் ஜாதிப் பிரச்சினையைப் பேசுவதாகக் கருதக்கூடாது.

பிராமணர் சமுதாயம், பிராமணர் அல்லாதார் சமுதாயம் என்பதை வரலாற்றில் யாரும் மறைக்க முடியாத பகுதியாகும். பிராமண வரலாற்று ஆசிரியர்களே அதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் படித்து முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஆனல் பிராமணர் அல்லாதவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். படிப்பதே பாவம் என்று கருதிக் கொண்டு படிப்பறையின் தலைவாசலையே எண்ணிப் பார்க்காதவர்களாக இருக்கிறார்கள்.

மக்கள் தொகையில் மிக்க குறைவானோர் கல்வியறிவு படைத்தவர்களாகவும், அதிக எண்ணிக்கை படைத்தவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக தாழ்ந்த சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உரிமை பெறத்தான் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கொண்டு வரப்பட்டது.

1951-ம் ஆண்டு உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு அந்தச் சட்டம் முறியடிக்கப்பட்டது. அன்று இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் கம்யூனல் ஜி. ஓ எந்த அளவுக்கு மக்களுக்குத் தேவையானது என்பதை மற்றவர்களுக்கு அறிவுறுத்த அதை உயர்நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார்கள்.

உச்ச நீதிமன்றத்திலும் கம்யூனல் ஜி. ஓ. வின் கழுத்து நெறிக்கப்பட்டது. அதற்குப் பிறகு பண்டித நேரு அவர்களிடத்தில் தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணு—பெரியார் உயர்த்திய போர்க் கொடியைச் சுட்டிக் காட்டி பெருந் தலைவர் காமராசர் அவர்களும் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் தலைவர்களும் நேருவிடம் சொன்னர்கள். அவர்களே அதைப் பற்றித் தெளிவாக உணர்ந்து அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து அந்தத் திருத்தத்தை நேரு அவர்களே ஆதரித்துப் பேசி அந்தத் திருத்தத்தின் அடிப்

படையில் 51-ம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்லூரிகளில் சேருவதற்கான இட ஒதுக்கீடு 25 சதவிகிதம் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 15 சதவிகிதம் என்றும் மீதம் உள்ள 60 இடங்கள் எல்லா ஜாதிக்காரர்களும் போட்டியிடக் கூடிய இடங்கள் என்றும் முறைப் படுத்தப்பட்டது. அது ஒரு ஏற்பாடு என்றாலும் அதுகூட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இருந்தாலும் இதாவது கிடைத்ததே என்ற மன ஆறுதலோடு ஏற்றுக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு 71-ம் ஆண்டு முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டபோது சட்டப் பேரவையிலேயே சொன்னேன். பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களுக்காக என்னுடைய ஆட்சிக் காலத்தில் என்னுடைய வாழ்வையே பணயமாக வைத்து வாதாடுவேன்—போராடுவேன் என்று சொன்னேன். நானே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவன். எனவே அவர்களின் நலனைக் கவனிக்க என்னுடைய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து பாடுபடுவேன் என்று உறுதி அளித்தேன்.

பிறகு அதற்கென சட்டநாதன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சில பரிந்துரைகளைத் தந்தது. அந்தப் பரிந்துரைகளிலே ஒன்றுதான் 25 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று இருந்ததை மேலும் உயர்த்த வேண்டும் என்கிற பரிந்துரையாகும். 8 சதவிகிதம் உயர்த்த வேண்டும் என்றார்கள். 8 சதவிகிதத்தில் அதை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கே உயர்த்தி விட்டால் அது நன்றாக இராது என்று 8-ல் 6 சதவிகிதத்தை எடுத்துப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உயர்த்தி அதை 31 சதவிகிதம் என்றாக்கி, இரண்டு சதவிகிதத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கு உயர்த்தி அதை 18 சதவிகிதம் என்றாக்கி அதற்கு மேல் உயர்த்துவதற்கு இடம் இருக்கிறதா? என்று கேட்டு அரசியல் சட்டப்படி உயர்த்த இயலாது என்ற நிலைமை தெரிவிக்கப்பட்டதால் அது கைவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட — தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப் பட்டது போக மீதி உள்ள 51 சதவிகிதத்திலும் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தலாம் என்று கண்டு அதற்கு அரசியல் சட்டத் தில் எந்தவித இடையூறும் இல்லை என்பதைப் புரிந்து கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்சு அவருக்குத் தரப்பட்ட சட்ட ஆலோசகர்கள் கருத்துப்படி அவர் 51 சதவிகிதத்தில் எல்லா ஜாதியிலும் உள்ள ஏழைகளுக்கு 15 சதவிகிதம் என்று ஒதுக்கி இருக்கிறார். நான் இங்கே பொறுப்பில் இருந்திருந் தால தேவராஜ் அர்சைப் பின்பற்றி 51 சதவிகிதத்தில் 15 சதவிகிதத்தை எல்லா ஜாதியிலும் உள்ள ஏழைகளுக்கு ஒதுக்கி இருப்பேன்.

ஐயோ! நான் முதல்வராக இல்லையே என்ற கவலையால் நான் இதைச் சொல்லவில்லை. இந்தக் காரியத்தை உங்களுக்கு செய்யக்கூடிய இடத்தில் நான் இல்லையே என்ற வருத்தத்தில் சொல்லுகிறேன்.

15 சதவிகிதத்தை ஒதுக்கினர் யாருக்கு? பிராமண ஜாதியிலே உள்ள ஏழையானாலும், முதலியார், செட்டியார், மற்றும் உள்ள உயர்சாதிக்காரர் ஆனாலும் பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய வகுப்புக்களில் உள்ள எல்லா ஏழைகளுக்கும் கர்நாடகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிலைதான் இங்கேயும் பின்பற்றப்பட வேண்டுமே அல்லாமல் 'உழக்குக்குள்ளே கிழக்கு மேற்கு'ப் பார்ப்பதைப் போல் பிற்ப்படுத்தப்பட்ட ஜாதிக்குள்ளேயே ஏழை, பணக் காரன் என்று பார்த்துக் கொண்டிருப்பது நியாயமில்லை. தர்மம் அல்ல. எதிர்காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பெரிய இருள் கவிழ்ந்த நிலை ஏற்பட்டுவிடும் என்று நாம் எச்சரிக்கிறோம். எதிர்க் கட்சியின் சார்பிலே சொல்லுகின்ற காரணத்தால் ஏதோ வேண்டுமென்றே அரசுக்கு விரோத மாகச் சொல்லுகின்ற கருத்துக்கள் என்று எடுத்துக் கொள் ளாமல் அவைகளை மறுபரிசீலனை செய்யப் பொறுப்பிலே உள்ள வர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு முதல்வர் இருக்கிறார். உங்கள் நியாயமான கோரிக்கைகளைக் கேட்டுப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

கல்லூரி முதல்வர் நல்லெண்ணம் படைத்தவராக, தமிழ்க்குடி மகனாக இருக்கிற காரணத்தால் நிச்சயம் அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நிறைவேற்றும் ஆர்வம் படைத்தவராக இருப்பார். அதுதான் நிலை.

அதுபோலதான் பொறுப்பில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் எழுகின்ற கோரிக்கை எங்கிருந்து எழுகின்றது என்று பாராமல் 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற அந்தக் குறளின் அடிப்படையில் ஆராய்ந்து நீதி வழங்கத் தயாராக இருக்க வேண்டும்.

இன்று தமிழ்க்குடி மகனுக்கு ஏற்பட்டிருக்கிற நிலை என்ன? நான் கல்லூரி முதல்வரைச் சொல்லவில்லை. தமிழ்ச் சமுதாயத்தைச் சொல்லுகிறேன். எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற அச்சத்தோடு—கேள்விக் குறியோடு இருக்கிறார்கள். அவன் எடுத்து வைத்திருக்கிற ஒவ்வொரு அடியிலும் நெருஞ்சிமுள் குத்துகிறது. அடுத்த அடி வைத்தால் கருவேலமுள் குத்துகிறது. அதற்கு அடுத்த அடி வைத்தால் ஈட்டியோ, வேலோ, வாளோ குத்தும் என்கிற அளவுக்கு அவனுடைய எதிர்காலம் சிக்கலாகிக் கிடக்கிறது.

இதற்கு ஒரு மாற்றுத் தேவை. இதற்கோர் வழிபிறந்தாக வேண்டும். தமிழ்க்குடி மகன் காப்பாற்றப்பட வேண்டும் என்ற சூளுரையை மேற்கொள்ள வேண்டியது இன்றைய மாணவர்களாகிய உங்கள் கடமையாகும்.

இதை நான் பேசுகிற காரணத்தாலேயே யாதவர் கல்லூரிக்கு கருணாநிதி வந்தான் மாணவர்களைத் தூண்டி விடும் காரியத்தைச் செய்தான் என்று யாராவது சொல்வார்

களேயாலுல் நான் இங்கே ஆற்றும் உரை உங்களைத் தூண்டி விடுவதற்காக அல்ல. யாரையும் உணர்ச்சி வசப்பட்டுத் தகாத காரியங்களில் ஈடுபடச் செய்வதற்காக அல்ல. சிந்தித் தாலே போதும். மாணவர்கள் சிந்தித்தாலே மற்றவர்கள் செயல் படுவதற்குச் சமானமாகும். எனவே நீங்கள் சிந்தித் தால் போதும். செயல்பட நாங்கள் இருக்கிறோம்.

நீங்கள் சிந்திக்க மறந்து விடுவீர்களானுல், எதிர்காலம் எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர மறந்து விடுவீர் களானுல், நாம் படிக்கிறோம்—நம் குடும்பம் வாழுகிறது என்ற அந்த எண்ணத்தோடு உங்கள் நிலையை நிறுத்தி விடுவீர்களா னுல், நமக்குப் பிறகு நம்முடைய எதிர்காலச் சமுதாயம், நம்முடைய சந்ததியினர் என்ன ஆவார்கள் என்பதைப் பற்றிய எண்ணத்தை அறவே விட்டு விட்டோம் என்ற பழிக்கு ஆளாவோம்.

5—8—79 அன்று மதுரை யாதவர் கல்லூரியில் ஆற்றிய உரை.

மாணவர்களும் அரசியலும்

கிறித்துவக் கல்லூரி வள்ளுவர் மன்றத்தின் சார்பில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வருகின்ற வள்ளுவர் விழாவின் நிறைவு நாளாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இங்கு ஒவ்வொரு நாளும் இயல், இசை, கூத்து என்ற வகையில் முத்தமிழின் பெருமையை விளக்குகின்ற நிலையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு எனக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியிலேகூட என்னுடைய அருமை நண்பர் குமரி அனந்தன் அவர்கள் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றதாக அறிந்தேன்.

இந்த விழாவின் மூலம் மாணவ உடன்பிறப்புக்களுக்கு நான் ஒன்று எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன் மாணவர்கள் என்று பொதுவாகக் குறிப்பிடுகிறேன் கிறித்துவக் கல்லூரி மாணவர்களை மாத்திரம் சுட்டிக் காட்டுவதாகக் கருதத் தேவையில்லை.

மாணவர்கள் தங்களுடைய மாணவப் பருவத்தில் அரசியலைக் கற்றிருந்தாலும் கற்க வேண்டியவைகளை எல்லாம் கசடறக் கற்றுத் தேர்ந்து, அதற்குப் பிறகுதான் இந்த நாட்டிற்கு ஆற்ற வேண்டிய அரசியல் பணிகளுக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் படிப்பில்

கவனம் செலுத்திட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவனுக இருந்து கொண்டும் இவன் இதைத்தானே சொல்கிறான் என்று மாணவர்கள் யாரும் தயவுசெய்து கருதிக்கொள்ளா தீர்கள்.

எந்தவொரு கல்லூரியானாலும், பல்கலைக் கழகமானாலும் கல்விக் கூடமானாலும் அங்கேயெல்லாம் தயாரிக்கப்படுகின்ற போர்வாள்கள்—உருவாக்கப்படுகின்ற ஈட்டி முனைகள்—வடித்தெடுக்கப்படுகின்ற வேல்கள் அவைகள் முழுமையாக-கூர்மையாக வடித்தெடுக்கப்படாத நேரத்தில்—அவை எந்தக் கட்சிக்காரர்களுக்குக் கிடைத்தாலும் அவை சரியான போர்க் கருவிகளாக இருக்கமாட்டா.

எனவே கூர் ஏற்றப்பட்டவர்களாக—நல்ல முறையில் வடித்தெடுக்கப்பட்டவர்களாக — செம்மைப் படுத்தப்பட்டவர்களாக மாணவர்கள்—அவர்களுக்கு என்று எத்தனையோ கொள்கைகள் உள்ளத்தில் இருந்தாலும் இன்ன கட்சியைச் சேர்ந்தவர்களாக நாம் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இதயத்தில் இருந்தாலும் அவைகளையெல்லாம் மாணவப் பருவம் கடந்த பிறகு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அளவில் தங்களை அவர்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளைத்தான் இங்கே நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

ஏனென்றால் சிலர் ஐயத்தோடும், அச்சத்தோடும் வெளியே இருக்கக்கூடும். வெளியே என்றால் இந்தக் கூடத்திற்கு வெளியே இருப்பவர்களை அல்ல; (கைதட்டல்) நான் சொல்வது யாரை என்பது உங்களுக்கே தெரியும்.

நான் இந்தக் கல்லூரிக்கு வந்துவிட்ட காரணத்தினாலே இங்குள்ள மாணவர்களை எல்லாம் தூண்டிவிட்டுப் போய் விடுவேனே, என்கிற ஐயமும், அச்சமும் நான் இப்படிப் பேசினாலும்கூட கருணாநிதி கிறித்துவக் கல்லூரிக்குச் சென்று மாணவர்களை எல்லாம் தூண்டிவிட்டு வந்தான் என்று சொல்லுகிறவர்கள் நாட்டிலே இருப்பதை இன்றைக்கு

நீங்கள் காண்கிறீர்கள். எனவே அதற்குப் பயந்தல்ல, இன்று நேற்றல்ல பேரறிஞர் அண்ணு அவர்கள் மாணவர்களுக்காகச் சொன்ன கருத்தினை நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டு இருப்பவன் நான். கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் பயிலுகின்ற மாணவர்கள் நாற்றங்காலிலே இருக்கின்ற பயிர்கள். நாற்றங்காலில் நீங்கள் செழித்து வளருங்கள். அதற்குப் பின் நாற்றங்கால் பருவம் கடந்த பிறகுதான் உங்களை எல்லாம் வயல்களில் எடுத்து நடவேண்டும். எனவே கலாசாலைகளில், கல்லூரிகளில், கல்வி பயிலுகின்ற மாணவர்கள் நாற்றங்காலில் இருக்கிற பயிருக்குச் சமமானவர்கள் என்று அண்ணு சொன்னதை நான் நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டுதான் இந்தக் கருத்தை உங்களிடத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

நாட்டில் பல அரசுகள் வரலாம், மாறலாம். இங்கே வரவேற்றுப் பேசிய நண்பர்கூட,இதற்கு முன்பு இரண்டொரு முறை கருணுநிதி இந்த மண்டபத்திற்கு வந்து பேசினர். கடைசியாக வந்தபோதுகூட முதல்வராக வந்து பேசினர். இன்றைக்கு எதிர்க் கட்சியினுடைய தலைவராக வந்து இருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

முதல்வராக வந்தபோதும் இந்த மண்டபத்திலே இருந்த மாணவர்களையும் ஆசிரியர் பெருமக்களையும் சந்தித்த நேரத்திலே அதே மனேநிலைதான். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவனுக வந்த நேரத்திலும் அதே மனேநிலைதான். திரைப் படப் பாடல்கூட கேட்டு இருப்பீர்கள்! 'அன்று வந்ததும் இதே நிலா! இன்று வந்ததும் அதே நிலா!' அதே நிலையில் தான் அன்றைக்கும் இருக்கிறேன்; இன்றைக்கும் இருக்கிறேன். முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் ஒன்று; எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தால் ஒன்று என்கின்ற இரண்டு நிலைமைகளைக் கொண்டவனல்ல நான்.

இங்கு உரையாற்றிய நண்பர்கள் எல்லாம் மையப் படுத்திச் சொன்னர்களே, அந்தத் தமிழ் உணர்வு, நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே இல்லா விட்டாலும் என்னுடைய குருதியோடு கலந்து மணம் கமழ்ந்து கொண்டு இருக்கின்ற உணர்வு என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுற்திக் கொள்கின்றேன்.

மாணவப் பருவத்திலே அரசியலிலே முழுக்க முழுக்க ஈடுபட்டு விடாதீர்கள் என்று சொல்கிற நான் என்னைப் பொறுத்தவரை மாணவப் பருவத்திலேதான் அரசியலில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

திருவாரூர் உயர்நிலைப் பள்ளியிலே படிக்கிற நேரத்திலே நான் அரசியல்வாதியாக மாறினேன். நான் எஸ்.எஸ்.எல் சி. தேர்வு எழுதுவதாக வீட்டிலே சொல்லிவிட்டு தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப் பயணம் செய்த பெரியாரோடு கிளம்பி விட்டேன்; ஒரு வார காலம் பெரியாரோடு சுற்றுப் பயணம் செய்துவிட்டு வீட்டிலே கேட்டபொழுது தேர்வு நன்முக எழுதி இருக்கிறேன் என்று சொன்னேன்.

நீங்கள் எண்ணலாம்; இப்படி எல்லாம் நாமும் செய்தால் முதலமைச்சராகி விடலாம் என்று; ஆனல் இவை எல்லாம் விதி விலக்குகள்.

விதிவிலக்குகள் வழி காட்டிகளாகமாட்டா. விதிவிலக்கு வேறு; வழிகாட்டி வேறு.

படிக்காத மேதையாகத்தான் இருந்தார் பெருந்தலைவர் காமராஜர்; எனவே நாமும் படிக்காமல் இருந்தால் பெருந் தலைவர்களாக ஆகிவிடமுடியாது. எனவே விதிவிலக்குகள் வேறு; வழிகாட்டிகள் வேறு. விதிவிலக்குகளை வழிகாட்டி களாக நீங்கள் தயவுசெய்து எடுத்துக் கொள்ளக் கூடாது.

அப்படி எடுத்துக் கொண்டால் நம்முடைய வாழ்வை மாத்திரமல்ல நம்முடைய எதிர்கால சந்ததிகளுடைய வாழ் வையும் நாம் பாழாக்கி விடுகிறோம். சமுதாயத்தினுடைய எதிர்காலத்தை இருளடையச் செய்கிறோம்.

நமக்கு இருக்கின்ற வேலைகள் ஏராளம், ஏராளம். மகாத்மா காந்தியடிகள் மாணவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடலாம்; நாடு மீட்கும் பணியில் ஈடுபடலாம். எனவே மாணவர்களே வாரீர் என்று அழைத்தார்.

மாணவர்கள் ஈடுபடக்கூடிய போராட்டம் கல்லூரிகளில் அவர்களுடைய கோரிக்கைக்காக நடத்துகின்ற அமைதி வழிப் போராட்டங்களைத் தவிர, அவர்கள் ஈடுபட்டுத்தான் தீர வேண்டும் என்ற நிலையிலே தவிர்க்க முடியாத போராட்டங்கள் உலகத்திலே எந்த நாட்டிலும் இரண்டுதான் இருக்க முடியும்.

ஒன்று அவர்களுடைய மண்ணை மீட்கின்ற போராட்டம்; அல்லது மண்ணை யாரும் அடிமை கொள்ளாமல் பாதுகாக்கின்ற போராட்டம்.

இரண்டு, கண்ணுக்கு நிகரான மொழியைக் காக்கின்ற போராட்டம். இந்த இரண்டு போராட்டத்திலும் மாணவர்கள் தவிர்க்க முடியாதவர்கள். ஆனால், நான் இதைச் சொல்கிற காரணத்தால் வருகிற 25, 26 தேதிய போராட்டத்திற்காக உங்களை ஜாடையாக நான் அழைக்கிறேன் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஏனென்றால் நாம் இப்போது போராட்டத்தைத் தொடங்கவில்லை. நம்முடைய மனக் குறையை தமிழ் மக்களுடைய மனக்குறையை உரியவர்களுக்குக் காட்டிக் கொள்ள அந்த நாட்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

ஜனவரி 26-ஆம் நாள் குடியரசு நாள். அரசியல் அமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டு அது பிரகடனப்படுத்தப் பட்ட நாள் குடியரசு நாள்.

விடுதலை நாள் வேறு; குடியரசு நாள் வேறு; இந்த இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாத சிலர் நாட்டில் இருக்கிறார்கள்; அது வேறு.

ஜனவரி 26, குடியரசு நாளை நாம் துக்க நாளாக அறிவிக்கிறோமா என்றால் இல்லை. 1965-ம் ஆண்டு அண்ணா அவர்கள்

குடியரசு நாளை, துக்க நாள் என்று அறிவித்தார். அதற்கு முன்பு நேரு அவர்கள் காலத்தில் மேற்கு வங்கத்தில் முதல்வராக அப்போது இருந்த டாக்டர் பி. சி. ராய், இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வீரர், காங்கிரஸ் தியாகி, முதலமைச்சராகவே இருந்து கொண்டு, மேற்கு வங்கத்தில் ஜனவரி 26 குடியரசு நாளை துக்க நாள் என்று அரசு ரீதியிலே பிரகடனப் படுத்தினர்.

ஆனால், இப்போது வருகிற ஜனவரி 26. குடியரசு நாளை நாங்கள் துக்க தினம் என்று சொல்லவில்லை. ஆனால் குடியரசு நாளில் நம்முடைய துக்கத்தை வெளியே சொல்கிறோம்; அவ்வளவுதான்.

இந்த வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி நம்முடைய துக்கத்தை வெளிக்காட்டிக் கொள்வது கிளர்ச்சியாகாது; ஆரவாரம் ஆகாது; ஆர்ப்பாட்டம் ஆகாது.

யாரோ சிலர் சொன்னதால்—பத்திரிகைகளில் எழுதியதாகக் கூட நான் கேள்விப்பட்டேன்.

மத்திய சர்க்காருக்கும், இங்கேயிருக்க மாநில சர்க்காருக்கும் இடையில் மோதலை உண்டுபண்ணவும், ஜனவரி 26-ம் தேதியன்று பிறமொழி ஆதிக்கம் கூடாது. தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்பதற்காக ஊர்வலம் நடத்த அனுமதித்தால் மத்திய அரசுக்கு, இங்கே இருக்கிற மாநில அரசின் மீது கோபம் ஏற்பட்டு—மாநில அரசை மத்திய அரசு கலைத்துவிடும். அதற்காக கருணாநிதி மொழியின் பெயரால் இந்தச் சூழ்ச்சியைச் செய்கிறான் என்று சிலர் யூகித்துச் சொல்வதாக நான் கேள்விப்பட்டேன்.

அப்படி குறிப்பாக ஜனவரி 26-ஆம் தேதி தி. மு. க. நடத்துகிற கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்காக இங்கேயுள்ள மாநில அரசைக் கலைக்க மத்திய அரசு

மூன்வருமேயானுல்—அதை எதிர்த்து இங்குள்ள மாநில அரசுக்கு ஆதாரவாக தோள் கொடுக்கின்ற முதல் ஆளாக கருணநிதி இருப்பான் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இவைகளை யெல்லாம் நான் பேசக் காரணம் மொழி பற்றிப் பேசுகிற தொடர்பில் அந்த மொழிக்குக் தொடர் பான சில விஷயங்களைப் பற்றி பேச வேண்டியதால் இதைப் பேசினேனே அல்லாமல் வேறல்ல.

12—1—79 அன்று தாம்பரம் கிறுஸ்துவக் கல்லூரி வள்ளுவர் விழாவில் ஆற்றிய உரை.

'நாடும்' ஜனநாயகமும்!
'நானும்' சர்வாதிகாரமும்!!

பும்புகார் கலைக்கல்லூரியினுடைய மாணவர் பேரவையினுடைய சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென பல நேரங்களிலே என்னை வலியுறுத்தி வருவதற்கு எனக்கு பெரு விருப்பம் இருந்தாலும்கூட தவிர்க்கவொண்ணுத சூழ்நிலைகள் காரணமாக வர இயலாமல் போயிற்று. இன்று வருவதற்கு ஏற்ற உடல்நிலை இல்லாமல், நேற்று மாலை இன்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திவைப்பது என்கின்ற முடிவினை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, எப்படியும் வந்து உங்களைச் சந்தித்து விட்டுப்போக வேண்டும் என்ற முனைப்போடு நான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்.

நான் காலையில் சட்டப் பேரவையில் ஆளுநர் உரையின் மீது நடைபெறுகின்ற விவாதத்திற்கு கடைசி நாள் என்று சொல்லப்படுகிறது.

அதிலே எதிர்கட்சித் தலைவர் என்கின்ற வகையில் நான் பேசிய பிறகு ஆளும் தரப்பிலிருந்து பதில் சொல்ல வேண்டும்.

எனவே இன்று மாலைக்குள்ளாக நான் சென்னை சென்றால் தான் நாளைக் காலை பேரவை நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள இயலும். அதற்கு உடல்நிலை இடம் தருமா? என்று ஐயுறு கின்ற நிலைமையிலேதான் நான் இங்கே நின்று கொண்டிருக் கின்றேன்.

மாயவரத்தில் நடைபெற்ற ஒரு மணவிழா நிகழ்ச்சியில் ஐந்து நிமிடம்கூட என்னால் பேச இயலவில்லை. இங்கு மாணவர் தலைவர். ஒரு மணி நேரம் நான் இங்கே பேச வேண்டும் என்று குறிப்பிட்டார். ஏன் குறிப்பிடமாட்டார்? உடல்நிலைக் கோளாறு அவருக்கு அல்லவே? எனக்கு அல்லவா?

எனவே, என்னுடைய உடல் நிலையையும் கடந்த ஆர்வப் பெருக்குதான் அவர் அவ்வாறு நான் இங்கே என்னுடைய கடமையை ஆற்றிட வேண்டும் என்று சொல்லத் தூண்டியது என்றால் அது மிகையாகாது.

பூம்புகார் எனக்குப் புதிய இடம் அல்ல; பூம்புகார் அடிக்கடி நான் வராத இடமும் அல்ல. இந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில் இது தமிழகத்திலே ஒரு தலைசிறந்த கல்லூரியாகத் திகழவேண்டும் என்பதுடன் இந்தியத் திருநாட்டிலேயே ஒரு எடுத்துக்காட்டான கல்லூரியாக இடம் பெற வேண்டும் என்பதிலே எனக்குத் தணியாத ஆசை.

அதை நிறைவேற்றுவதற்கு—தொடர்ச்சியாகப் பணி யாற்றுவதற்கு இயலாமல் இடையிலே தொய்வு ஏற்பட்டு விட்டிருந்தாலும். அந்த தொய்வு நீங்கித் தொடர்ந்து பணி யாற்றுகின்ற நிலை—என்னுடைய ஆசை—பூம்புகார் கல்லூரி யிலே நிறைவேறுகிற நிலை நிச்சயமாக ஏற்படும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்தப் பேரவை நிகழ்ச்சியில் முன்னேற்றக்கழக மாண வர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணவர்

களும், ஜனதா கட்சியைச் சேர்ந்த மாணவர்களும், வேறு சில மாணவர்களும் எனக்கு மாலை அணிவித்து தங்களுடைய மகிழ்ச்சியை ாட்சிச் சார்பற்ற முறையிலே தெரிவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனல் மாணவர் பேரவையினுடைய தலைவர், நிர்வாகி களுடைய தேர்தலைப் பொறுத்து, தமிழ்நாட்டில் அரசியல் உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பே, நீங்கள் இந்தக் கல்லூரி யிலே உடன்பாடு செய்து கொண்டவர்கள். அந்த வகையிலே எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந் திருப்பதனை நான் நன்கு அறிவேன்.

மாணவப் பருவத்தில், உங்களுடைய உள்ளத்நிலே எழுகின்ற அந்த ஆர்வக் கனல் அரசியல் ரீதியாகக் கொழுந்து விட்டு எரிவதை நீங்கள் காணுகின்றீர்கள்.

பூம்புகார் உருவாக்கப்பட்ட பிறகு, இங்கு எழுநிலை மாடமும், கலைக் கூடமும், இலஞ்சி மன்றமும், பாவை மண்டபமும், இன்னேரன்ன நம்முடைய வரலாற்று, நடன அரங்குகளும், இலக்கிய குறிப்புகளும் இந்தப் பகுதியில் அமைக்கப்பெற்று நம்முடைய சரித்திர நாயகர்கள், இலக்கியச் சித்தர்கள் இவர்களுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் பல்வேறு புராண நாயகர்கள் எல்லாம் இங்கு அமைக்கப் பெற்று அதைத் தொடர்ந்து கலனுகாமல் காப்பாற்றப்பட வேண்டும். ஆட்சிகள் மாறலாம். ஆனல் ஆட்சிக்கு வருகின்றவர்களது ஆர்வம் மாறுது — என்ற நம்பிக்கையோடுதான் இவைகள் எல்லாம் உருவாக்கப் பட்டன.

ஆனல் இன்று அவைகள், சரியான முறையிலே பேணிக் காக்கப் படுகின்றனவா என்று எண்ணினுல், நமக்கு விடு கின்ற பெருமூச்சுதான் அதற்குப் பதிலாக அமைகிறது.

வருகின்ற வழியிலே, ஏற்கெனவே அமைக்கப்பட்ட கரிகால் சோழனுடைய தோரண வாயில்களானுலும், வேறு பல தோரண வாயில்களானுலும் இவைகள் எல்லாம் கலனுகா

வண்ணம் அழிந்து எழில் குறைந்து காணப்படுகின்ற காட்சியை நான் கண்டேன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல், இங்கே இப்படி பராமரிப்புக்கள், கலனுக உள்ளவை களை ஒழுங்குப்படுத்த வேண்டும். சீர்ப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணம் இந்தப் பகுதியிலே ஏற்படாமல் போயிற்றே, அதைப் போலத்தான் கலனுகிக் கிடக்கின்ற தமிழகத்தையும் சீர்படுத்த வேண்டும் என்கின்ற — எண்ணம் — ஏற்படாமல் ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

அவைகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் — அவைகளை வலுப்படுத்த வேண்டும் — வளர்க்க வேண்டும் — அந்தப் பராமரிப்புகள் ஒழுங்காகப் பேணப்பட வேண்டும் என்ற ஆசை நான் இங்கு வருகின்ற நேரத்திலும் சரி, வராமல் சென்னையில் இருந்து எண்ணுகிற நேரத்திலும் சரி — எனக்கு ஏற்படுவது உண்டு.

தேர்தல் நேரத்திலே நான் பூம்புகாரிலுள்ள அண்ணு மாளிகையில் தங்கும் வீடுதியில், ஓரிரவு தங்கிய பொழுது பூம்புகார் பகுதி எவ்வாறு இருக்கிறது என்று சுற்றிப் பார்த்த நேரத்தில் மழை பொழிந்தால்தான் அங்கே புல்லே கூட பசுமையாக இருக்கும் — இல்லாவிட்டால், புல்லுக்குக் கூட தண்ணீர் ஊற்ற யாரும் இருந்திட வில்லை.

பூம்புகார் என்பதை மறந்து விடுகிறார்கள்; அது கருணு நிதியால் அமைக்கப்பட்டது என்கின்ற எண்ணமே வருகின்ற காரணத்தால், அவர் அமைத்தது, அவருடைய காலத்திற் குள்ளாகவே அழிந்து போகட்டுமே என்று எண்ணுகிற காரணத்தால், அவைகளுக்கு நடக்க வேண்டிய நல்ல காரியங் கள் நடக்காமலே போய்விடுகின்றன.

அரசியலாகட்டும், சமுதாயத் துறையிலாகட்டும், இலக் கியத் துறையிலாகட்டும், ஒரு நாட்டை வளப்படுத்துகின்ற செயல்களை தனி மனிதனை வைத்துக் கணக்கிடாமல்,

சமுதாயத்தினுடைய மற்ற தன்மைகளை வைத்துக் கணக்கிட வேண்டும்.

தனி மனிதர்களைப் பழிவாங்குவது தனி மனிதர்களைத் தூற்றிப் பேசுவது, தனி மனிதர்களை சரித்திரத்தில், வரலாற்றில் இல்லாமல் அழித்துவிடுவது என்று எண்ணுகின்ற நிலை, யாராக இருந்தாலும், அவர் எவ்வளவு பெரிய வீராதி வீரர்களாக வெற்றித் திருவுருவங்களாக இருந்தாலும், அவர்களால், நீண்ட நாளைக்கு தங்களுடைய ஆணவத்தை நாட்டில் நிலைநாட்ட முடியாது என்பதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுக்கள் நீங்கள் படிக்கின்ற சரித்திரங்களிலேகூட சந்தித் திருப்பீர்கள்.

நான் ஏதோ அரசியல் நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுவதாக நீங்கள் நினைத்திடக் கூடாது. நீங்கள் படித்த சரித்திரங்களைத்தான் நான் சுட்டிக் காட்டுகின்றேன்.

எனவே, தான் என்கிற ஆணவமும், நான் என்கின்ற விலங்கும் பட்டொழிந்து போய் 'நாம்' என்கின்ற அந்தப் பரந்த மனப்பான்மை நமக்கெல்லாம் உண்டாக வேண்டும்.

அந்த 'நாம்' என்கின்ற பின்னணியில்தான் நம்முடைய மொழியின் வளர்ச்சியும், நம்முடைய இனத்தின் வளர்ச்சியும், நம்முடைய நாட்டின் வளர்ச்சியும் நம்முடைய மக்களின் முன்னேற்றமும் அடங்கிக் கிடக்கின்றது.

'நாம்' என்பதை விட்டு 'நான்' என்று சொன்னால் அகந்தைதான் மிஞ்சும். அதற்காக 'நான்' என்ற சொல்லையே அகராதியிலிருந்து எடுத்து விடுவோமா என்று கேட்டால் நான் அத்தகைய அறிவுரையை உங்களுக்குச் சொல்லத் தயாராக இல்லை.

'நான்' என்பது சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் ஒரு சொல்லாக இருக்க வேண்டும். நான் இன்று காலையிலே வந்தேன் என்று சொல்லும்போது 'நான்' பயன் படுத்தப்படலாம். 'நான்தான் இவைகளை எல்லாம் செய்தேன்'

என்று சொல்லுகிற நேரத்தில் 'நான்' என்பதற்கு பதிலாக 'நாம்தான் இவைகளை எல்லாம் செய்தோம்' என்று சொன்னால் அகந்தை மறைந்து, அங்கே அடக்கம் தலைதூக்குகிறது.

எனவே, தலைதூக்க வேண்டிய அகந்தை மறைந்துவிடுகிறது; மறைந்து கிடக்கின்ற அடக்கம் தலைதூக்குகிறது. 'நான்' மறைந்து, 'நாம்' உருவாகின்ற நேரத்தில்!

நான் — என்பதை, ஒன்றைச் சுட்டிச் சொல்லத்தான் பயன்படுத்த வேண்டுமே அல்லாமல் 'நான் இப்பொழுது பேசுகிறேன்' என்று சொல்லலாம்; 'நாம் இப்பொழுது பேசுகிறோம்' என்று சொன்னால் இங்கு கூச்சல்தான் மிச்சப்படும். 'நான் இப்பொழுது பேசுகிறேன்' என்று சொல்லப்படுகிற நேரத்தில் சுட்டிச் சொல்லப்பட்ட ஒரு சொல்.

ஆனால், இந்தக் கல்லூரியை, மற்ற அனைவரும் புகழ்கின்ற அளவுக்குச் செய்திட வேண்டும் என்று ஒரு முடிவெடுத்தால் அதை 'நாம்' தான் செய்திட வேண்டும்.

இங்கே முதல்வர் அவர்கள் தலைமையுரை ஆற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள்; இந்தக் கல்லூரி கட்டப்படுவதற்கு அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செங்கல்லும், மாணவர்களால் எடுத்து வைக்கப்பட்டது என்பதையும், அந்தச் செங்கல்லைப் பதிப்பதற்கு வைக்கப்பட்ட சிமெண்ட், ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டது என்பதையும் அவர் எடுத்துச் சொன்ன போது அங்கேதான் 'நாம்' என்பது அழகுற, தலை நிமிர்ந்து, சிறப்புடன் நற்மையெல்லாம் பார்த்து மகிழ்ச்சியடைகின்றது.

எனவே அந்த 'நாம்' என்ற உணர்வு நமக்கெல்லாம் ஏற்பட்டாக வேண்டும். 'நான்' என்ற ஆணவம் மறைந்ததாக வேண்டும். 'நாம்' என்ற நிலை இருந்தால்தான் அந்த 'நாமாலே' ஒரு 'நான்' அழிந்து விட்டால்கூட 'நாம்' மிஞ்சப்படும். அதுதான் ஜனநாயகம்.

'நாம்' என்பது ஜனநாயகம்; 'நான்' என்பது சர்வாதி காரம்; யதேச்சாதிகாரம். அந்த 'நாம்' வேண்டுமென்பதற் காகத் தான் 'நாம்' பாடுபட்டோம். 'நாம்' வெற்றி பெற் றோம். 'நாம்' தொடர்ந்து வெற்றிகளைப் பெறுவோம். அந்த வெற்றிகளுக்கு நீங்கள் முன்னுதாராணமாகத் திகழுகின்றீர் கள். நீண்ட நேரம் உங்களோடு இருக்க வேண்டும்; பேச வேண்டும் என்ற ஆசை. வராமலே போனுல் எவ்வளவு பெரிய சாபம் கொடுப்பீர்கள் என்பது தெரியும். அதனுல் தான் நான் இங்கே பேச வரவில்லை! உங்களைப் பார்க்க வந்தேன். பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருக் கிறது. இருந்தாலும், விரைவிலே வருகிறேன். மீண்டும் இந்தக் கல்லூரிக்கு வருவேன்; கோரிக்கைகளை வைக்கலாம் என்று எண்ணுகிறீர்கள்.

இப்பொழுது கோரிக்கைகளை வைத்தால், நிறைவேற்றக் கூடிய இடத்திலே இருக்கிறேனு என்ற ஐயப்பாட்டால், எழுப்பாமல் இருந்து விட்டீர்கள். விரைவிலே எழுப்புவீர் கள். எழுப்புகின்ற காலத்தில், அவைகளை நிறைவேற்றுகின்ற இடத்திலே நாமெல்லாம் இருந்தோமேயானுல், அவைகளை நிறைவேற்றுவோம்; இந்தக் கல்லூரி, இந்தியத் திருநாட்டி லேயே ஓங்கு புகழ் எய்திடப் பணியாற்றுவேன்; இது பல்கலைக் கழகமாகக் கூட ஆகிட வேண்டும் என்று ஆசைப் படுகின்றேன்.

கல்லூரியாக இருந்து கொண்டே பல்கலைக் கழகம் பெறு கின்ற பெயரை, பெறக் கூடிய அளவுக்கு, இங்குள்ள மாண வர்கள் இங்கே பரஸ்பரம் நடந்து காட்டுகிறூர்கள் என்பதை நான் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீங்கள் இங்கே கடைப் பிடிக்கின்ற அமைதியும், கட்டுப் பாடும், கண்ணியமும் தொடர்ந்து வலுவடைக என்று வாழ்த்துரைத்து விடைபெறுகிறேன்.

11—2—80 அன்று பூம்புகார் கலைக் கல்லூரியில் ஆற்றிய உரை.

"பழைய வரலாறும் புதிய கலாமுறையும்"

இந்தக் கல்லூரி மாணவர்களாகிய உங்கள் அனைவரையும் காண்பதிலும், உங்களுடைய தமிழ் மன்றத்தைத் துவக்கி வைத்துப் பல கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மன்றத் தொடக்க விழாவிற்கு வருகை தந்த என்னை வள்ளுவரே (மன்றச் செயலாளர்) வரவேற்று இருப்பது பெருமகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

வள்ளுவர்—என்னை மாத்திரம் அல்ல, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தை மாத்திரம் அல்ல, உலகெங்கும் பரவியிருக்கின்ற மானிட இனத்தையும் வரவேற்று அறநெறியில் வாழ்ந்திடவும், அன்பு நெறி தழைத்திடவும், அரசு நெறி ஒழுங்காக நிறைவேறிடவும் ஆயிரமாயிரம் கருத்துக்களை அள்ளி அள்ளி வழங்கி இருக்கின்றார்.

வள்ளுவருடைய வரவேற்புரை அனைத்தையும் உலக மாந்தர் செவிமடுத்து சிந்தையிலே தேக்கி அதனைக் கடைப் பிடித்து வருகின்றார்களா என்பது கேள்விக்குரிய ஒன்று

யினும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற அடிப்படை ஆர்வத்தோடுதான் இப்படிப்பட்ட தமிழ் மன்றங்கள் தொடங்கப்பட வேண்டும்; தொடங்கப்படுகின்றன என்பதை நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவருக்கென பேரவைகள் அமைந்திருந்த போதிலும் தமிழ் மன்றங்கள் அமைவது சாலச் சிறப்புடைய ஒன்றாகும்.

ஏனென்றால் தமிழர் தங்களுடைய மொழியைப் பற்றி பிறர் சொல்லித் தெரிந்து "ஓ! இவ்வளவு பெருமையுடைய மொழியா நம்முடைய மொழி" என்று வியப்புற்று, அப்படியானால் இதைக் காப்பாற்றத்தான் வேண்டும் என்கின்ற உறுதி ஏற்படுவதற்கு இடைக்காலத்திலே எவ்வளவு ஆண்டுகள் தேவைப்பட்டன.

அந்த உறுதியை தமிழ் மகனுடைய உள்ளத்திலே உருவாக்கப் பாடுபட்ட பெரியவர்கள் — சான்றோர்கள் — அறிஞர்கள் — அவர்கள் ஆற்றியிருக்கின்ற பணிகள் கொஞ்ச நஞ்சமல்ல. எழுத்தால் — பேச்சால் — வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளால் — இலக்கிய ஆராய்ச்சிகளால் அவர்கள் தந்து விட்டுப்போன கருவூலங்களைப் பயன்படுத்தி நம்முடைய மொழியின் சிறப்பை நம்மவரே உணர்ந்து கொள்ளவும், உணர்ந்ததைச் செயல்படுத்தவும் மொழி காக்க, அந்த மொழி காக்கும் இனம் காக்க, இன்றைக்குத் தமிழ் இளைஞர்கள் ஆங்காங்கு குரல் எழுப்புகின்ற காட்சியை என்னால் காண முடிகிறது.

தமிழனுக்கு என்று ஒரு வரலாறு உண்டு. ஆனால் அந்த வரலாறு ஒழுங்காக எழுதப்பட்டது கிடையாது. தமிழனுடைய வரலாறு இந்திய நாட்டு வரலாற்றோடு இணைந்து கிடக்கின்ற வரலாறு. அப்படி இணைவது சரியா, அல்லவா? என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட நான் இப்போது வரவும் இல்லை. அந்த ஆராய்ச்சியின் முடிவிற்கு — அந்த முடிவால்

ஏற்படுகின்ற விளைவிற்கு உங்களை அழைத்திடும் நோக்கமும் எனக்கு இல்லை.

ஆனால், ஒரு நாட்டு வரலாறு எழுதப்படுகின்ற நேரத்தில் அது எப்படி எழுதப்பட வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களை நாம் புறக்கணித்துவிட முடியாது. இந்திய நாட்டு வரலாற்றை எப்படி எழுத வேண்டும் என்ற கருத்தினை மனோன்மணீயம் எழுதிய சுந்தரம்பிள்ளை அவர்கள் எடுத்துக் காட்டினர்கள்.

அவர்கள் கோடிட்டுக் காட்டியது மாத்திரம் பெருமைக் குரிய ஒன்றல்ல; கவனிக்கத் தக்க ஒன்றல்ல. அவர் கோடிட்டுக் காட்டியதை இந்திய நாட்டினுடைய ஆதிகால வரலாற்றைத் தொடங்கி எழுதிய வின்சென்ட் ஸ்மித் — என்ற வரலாற்றுப் பேராசிரியர் அவரது நூலின் முன்னுரையி லேயே குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்தியா என்ற இந்த நாட்டுக்கு வரலாறு எழுதுவது என்பது ஒரு தீபகற்பத்தின் வரலாற்றினுடைய தொடக்க மாகத்தான் இருக்கவேண்டும். தீபகற்பம் என்றால், மூன்று கடலும் சூழ்ந்து இருக்கின்ற இந்துமகா சமுத்திரம், அரபிக் கடலும் வங்கக் கடலும் சூழ்ந்து இருக்கின்ற மூன்று புறங் களும் கடலால் சூழப்பட்ட தீபகற்பமாக இருக்கின்ற தென்னகம் — அந்தத் தென்னகத்திலே கிருஷ்ணநதி பள்ளத் தாக்கிலே இருந்தோ, அல்லது காவிரி நதி பள்ளத்தாக்கிலே இருந்தோ அல்லது வைகைக் கரையிலே இருந்தோதான் இந்திய நாட்டினுடைய வரலாறு எழுதப்பட வேண்டும். அப்படி எழுதப்படுகின்ற வரலாறுதான் இந்தியாவினுடைய உண்மையான வரலாறுக இருக்க முடியும் என்று பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கின்றேன் என்று வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்ட் ஸ்மித் தன்னுடைய நூலின் முன்னுரையிலே குறிப்பிட்டு இருந்தபோதிலும் அதற்கான காலம் கனியாத காரணத்தினால் நான் இப்பொழுது இருக்

கின்ற வழக்கத்துப்படியே கங்கை ஆற்றில் இருந்து இந்திய நாட்டினுடைய வரலாற்றைத் தொடங்குகிறேன் என்ற வேதனையோடு வரலாற்றுப் பேராசியர் வின்சென்ட் ஸ்மித் தன்னுடைய முன்னுரையை முடிக்கிறார்.

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் ஒரு நாட்டினுடைய வரலாறு தொடங்கப்பட வேண்டிய இடத்திலே தொடங்கப்படவில்லை. அதற்குக் காரணம் நாமேதான்.

நாமேதான் என்றால் நம்முடைய முன்னோர்களே கூட அதற்குக் காரணம்

இந்திய நாட்டினுடைய வரலாற்றுப் புருஷன்யார் என்று கேட்டால் அலெக்ஸாண்டர் என்று சொல்வார்கள். அலெக்ஸாண்டர் இந்தியத் திருநாட்டின் மீது படையெடுத்து வந்தபோது அவனுடன் வீரர்களை அழைத்து வந்தான். அமைச்சர்களை அழைத்து வந்தான். தளபதிகளை அழைத்து வந்தான். இவர்களுக்கு எல்லாம் மேலாக எண்ணற்ற வரலாற்றுப் பேராசிரியர்களை அழைத்து வந்தான். வரலாற்றுப் பேராசிரியர்களை தன்னுடைய படைகளோடு அழைத்து வந்த காரணத்தால் அவன் இந்தியத் திருநாட்டிலே கிடைத்த வெற்றிகளை எல்லாம் குறித்து வரலாறு எழுதக் கூடிய வாய்ப்பு அவனுக்கும் கிடைத்தது; வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும் கிடைத்தது.

அலெக்ஸாண்டரையே புறம் காணக்கூடிய வீராதி வீரர்கள் மாமன்னர்கள் இந்தியாவிலே இருந்தார்கள் என்றாலும் கூட அதுவும் குறிப்பாக தமிழகத்திலே வாழ்ந்தார்கள் என்றாலும்கூட அவர்கள் போர்க்களத்திற்கு அழைத்துப் போனதெல்லாம் வரலாற்றுப் பேராசிரியர்களை அல்ல.

பேராசிரியர் நண்பர் பழனியப்பன் (வரலாற்றுப் பேராசிரியர்) கோபித்துக் கொள்ளகூடாது. புலவர்களைத்தான் அழைத்துக் கொண்டு போனார்கள். புலவர்கள் அவர்களோடு ஏன் போகிறார்கள் என்றால் யார் அந்த நேரத்திலே அரசு

கட்டில்களிலே வீற்றிருக்கிறார்களோ அவர்களைப் பாடிப்பாடி புகழ்ந்து பழக்கப்பட்டவர்களேதான் புலவர்களே தவிர, அவர்கள் — உண்மை வரலாறுகளை உலகுக் காட்டக் கூடியவர்கள் அல்ல; அல்லது இருப்பதை மிகைப் படுத்தக் கூடியவர்கள்.

வரலாற்றுப் பேராசிரியர்கள் வேறு. ஒருவர் வரலாற்றிலே தவறு இழைக்கக்கூடும். ஆனல் புலவர்களைப் போல மிகைப்படுத்தி எதையும் எழுத மாட்டார்கள். இருந்த போதிலும் நமக்கெனக் கிடைத்திருக்கின்ற வரலாற்றுக் கருவூலம், நாம் வரலாறு எழுதுவது என்றுல் எடுத்துக் கொள்வதற்கான ஆக்கப் பொருள், அதற்கென அமைந்துள்ள அடித்தளம், அதற்கென இருக்கின்ற மூலப் பொருள் இலங்கியங்கள் தான்.

புலவர்கள் யாத்துத் தந்திருக்கின்ற அகம் — புறம் போன்ற பல்வேறு தமிழ் இலக்கியங்கள்தான் நமக்கு வரலாற்றுச் சான்றுகளுக்கு இன்றைய தினம் துணைபுரியக் கூடியவைகளாக அமைந்திருக்கின்றன. எனவே, நான் அவைகளைப் பற்றி அதிகமாக நகைச்சுவையாகப் பேசி, புலவர்களைப் பற்றி நான் விமர்சனம் செய்து, இருக்கிற வரலாற்றையும் இழந்து விட விரும்பவில்லை.

ஏதோ இருக்கிறது; அவைகளை வைத்துக்கொண்டு, அந்த இலக்கியங்களை வைத்துக்கொண்டு, நம்முடைய வரலாற்றை நாம் கவனித்தாக வேண்டும் என்பதற்காகத் தான் குறிப்பிடுகின்றேன்.

நான் தென்னகம் என்றும், கிருஷ்ணு நதிப் பள்ளத்தாகிலே இருந்து என்றும், காவிரிப் படுகையிலே இருந்து என்றும், வைகை நதிப் படுகையிலே இருந்து என்றும் குறிப்பிட்டேனே. அந்தப் பகுதிகள்தான் திராவிடர்கள் வாழ்ந்த பகுதியாகும். திராவிடர்கள் என்று நான் கூறுவதால் அரசியல் அடிப்படையில் இதைக் கூறுகிறேன் என்று நிச்சயமாக அழகப்பா கல்லூரியில் கூடியிருக்கிற நீங்கள் யாரும்

அத்தகைய தவறுன கருத்துக்கு உங்களை ஆளாக்கிக் கொள்ள மாட்டீர்கள்.

ஏனென்றால், திராவிடர்கள் தங்களுக்கு என ஒரு தனி நாகரிகத்தை படைத்தவர்கள். ஆரியர்கள் தங்களுக்கு என ஒரு தனி நாகரிகத்தைப் படைத்தவர்கள்.

மங்கோலியர்கள், அதைப் போலவே யூதர்கள் என்று இப்படிப் பல்வேறு இனங்கள் உலகத்திலே உண்டு. அப்படிப் பட்ட இனப் பிரிவுகளிலே ஒன்றுதான் திராவிட இனப் பிரிவாகும்.

திராவிட இனப்பிரிவு அதற்குரிய பெருமை — இவை களை என்னை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு கற்றுக் கொடுத்தது யார்? தந்தை பெரியார் அவர்களா என்றால், பேரறிஞர் அண்ணு தந்தை பெரியார் அவர்களு டைய பல்கலைக் கழகத்திலே பயின்றார் என்றாலும், அவர் பயின்ற பச்சையப்பன் கல்லூரியில் பேரறிஞர் அண்ணு அவர் களுக்கு திராவிட வரலாற்றைக் கற்றுக் கொடுத்தவர் பி. ஆர். சேஷ அய்யங்கார் என்கின்ற ஒரு வரலாற்றுப் பேராசிரியர்.

இனிமேல் நான் திராவிடர் என்று சொன்னால் உங்களிலே யாருக்கும் சந்தேகம் வராது என்றே கருதுகிறேன். ஏனென் றால் பேரறிஞர் அண்ணு அவர்களுடைய வரலாற்று பேராசி ரியர் பெயரே பி. ஆர். சேஷ அய்யங்கார். அவர் எழுதிய நூலுக்குப் பெயர் 'திரவிடியன் இந்தியா' என்பதாகும். திரவிடியன் இந்தியா என்ற நூலின் மூலம் திராவிடர்களின் வரலாற்றை ஓங்கு புகழ் எய்தி இருந்த வரலாற்றை எழுதிக் காட்டிய பேரறிஞர் அண்ணு போன்றவர்களை தங்களுடைய இளமைக் காலத்திலேயே திராவிட உணர்வு கொள்ளச் செய்கின்ற அளவிற்கு பயிற்சியளித்த பி. ஆர். சேஷ அய்யங்கார் அவர்களை நாம் மறந்திட முடியாது.

ஏனென்றால் அவர் அண்ணுவுக்கு வரலாற்றுப் பேராசிரிய ராக இருந்தார். அதைப் போலவே திராவிடர் சமுதாயத்

தைப் பற்றி — திராவிடர் கலாச்சாரத்தைப் பற்றி —திராவிட மொழிகளைப் பற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்து வெளியிட்டவர்கள், அப்படி வெளியிடப்பட்ட பல்வேறு நூல்கள் அழிந்து போகாமல் நம்முடைய பழம் பெரும் பனுவல்களைக் காப்பாற்றியவர்கள் எல்லாம் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அதிலும் குறிப்பாக திராவிட வித்தியா பூஷண மகா மகோஉபாத்தியாய உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் குறிப்பிடத் தக்கவர் என்பதையும் எடுத்துச் சொன்னுல் நான் திராவிட ஆரிய என்கின்ற கலாச்சாரங்களைப் பற்றி இங்கு வேறுபடுத்திச் சொல்லுகின்ற நேரத்தில் யாருக்கும் என்மீது என்னை அழைத்தவர்கள் மீது தவருன எண்ணம் ஏற்படாது என்று நான் திடமாக நம்புகிறேன்.

இந்தியாவிலேதான் முதன் முதலாக தமிழ்நாட்டிலே கடற்படையை வைத்து இருந்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் எல்லாம் கணிக்கிறூர்கள். வடக்கே உள்ள மாமன்னர்கள் பெரிய சாம்ராஜ்ஜிய அதிபதிகள் — பல மண்டலங்களைக் கட்டி ஆண்ட மகுடபதிகள். இவர்கள் எல்லாம் வடக்கே இருந்து இருக்கிறூர்கள் என்றூலும், அந்த நிலப்பரப்பைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகிறூர்கள். அவர்களுடைய நிலப்பரப்பு கடல் வரையிலே நீண்டு இருந்தது. நீண்டு இருந்த நிலப்பரப்பிற்கு சொந்தக்காரன் என்கின்ற அளவிற்குத்தான் வடபுலத்திலே இருந்த மன்னர்கள் சித்தரிக்கப்பட்டார்கள் — போற்றப்பட்டார்கள் — புகழப்பட்டார்கள்.

ஆனல் அந்தக் காலத்திலே தங்களுக்கென தனிக் கப்பற் படைகள் வைத்துக் கொண்டிருந்த அரசர்களாக தென்னுட்டு அரசர்கள், தமிழ்நாட்டு அரசர்கள் விளங்கினர்கள் என்பதை எண்ணுகிற நேரத்தில், எவ்வளவு பெருமைக்குரிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பதை எண்ணியெண்ணி இறும்பூது எய்தலாம்.

சரித்திரக் குறிப்புகள் சிலவற்றைப் படித்துப் பார்த்தால் நம்முடைய தமிழ்நாட்டுப் பொருட்கள் ரோமாபுரி போன்ற

இடங்களில், கிரேக்கம் போன்ற இடங்களில் எந்த அளவிற்குப் புகழ்பெற்று எந்த அளவிற்கு அவைகள் பாதுகாக்கப்பட்டு போற்றப்பட்டு வாங்கிச் செல்லப்பட்டன என்ற உண்மைகளை எல்லாம் அறிந்து கொள்ளலாம்.

வரலாற்றுக் குறிப்புக் காட்டுகிறது; ரோமானியச் சக்கரவர்த்தி கையஸ்கிளாடியஸ் என்ற மாபெரும் வீரன். அந்தக் கையஸ்கிளாடியசினுடைய மனைவி மகாராணி லோலா என்கின்ற ரோமாபுரிச் சக்கரவர்த்தினுடைய மகாராணி தன்னுடைய கழுத்திலே அணிந்திருந்த முத்துக்களுடைய மதிப்பு மாத்திரம் 3 லட்சம் ஸ்டர்லிங் என்று சரித்திர ஆசிரியர்கள் கணக்கிடுகின்றார்கள்.

மூன்று லட்சம் ஸ்டர்லிங் என்றால் இன்றைய மதிப்பிற்கு 60 லட்சம் ரூபாய். 60 லட்சம் மதிப்புள்ள முத்துக்களை லோலா என்கின்ற ரோமாபுரியினுடைய மகாராணி ஒருத்தி அணிந்திருந்தாள் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் ஆகா— 60 லட்சம் ரூபாய்க்கு அவைகளை அணிந்திருந்தாள் என்கின்ற திகைப்பும் வியப்பும் நமக்கு வருவதற்காக அல்ல அவளுடைய அழகுக்கு அழகு செய்த அந்த அணிகலன் நம்முடைய தமிழ் நாட்டுக் கடலிலே இருந்து கிடைத்த முத்தல்வா என்று எண்ணுகிற நேரத்தில் நமக்குள் இனம் தெரியாத மகிழ்ச்சி இன்பத்துள்ளல் ஏற்படுகிறது.

ஆண்டனி — கிளியோபத்ராவினுடைய வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் கிளியோபத்ரா ஆண்டனியினிடத்தில் ஒரு நேரத்தில் ஊடல் கொண்டாள்.

கிளியோபத்ரா வரலாற்றைப்பற்றி விரிவாக உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆண்டனியும் அவளும் அகமகிழ்ந்து மஞ்சத்தில் கூடிக் கிடந்த நேரத்தில் ஊடல் வருகிறது.

ஊடல்தான் பிறகு ஏற்படுகின்ற கூடலுக்கு இன்பம் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

ஊடல் உருவானவுடன் ஏற்பட்ட கோபத்தில் கிளியோபத்ரா தன்னுடைய காதில் அணிந்திருந்த காதணியை எடுத்துப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த சாராயத்தில் போட்டு விடுகிறாளாம். அப்படிப் போடப்பட்ட அந்தக் காதணி கரைந்து போய்விடுகிறதாம், அந்த சாராயத்தில்.

என்பதாயிரம் ஸ்டர்லிங் பெறுமானமுள்ள தமிழ்நாட்டு முத்தாம் அந்தக் காதணி! இன்னொரு காதணியையும் கழற்றி அந்த மதுவில் போட்டுவிட முனைகின்ற நேரத்தில் ஆண்டனி அவளைத் தடுத்துவிடுகிறார் காரணத்தால் இன்னொரு முத்து தப்பியது என்று ஆண்டனி கிளியோபத்ராவைப் பற்றி சொல்லுகின்றவர்கள் சிறப்பித்துக் கூறுகின்றார்கள்.

இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் தமிழ்நாட்டு முத்துக்கும் — மயிலுக்கும் — மிளகுக்கும், யானைத் தந்தத்துக்கும், அரிசிக்கும், இன்ன பிற பொருட்களுக்கும் வெளிநாட்டுக்காரர்கள் இருகரம் நீட்டிக் காத்துக் கொண்டிருந்த காலம்.

தமிழகத்திலிருந்து நாவாய்கள் — தமிழகத்திலிருந்து கப்பல்கள் என்றைக்கு வரும் வரும் என்று தமிழ்நாட்டுக் கலங்களுக்காக ஏங்கிக் கிடந்த வெளி நாடுகளை நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டு நிலைமையையும் எண்ணிப் பார்க்கிறோம். இந்த நிலை மாறி, தமிழகமெங்கும் வளம்கொழிக்கும் பூமிதான் — நான் தனித் தமிழகத்தைச் சொல்லவில்லை. இந்தியத் திருநாட்டில் இணைந்துள்ள தமிழகத்தைத்தான் சொல்கிறேன். இந்தியத் திருநாட்டில் ஒரு மாநிலமாக இருக்கிற தமிழகத்தைத்தான் சொல்கிறேன்.

இந்த மாநிலம் மாற்றாரும் பாராட்டுகிற மாநிலமாக மாறிட வேண்டும்; அதற்கு யார் துணை நின்றிட வேண்டும்?

அதற்கான வித்தினை யார் ஊன்றுவது?

பல பெரியார்கள் அதற்காகப் பாடுபட்டு மறைந்து விட்டோர்கள். அவர்கள் மறைந்துவிட்ட இடங்கள் இருக்கின்றன. அவர்கள் மறைந்துவிட்ட இடங்களெல்லாம் நாம் கால் வைத்து ஏறுவதற்குரிய இடங்களாக அமைத்துவிட்டு படிக்கற்களாக அமைத்துவிட்டு அவர்கள் மறைந்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால் — தென்னை சிறு கன்றில் இருந்து வளர்ந்து, அது தருகின்ற ஒவ்வொரு மட்டையையும் மக்களுக்கென்று பயன்படுத்துகிறது. தென்னை மரமாக ஆன பிறகு பார்த்தால் அங்கே தெரிகின்ற வடுக்களெல்லாம் என்ன?

ஒவ்வொரு மட்டையும் இருந்த இடம், ஒவ்வொரு மட்டையையும் மக்களுக்காகத் தந்துவிட்டு வடுக்களே மாதிரம் மிச்சமாக வைத்திருக்கிறது.

அந்த வடுக்களேயும் மக்கள் பயன்படுத்தாமல் விடுகிறார்களா?

மனிதன் பயன்படுத்தாமல் விடுகிறானு? மக்களுக்காகப் பாடுபட்டு அதனால் ஏற்பட்ட அந்த வடுக்கள் இருக்கிறதே, அந்த வடுவின் மீது கால் வைத்து ஏறித்தான் தென்னை மரத்தில் இருக்கின்ற இளநீரையோ — தேங்காயையோ இன்றைக்கு மனிதன் பயன்படுத்திக் கொள்ள முனைகிறான்.

எனவே பெரியவர்கள் — அறிஞர்கள் — சான்றோர்கள் — புலவர் பெருமக்கள் — வரலாற்றுப் பேராசிரியர்கள் — மாமனிதர்கள் — வீரர்கள் — தியாகிகள் — இவர்களெல்லாம் கடந்த காலத்தில் இருந்து மறைந்தாலும் — எதிர்காலத்தில் உள்ளவர்கள் ஏறிச் செல்லத்தக்க, தென்னை மரத்தினுடைய வடுக்களாகத் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். அதில் ஏறிப் பயன் விளையக்கூடிய இளநீரை, பயன் விளையக் கூடிய முற்றிய தெங்கினை மக்களுக்கு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் யார்?

யார்? என்ற கேள்விக்கு எனக்குக் கிடைக்கின்ற விடை காட்சியாகத்தான் கிடைக்கிறது.

காட்சி என்றாலும் வேறு காட்சிக்கு சென்று விடாதீர்கள்.

நான் என் எதிரிலே அமர்ந்திருக்கின்ற இளைஞர் பட்டாளத்தைத்தான் பார்க்கிறேன். (பலத்த கைதட்டல்)

இளைய தலைமுறையினுடைய கையிலேதான் இந்த நாடு இருக்கிறது; இந்த நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது; இந்த மொழியின் பாதுகாப்பு இருக்கிறது என்பதை உணர்ந்தவன் நான். 1965-ம் ஆண்டு, ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுக் காலமாக நடைபெற்று வந்த மொழிப் போராட்டத்தினுடைய உச்சக் கட்டத்தில் இந்த நாட்டில் உள்ள இளைய தமிழன், எழுஞாயிறு போன்ற இளந் தமிழன் அன்றைக்கு ஆர்த்தெழுந்து 'பிற மொழி ஆதிக்கத்தில் இருந்து தமிழைக் காப்பேன்' என்கின்ற சூளுரைத்து கிளம்பி இருக்காவிட்டால் இன்றைக்கு நாமெல்லாம் இந்த முருகப்பா மண்டபத்தில் முறுவலோடு அமர்ந்து நம்முடைய மொழியைக் காப்பாற்றி விட்டோம் என்று மார்தட்டிக் கொள்ள முடியாது என்பதை யாரும் மறந்துவிட இயலாது. எனவே இளைய தலைமுறையின் கையில்தான் ஒரு மொழியின் பாதுகாப்பும்—ஒரு இனத்தின் பாதுகாப்பும்—ஒரு நாட்டின் பாதுகாப்பும்—ஏன் நாம் விரும்புகின்ற சமத்துவமானாலும்—சமதர்மமானாலும்—பொருளாதார ஏற்ற தாழ்வற்ற ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்பதிலும்—அரசியலில் விழிப் புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற தன்மையானாலும் இவைகளை எல்லாம் தரத்தக்க சக்தி வாய்ந்த பட்டாளம்தான் இளைஞர் பட்டாளம்.

எனவேதான் என்னை அழைத்து வந்தவர்களே! நான் உங்களையெல்லாம் அழைக்கிறேன்.

நான் ஒரு வள்ளுவரை அல்ல; உங்கள் அத்தனை பேரையும் வள்ளுவராகக் கருதி அழைக்கிறேன்.

எங்கனையெல்லாம் வள்ளுவராகக் கருதி அழைக்கிறாய் என்றால் நாங்கள் என்ன தாடி—மீசையோடு வரவேண்டுமா? நாங்கள் என்ன 1330 அருங்குறட்பாக்களையும் எழுதுகின்றவர்களாக வரவேண்டுமா என்று கேட்பீர்களேயானால் நான் எப்படி வந்திருக்கிறேன்?

தெரியவில்லையா உங்களுக்கு? 'கைவேல் களிற்றொடு போக்கி' வந்திருக்கிறேன்.

வள்ளுவன் குறிப்பிடுகின்றான்—வீரனுக்கு அழகு, "'கை வேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியாதகும்."

—என்று போர்க்களத்தில் யானையின்மேல் தன் கையில் இருந்த வேலை வீசிவிட, அந்த வேல் யானையின் மீது குத்திக்கொள்ள, வேல் குத்தப்பட்ட யானை வேறு பக்கம் ஓடிவிட—அந்த நேரத்தில் இன்னொரு எதிரி தன்னை நோக்கி வரும்பொழுது அவனைத் தாக்க வேல் இல்லையே—'கைவேலை களிற்றொடு போக்கிவிட்டோமே' என்று கவலைப்படுகிற வீரன் வேறு வழியில்லாமல் திகைக்கும்போது, அப்போது தான் தெரிகிறது. தன் மீது ஏற்கெனவே ஒரு வேல் குத்தி இருப்பது. அதைப் பிடுங்கி பகைவரைச் சந்தித்தான் என்று வள்ளுவர் சொன்னார்.

அந்தக் கைவேல் களிற்றொடு போக்கிய கருணாநிதிதான் உங்கள் முன்னால் இன்று நின்று கொண்டிருக்கிறான். (கைதட்டல்)

மெய்வேல் இருக்கிறது. எனவே 'மெய்வேல் உண்டு என்ற நம்பிக்கையோடுதான் இங்கு வந்தேன்.

நம்பிக்கையோடு நான் உள்ளே நுழைந்தபோது எனக்குக்கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்தது. நம்பிக்கையோடு வருகிற என்னுடைய கை தப்புமா என்கிற அளவுக்கு நீங்கள் என்னுடைய கையைக் குலுக்கினீர்கள்—இழுத்தீர்கள்—பற்பல இடங்களில் நகக் குறிகள் எல்லாம்கூட

உண்டு. அவ்வளவு அன்பை என்மீது பொழிந்து என்னை வரவேற்றிருக்கிறீர்கள்.

இளைஞர்களால் ஆகாதது எதுவுமில்லை. இதற்கு நான் புதிய சான்றுகளைத் தருவதைவிட பழைய சான்றுகளைத் தருவதேகூடப் பொருந்தும் என்று கருதுகிறேன்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளைஞன். கிண்கிணியணிந்து கையில் வேலெடுத்து அவன் போர்முனைக்குச் சென்ற பருவம் மிகமிகப் பாலப்பருவம்.

அவன் எதிர்க்க வேண்டிய மன்னர்கள் எழுவர். ஏழு மன்னர்களைக் களத்தில் சந்திக்க இவரால் ஆகுமா என்று நாட்டு மக்களெல்லாம் ஐயமுற—என்னுலும் ஆகும் என்று சொல்லிவிட்டு நான் இந்தப் போரிலே வென்று காட்டா விட்டால் "மாங்குடி மருதனர் என்னைப் பாடாதொழிக" என்றுன்.

ஒரு புலவர் ஒரு மன்னரைப் பாடுவது என்றுல் அவ்வளவு பெருமைக்குரிய காரியமாக இருந்தது. அந்தக் காலத்திலே தன்மானப் புலவர்கள் இருந்திருக்கிறூர்கள். எனவே அப்படிப்பட்ட புலவர்களால் பாடப்பட வேண்டிய பெருமை எனக்கில்லாமல் போகட்டும். நான் தோல்வி யடைந்து திரும்பினுல் புறமுதுகிட்டு வந்தால் என்று வஞ்சினம் கூறி சிறுவன் நெடுஞ்செழியன் ஏழு பேரைச் சந்தித்தான். அதன் காரணமாக 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்ற பட்டத்தைப் பெற்றுன். அவன் இளைஞன்தான்! இளமைப் பருவத்தில் தான்!

கரிகாற் பெருவளவத்தான் சிங்களம் சென்று—வென்று பன்னீராயிரம் சிங்களர்களைக் கைதிகளாகக் கொண்டு வந்து காவிரிக்கு அணை கட்டினுன். அது கரிகாலன் கட்டிய கல்லணை என்றெல்லாம் புகழ்ந்து பேசுகிறோம்.

திருமாவளவன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றிய இளமைக்கால கதையும் உண்டு.

அவன் சின்னஞ் சிறுவனாக இருந்தபோது நாடாளும் பொறுப்பை ஏற்க வேண்டியவனானான். அவனிடத்திலே முறையீடு செய்து கொள்ள இரு தரப்பார் வந்தனர். நீதி மன்றத்திலே அமர்ந்த அந்த இளைஞன் அளிக்கின்ற தீர்ப்பை இரு தரப்பாரும் ஏற்றுக் கொள்வார்களா? அவை போர்தான் அதை ஏற்பார்களாக என்ற சந்தேகத்தின் மீது இளைஞனான கரிகாற் பெருவளத்தான் தாடி வைத்துக் கொண்டு கொக்குபோல் வெண்மையான தாடியும், மீசையும் வைத்துக் கொண்டு நீதி மன்றத்திலே அமர்ந்து தீர்ப்பு வழங்கினான்.

இவ்வளவு வயதானவர் தீர்ப்பு வழங்குகிறாரே நல்ல தீர்ப்புதான் என்று அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு போனார்கள். அவர்கள் சென்ற பிறகு தாடி, மீசையைக் களைந்தான் கரிகாலன். காரணம் இளமைப் பருவத்திலே அப்படி அற்புதத்தைச் செய்து காட்டினான்.

வழங்கிய தீர்ப்பும் நல்ல தீர்ப்புதான். ஆனால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக முதுமைக் கோலம் பூண்டான். இளைஞனாக இருந்து முதுமைக்கோலம் பூண்டதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. இப்போது காலம்மாறி இருக்கிறது. ஆனால் அன்றைக்கு இளைஞனாக இருந்தவன் முதுமைக் கோலம் கொண்டாவது நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக கரிகாற் பெருவளத்தான் தன்னுடைய இளமைப் பருவத்திலே ஆற்றல் மிகு செயலை, அந்த நீதி வழங்கியதன் மூலமாக நிரூபித்துக் காட்டினான்.

எனக்குப் பிடித்தமான கருத்துள்ள கதையம்சம் கொண்ட பாரதத்தில் இருந்து உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் பாரதப் போரிலே அபிமன்யு நடத்திய போருக்கு இணையாக அர்ச்சுனன்கூட நடத்தவில்லை.

ஏனெனில் தன்னுடைய மிக இளமையான மனைவியை வீட்டில் விடுத்து—விடைபெற்று தாயிடத்தில் விடை பெற்று—தந்தையும் வேறு போர்க்களத்தில் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், தந்தையையும் காணச் சந்தர்ப்பம் இல்லாமல் போர்க்களம் புகுந்து, போரில் கையிழந்த போதும் நாக்கினுல், வாயால் வாளைக் கவ்விக்கொண்டு எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்கின்ற அளவுக்கு போரிட்டு இறுதியாக ஜெயப்பிரதன் என்கிற ஒரு துரோகியினுல் பின்னுலிருந்து குத்தப்பட்டு இறந்தான் வீர இளைஞனுக அபிமன்யு. அவனுடைய இளமைப் பிராயத்திலேயேதான், அந்த அற்புதத்தைச் செய்து காட்டினுன்.

பாரதப் போரில் யாருடைய சாகசத்தையும்விட அபிமன்யுவுடன் போரிட்ட சாகசம்தான் புகழப்படுகிறது.

அதைப் போலத்தான் இராமாயணத்தை எடுத்துக் கொண்டால் இராவணனுல்கூட — கும்பகர்ணனுல்கூட அல்லது வேறு பல தளநாயக்கர்களால் கூட நடத்திக் காட்ட முடியாத சாகசங்களை இராமனும்—இலக்குமணனும்—அனுமனும்—சுக்ரீவனும் அத்தனை பேரும் கதிகலங்கக்கூடிய அளவுக்கு, எதுவும் புரியாமல் திகைப்புறக் கூடிய அளவுக்கு, போரிட்டு அவர்களை ஓட ஓட விரட்டி இறுதியில் மாண்டு போனுனே இந்திரஜித், அவனும் இளைஞன்தான். அவனும் தன்னுடைய இளமைத் துடிப்பைப் போர்க் களத்திலே காட்டி ராமாயணப் போராட்டத்தை எப்படி பாரதப் போரில் அபிமன்யு போராடிய நாள் பிரசித்தி பெற்ற நாளோ—அதேபோல இந்திரஜித் போராடிய நாள்—புகழக்கூடிய நாள் என்கின்ற குறிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு அவன் போர் புரிந்து காட்டினுன்.

அபிமன்யுவினுடைய தந்தை அர்ச்சுனன் புகழ்பெற்ற வில்வீரன் காண்டீபன் என்கிற புகழைப் பெற்றது ஐம்பது வயதிற்கு மேலல்ல; அந்தப் புகழைப் பெற்றது அவன் துரோணரிடத்தில் மாணவராக இருந்தபோதுதான்.

அப்போது பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணரிடத்திலே மாணவர்களாக இருந்தபோது, அவர்களது பயிற்சி முடிந்து சோதனை செய்வதற்காக துரோணர் பாண்டவர்களையும், கௌரவர்களையும் அழைத்து ஒரு பெரிய மரத்தைக் காட்டி — அந்த மரத்தில் அமர்ந்திருந்த ஒரு கிளியைக் காட்டி — ஒவ்வொருவரையும் வில்லை வளைக்கச் சொல்லி வில்லை வளைத்து நின்ற துரியனைப் பார்த்து 'என்ன தெரிகிறது?' என்று கேட்க அவனும் மரம் தெரிகிறது. இலை தெரிகிறது. கிளை தெரிகிறது என்று வர்ணித்துக்கொண்டே செல்ல 'நீ வேண்டாம்' என்று கூறிவிட்டு துரோணர் எல்லா வீரர்களையும் பார்த்துக் கேட்க, ஒவ்வொருவரும் மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது, இலை தெரிகிறது என்று கூற அத்தனை பேரையும் ஒதுக்கிவிட்டு, இறுதியாக அர்ச்சுனனை அழைத்து "நீ பார் என்ன தெரிகிறது?" என்று கேட்க அர்ச்சுனன் "என்னுடைய வில்லில் பூட்டப்பட்டிருக்கின்ற அம்பின் நுனியும்— மரக்கிளையில் அமர்ந்திருக்கின்ற கிளியின் கழுத்தும்தான் தெரிகிறது" என்று சொன்னனும்.

உடனே அம்பை எடுத்தான்; கிளியின் கழுத்து, கீழே விழுந்தது என்று கதை முடிகிறது.

எனவே, குறிக்கோள் என்று ஒன்று இருக்க வேண்டுமேயானால் அந்தக் குறிக்கோளின் மேல்தான் முழுக் கவனமும் இருக்க வேண்டுமேயல்லாமல் அக்கம் பக்கம் கவனம் செல்லக் கூடாது என்பதை எடுத்துக்காட்டாகவும், அந்த எடுத்துக்காட்டிலே வெற்றி பெற்றவனுகவும் விளங்கினன் அர்ச்சுனன் என்றால், அது இளமைப் பிராயத்திலேதான்! கொஞ்சம் வாலிபனை பிறகு அக்கம் பக்கம் திரும்பினன்.

எந்தெந்தப் பக்கம் என்றெல்லாம் உங்களுக்குத் தெரியும். நான் அந்த அல்லி, பவழக்கொடி கதைக்கெல்லாம் செல்ல விரும்பவில்லை. ஆனாலும் இளமைக் காலத்திலே அர்ச்சுனன் புரிந்த அற்புதத்தைக் காட்டத்தான் இதைச் சொன்னேன்.

இராமனைப் பற்றி எனக்கும் கருத்து வேறுபாடு உண்டு, உங்களுக்கும் கருத்து வேறுபாடு உண்டு.

வால்மீகிக்கும் கம்பனுக்கும்கூட கருத்து வேறுபாடு உண்டு, இராமனைப் பற்றி. ஆனால் இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணந்தது இளமைப் பருவத்திலேதான். எனவே, இராமன் ஆர்வம் படைத்தது, ஆற்றல் படைத்தது இளம்பிராயத்திலேதான் அம்பேத்காரராகனாலும், ஆசியாவின் ஜோதி நேருவாகனாலும், தந்தை பெரியாராகனாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாகனாலும் இவர்களெல்லாம் தங்களுடைய இளமைப் பிராயத்திலேதான் — வாலிப வயதிலேதான் — பொதுத் தொண்டிலே இறங்கிச் சமுதாயச் சீர்திருத்தம் — பகுத்தறிவுப் போதனை — இந்திய நாட்டு விடுதலைக்கான போராட்டம், சமுதாயத்திலே அரசியல் விழிப்புணர்வு — இவைகளையெல்லாம் ஏற்படுத்திக் காட்டினார்கள்.

1949-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தைக் கண்டார். ஒரு இயக்கத்தைக் கண்டார். ஆனால், 1938ஆம் ஆண்டிலேயே தமிழ் மொழி காக்க வேண்டும் என்ற போராட்டத்திலே ஆறு மாத காலம் சிறை புகுந்தார்.

1909-லே பிறந்த அண்ணாவுக்கு 1938-ஆம் ஆண்டு வயது 29 தான். முப்பது வயதுகூட நிறையவில்லை. அந்த வயதிலேயே — பேரறிஞர் அண்ணா அவர்கள் — இளம் பிராயத்திலேயே தமிழ் காக்க மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டார்.

அவரைப் பின்பற்றித்தான் 1965-ஆம் ஆண்டு நடை பெற்ற மொழிப் புரட்சியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திலே மாணவன் ராஜேந்திரன் ஆனாலும், தீக்குளித்துத் தன் உயிரை மாய்த்துக் கொண்ட மாயவரம் மாணவன் சாரங்க பாணியாகனாலும், சென்னை சிவலிங்கமாகனாலும், அவர்களை யொட்டி மேலும் ஐந்து வீர இளைஞர்களாகனாலும் அவர்க

ளெல்லாம் தமிழ்த் தாயைக் காப்பாற்றத்தான், தமிழ் இனத்தைக் காப்பாற்றத்தான், தங்கள் உயிரைத் திரணமாக மதித்து அக்கினியிலே தங்களைக் குளிப்பாட்டிக் கொண்டார்கள்.

அதனுல் வயது முதிர்ந்தவர்களெல்லாம் விலக்கப்பட வேண்டுமென்பதல்ல. ஆனுல், இன்றைக்கு வயதிலே இளைஞர்களாக இருக்கின்றவர்களுடைய கையிலேதான் நாளைய நாடு இருக்கிறது. நாளையத் தமிழகம் இருக்கிறது. நாளைய இந்தியா இருக்கிறது என்கின்ற உயிலை எழுதி வைக்கின்ற காரியத்தைத்தான் பெரியோர்களெல்லாம் செய்தாக வேண்டும்.

இளைஞர்கள் இல்லாவிட்டால், இளைய தலைமுறை இல்லாவிட்டால், இந்த நாட்டுக்கு விமோசனம் இல்லை. விடிவுகாலம் இல்லை. இந்த நாடு வாழ வேண்டுமேயானுல், இந்த நாட்டு மக்கள் பெற்ற சுதந்திரத்தைச் செம்மையாகப் பேணிக் காப்பாற்ற வேண்டுமேயானுல், அது இளைஞர்களால் தான் முடியும்.

எனவேதான் இந்தத் தமிழ் மன்ற விழாவில் இளைஞர்களை அழைக்கின்றேன்.

எழுச்சியுகம் காண்பதற்கு எழுந்து வந்த காளைகாள்!
வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் வீரமிக்க குழந்தைகாள்!
வருக! ஈட்டியின் முனைகளே எழுங்கள்! தீட்டிய கூர்வாட்களை திட்டமிதோ! கட்டிய நாய்கள் அல்ல நாம் எட்டிய மட்டும் பாய்வதற்கு! தட்டிய மாத்திரத்தில் தருக்கர் கொட்டம் அடங்க வேண்டும்! பெரும் விருப்பமுள்ள வராம் பதவியில் பல பேர் — அவர் வேண்டாம்.
நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை!

என அழைத்து விடைபெறுகிறேன்.

31—8—80 அன்று காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரியில் ஆற்றிய உரை.

"தமிழ்நிலா" சொல்வளம்

புதுவைச் சட்டக் கல்லூரியில் முதல் தடவையாக உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்லவாய்ப்பினைப் பெற்று இந்த மாலை நேரத்திலே உங்களிடையே சில மணித்துளிகள் இருக்கின்ற அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிற வகையில் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்கள் முன்னுல் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்த மாணவர் பேரவையின் தலைவர் பாண்டியன் அவர்கள் வரவேற்புரையாற்றியபோது சட்டக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவதற்கான இடம் எவ்வளவு இன்றியமையாதது என்பது குறித்து விளக்கி அதைப் பெறுவதற்காகவும் இந்தப் பேரவையின் தொடக்க விழா இந்த வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் விவரித்து தன்னுடைய வேண்டுகோளை இந்த அரசின் முன்னுல் வைத்திருக்கிறார்.

அவர் 'வேண்டி, வேண்டி' கேட்டுக் கொண்டதைப் பார்த்தபோது — பாண்டியன் என்ற அவருடைய பெயரைக் கூட மாற்றி "வேண்டியன்" என்று கூடப் பெயர் வைக்கலாமா என்று தோன்றியது.

நீங்கள் ஒரு நல்ல தலைவரைத்தான் உங்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். "இதனை இதனுல் இவன் முடிக்கும் என்றுய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற வள்ளுவரின் குறளுக்கொப்ப நீங்கள் உங்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நல்ல நண்பர்களை உங்கள் நிர்வாகி களாகப் பெற்று, இந்தப் பேரவையை இன்று தொடங்குகிறீர்கள்.

இந்தத் தொடக்க விழாவில் இந்தக் கல்லூரியின் முதல்வர் என்னைப் பற்றிச் சில நல்ல வார்த்தைகளைக் கூறிய தற்காக நான் அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அவைகள் சம்பிரதாயத்திற்காகச் சொல்லப்பட்ட வார்த்தை களாக இருந்தாலும் — உளமாரச் சொல்லப்பட்ட வார்த்தை களாக இருந்தாலும் — நான் சம்பிரதாயத்திற்காக என்று இல்லாமல் உளமார என் நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் புதுவையிலே ஒரு அதிசயத்தைக் காண்கிறேன். அரசின் சார்பில் உள்ளவர்களை அழைக்கிற நேரத்தில், எதிர்க்கட்சிக்காரர்களையும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அழைக் கிறீர்கள். இது உள்ளபடியே ஒரு பாராட்டத்தக்க அதிசயம்தான்.

நான் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது என்னை நண்பர் சிவகுமார் இந்தக் கல்லூரிக்கு அழைத்ததாகவும் — அப்போது முதலமைச்சராக இருந்த காரணத்தால் ஆயிரம் பொறுப்புக்கள் இருந்தன. ஆகவே வரவில்லையென்றும், இப்போது வந்திருக்கிறார் என்றும் சொல்லும்போது முதலமைச்சராக இல்லாத காரணத்தால் தான் வந்தேன் என்று அவர் என்னை இடித்துச் சொன்னதாக நான் கருதிக்கொள்ளவில்லை. அப்போது பொறுப்பிலே இருக்கும்போது புறக்கணித்தாய்! இப்போது வந்து விட்டாய் பார்த்தாயா? என்று அவர் எண்ணிக்கொண்டு குறிப்பிட்டதாக நானும் எண்ணவில்லை; நீங்களும்

எண்ணத் தேவையில்லை. இருந்தாலும் உங்கள் மத்தியிலே சில கருத்துக்களை எடுத்துக்கூறுகிற வாய்ப்பினை அவரும், சட்டக் கல்லூரி மாணவர் பேரவையும் என்னை நாடி வந்து கேட்டு- அவர்களுடைய அன்புக் கட்டளைக்கு நானும் ஒப்புதல் தந்து, இந்த விழாவிலே பங்கு பெற்றிருக்கிறேன்.

இது புதுவையிலே இன்று நான் கலந்து கொள்கிற முதல் நிகழ்ச்சியாக இருந்திடவில்லையே என்ற ஆதங்கம் இங்கே தெரிவிக்கப்பட்டது. எது முதல் நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமோ அது இன்று புதுவையில் எனக்கு முதல் நிகழ்ச்சியாக இருந்தது என்பதை நான் அவருக்கும் உங்களுக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நான் இன்று உங்கள் முன்னுல்—முன்னுள் முதல் அமைச்சராக—தமிழகத்தின் இன்றைய தலையாய எதிர்க்கட்சியின் தலைவராக — இங்கே நண்பர்கள் எல்லாம் சிறப்பித்துக் கூறினர்களே—அதற்கு நான் உரியவனே அல்லவோ—அந்தச் சிறப்புகளைப் பாராட்டுக்களின் மூலம் பெற்றவனுக நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் அவர்கள் இந்தியாவிலே இருக்கிற— பல்வேறு துன்பங்களைத் தாங்கிப் பழக்கப்பட்ட இரண்டொரு தலைவர்களில் நானும் ஒருவன் என்று குறிப்பிட்டாரே அப்படிப்பட்ட துன்பங்களை தாங்குகிற சக்தியைப் படைத்தவனுக உங்கள் முன்னுல் நின்று கொண்டிருக்கிறேன் என்றுல் அந்தத் துணிவை - வலுவினை- நெஞ்சுரத்தை எனக்கு யார் தொடக்கக் காலத்தில் தந்தார்களோ - அந்தத் தந்தை பெரியார் அவர்களின் சிலையைத்தான் இன்று காலையிலே நான் முதல் நிகழ்ச்சியாக திறந்து வைத்துவிட்டு-அடுத்த நிகழ்ச்சியாக உங்கள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறேன்.

இதற்கு அடுத்தாற்போல் இன்னெரு கல்லூரி நிகழ்ச்சியும் — அதற்குப் பிறகு அரசின் சார்பில் நடைபெறுகிற பெரியார் — அண்ணு பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகளும் இருக்

கின்றன. எனவே நீண்ட நேரம் நான் இங்கே இருக்க வேண்டுமென்று நீங்களும் சொல்லமாட்டீர்கள்! விரும்பு வீர்கள்; ஆனல் சொல்லமாட்டீர்கள்! எனவே அடுத்தது ஒரு கல்லூரி நிகழ்ச்சிதான். என்னதான் அது கலைக் கல்லூரி— இது சட்டக் கல்லூரி என்று இருந்தாலும்—அதுவும் கல்லூரி என்ற உணர்வு உங்களுக்கு இருக்கும் என்ற காரணத்தால் நான் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ள என்னை விரைவில் அனுமதிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தாமதமாக நிகழ்ச்சிகளுக்குச் சென்று பழக்கப் பட்டவன் அல்ல நான். இருந்தாலும் தவிர்க்க முடியாத சூழல்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் நேர்ந்துவிடுவது உண்டு. நீங்கள் அவ்வாறு ஒரு நிலைமையை எனக்கு உருவாக்காமல் இந்த நிகழ்ச்சியை விரைவில் முடித்துக்கொண்டு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியில் முதல்வர் பேசுகிற நேரத்தில் இந்தக் கல் லூரியின் சிறப்பு அம்சங்கள் — மாணவர்களின் திறமை — அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் பற்றியெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னர்கள். நீங்கள், இந்த விழாவிலே காட்டு கின்ற அமைதியையும் ஆர்வத்தையும் காணும் நேரத்தில் அத்தகைய அதிக விழுக்காடு மதிப்பெண்களை நீங்கள் பெற்றதில் எந்தவித வியப்பும் இல்லை.

எந்த ஒரு மாணவனும் தன்னுடைய படிப்பில் அதிக கவனத்தைச் செலுத்தி — அப்படிப் படிப்பில் கவனம் செலுத்துகிற நேரத்திலே சமுதாயப் பிரச்னைகளிலே-நாட்டுப் பிரச்சினைகளிலே — அரசியல் பிரச்சினைகளிலே — நாட்டம் செலுத்தக்கூடாது என்று தடைபோடுகிறவன் அல்ல நான். அவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய அளவிற்கு தெரிந்து கொண்டு — அதே நேரத்திலே தாங்கள் எந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறீர்களோ அதில் முழு கவனத்தையும் செலுத்தி அதிலே முழுமையானவர்களாக வெளிவர வேண்டும் என்பதுதான் நாட்டிலே இருக்கிற எல்லாருடைய ஆவலாகவும் இருந்திட முடியும். உங்கள் பெற்றோர்களுக்கு

எந்த அளவிற்கு அந்த ஆவல் இருந்திடக் கூடுமோ — அந்த அளவு அவா நாட்டிலே இருக்கிற பெரியவர்களுக்கு — தலைவர்களுக்கு — எதிர்காலச் சமுதாயம் ஒளி மிகுந்ததாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்களுக்கு இருப்பது இயற்கை.

அதிலும் குறிப்பாக நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் பெத்தபெருமாள் சுட்டிக்காட்டியதைப் போல எதிர்கால தேசியச் சக்திகளாக விளங்க வேண்டியவர்கள்— இந்த நாட்டின் எதிர்காலத் தூதுவர்களாக - நாட்டின் பொறுப்பை ஏற்பவர்களாக விளங்க வேண்டியவர்கள்தான் என் முன்னுல் அமர்ந்திருக்கிற மாணவர்களாகிய நீங்கள். அதிலும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானுல் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

இந்திய நாட்டில் விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துப் படித்துப் பார்த்தால் அதன் ஒவ்வொரு அத்தியாயத்திலும் புரளுகிற பெயர்கள் சட்டம் பயின்ற மாணவர்கள்—பெரும் பெரும் வழக்கறிஞர்கள் இவர்கள் தங்களுடைய வாழ்வைக்கூடத் தூக்கியெறிந்து விட்டு இந்த மண்ணின் விடுதலைக்காகத் தங்களுடைய உயிரையே திரணமாக மதித்து தியாக வேள்வியிலே குதித்தார்கள் என்கிற பட்டியல் மிக நீளமாக இருக்கிறது.

சட்டக் கல்லூரியில் பயிலுகிற நேரத்தில் அரசியல் தட்பவெட்பங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது. அதனுல்தான் எதிர்கால நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க முடிகிறது. குறிப்பாக இன்று நாட்டில் இருக்கிற பல்வேறு பிரச்னைகள் நம்முடைய கவனத்தைக் கவராமல் இல்லை. பல இடங்களில் வன்முறை வெறியாட்டங்கள் நடைபெறுகின்றன. வகுப்புக் கலவரங்கள் நடைபெறுகின்றன. சாதிப் பூசல்களுக்கு இடம் அளிக்கப்பட்டு அதன் காரணமாகப் பல இடங்களில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். இவைகள் எல்லாம் வழக்குமன்றத்திற்கு வருகிற நேரத்தில் வழக்காடும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும்.

அதனுல் இவைகள் எல்லாம் பெருக வேண்டும் என்று எந்த வழக்கறிஞர்களும் எண்ணக் கூடாது. எண்ணவும் மாட்டீர்கள் — வழக்கறிஞர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் ஏதோ நீதி மன்றத்திற்குச் சென்று ஒரு குற்றவாளியைக் காப்பாற்றவோ — அல்லது குற்றம் சுமத்தப்பட்ட ஒருவன் மீது மேலும் பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி அவன் குற்றவாளி என்று நிரூபிக்கவோ மாத்திரம் அவர்கள் படிக்க வில்லை. இந்த நாட்டின் எதிர்காலத்திற்காக வாதிடக் கூடியவர்கள்தான் சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. படித்தவர்கள் எல்லாம் நாளை எந்த நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்ற நாட்டத்தோடு படிப்பதாக நான் எண்ண மாட்டேன்.

நீங்கள் சென்று வாதாட வேண்டிய நீதிமன்றம் இந்தியத் திருநாடாகவே இருக்கிறது!

இந்த இந்தியத் திருநாட்டிலே எதிர்காலத்திலே வாதி — பிரதிவாதி என்று பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் இருவரையும் நீங்கள் அளவிட்டுப் பார்க்கிற நேரத்தில், சாதி ஆணவம், மத வேறுபாடுகள், பணத்திமிர், நிலப் பிரபுக்களுடைய ஆதிக்கம், முதலாளிகளுடைய இரும்புக் கரங்கள், இவைகளையும் — இவைகளிலே வாடி உலர்ந்து கொண்டிருக்கிற — வயிற்றைப் பிடித்து பசி நோயால் கதறிக் கொண்டிருக்கின்ற — கண்ணீர் மல்க கை பிசைந்து நின்று கொண்டிருக்கின்ற பாட்டாளி வர்க்கத்தையும் — இந்த இரு பிரிவினரையும் நீங்கள் பிரித்துப் பார்க்கிற நேரத்தில் நாம் யாருக்காக வாதாட வேண்டும்? நாம் படித்த படிப்பை, நாம் பயின்ற பட்டத்தை எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்று நீங்கள் இன்றைக்கே அதற்குத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

அதைத்தான் நான் உங்களுக்கு அழுத்தம் திருத்தமாகக் கூற ஆசைப்படுகின்றேன்.

இங்கு இலக்கியங்களைப் பற்றி எல்லாம் கருணாநிதி பேசுவார் என்று பேரவையினுடைய தலைவர் பாண்டியன் எடுத்துரைத்தார். சட்டக் கல்லூரியிலே இலக்கியம் இடம் பெறலாமா என்று நீங்களும் கேட்க மாட்டீர்கள். நானும் அதிலே ஐயம் கொண்டவன் அல்ல. மேலும், இது இலக்கியம் இடம் பெறக்கூடிய வேளையும்கூட. அதை இல்லை என்று மறுக்கவில்லை.

ஆனால், நான் வேறு பல இடங்களுக்குச் செல்ல வேண்டு மென்ற காரணத்தால் இங்கே இலக்கியத்தில் நானும்ஆழ்ந்து, நீங்களும் ஆழ்ந்துவிட்டால் அடுத்த நிகழ்ச்சிகளுக்குச் செல்ல முடியாது என்பதற்காகத்தான் நான் இலக்கியத்தைப் பற்றி அதிகம் பேசவில்லை, இலக்கியத்தை நமக்குத் தந்த தமிழ் மொழி எல்லாத்துறையிலும் வளர்ந்து இருக்கிறதா என்பதை தயவுகூர்ந்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக நம்முடைய சட்டத்துறையிலேகூட தமிழ் மொழி நாம் எதிர்பார்த்த அளவிற்கு இன்னும் வளரவில்லை.

சட்டத்துறை தமிழிலே இயங்க வேண்டும், நீதி மன்றங் களிலே தமிழிலே தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது, என்றாலும் அதற்காக முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன என்றாலும்கூட முழுமையான—மன நிறைவு கொள்ளத்தக்க அளவிற்கு சட்டத்துறையிலே தமிழ் ஆக்கம் பெறவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலத்திலே இன்றைக்குச் சட்டத்துறையிலே புழங்கு கின்ற சொற்கள் எத்தனை என்பதையும், தமிழிலே எத்தனை சொற்கள் புழங்குகின்றன என்பதையும் சட்டக் கல்லூரி மாணவர்களாகிய நீங்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய வீட்டிலே இருக்கின்ற பெரியவர்களைப் பார்த்து, உங்களுடைய பையன் எங்கே படிக்கிறான் என்று கேட்டால் சட்டக் கல்லூரியிலே படிக்கிறான் என்று

தமிழிலே சொல்வார்கள். ஆங்கிலத்திலே சொல்லுகிறார் என்றால் 'லா காலேஜ்லே படிக்கிறான்' என்று சொல் வார்கள்.

'அவன் என்ன படிக்கிறான்?' என்று கேட்டால் 'சட்டம் படிக்கிறான்' என்று தமிழிலே சொல்வார்கள். ஆங்கிலத் திலே 'லா' படிக்கிறான் என்று சொல்வார்கள்.

ஆக சட்டம் என்ற சொல்லை—'லா' என்கிற அந்த ஆங்கிலச் சொல்லுக்கு நாம் பொருத்துகிறோம்.

'லா' படித்து முடித்திருப்பவர்கள் வழக்கறிஞர்களான பிறகு, அவர் வழக்கறிஞர் அறையிலே உட்கார்ந்து ஒரு பெரிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது வீட்டிற்கு வருகின்ற ஒருவர், பையன் என்ன படித்துக் கொண்டிருக்கிறான் என்று கேட்கும் பொழுது, இவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து, அவன் படிப்பது 1935-ம் ஆண்டிற்குரிய 'ஆக்ட்'டாக இருந்தால்கூட என்ன சொல் வார்—அவன் சட்டம் படிக்கிறான் என்றுதான் சொல்ல முடியுமே தவிர ஆங்கிலத்திலே சொல்வது என்றால் 35-ம் ஆண்டு 'ஆக்ட்டை'ப் படித்துக் கொண்டிருக்கிறான் என்று ஆங்கிலத்திலே சொல்லலாம். ஆனால் தமிழிலே சொல்கிற நேரத்திலே 35-ம் ஆண்டு சட்டத்தைப் படித்துக் கொண்டு இருக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும். 'லா' என்ப தற்கும் சட்டம்—'ஆக்ட்' என்பதற்கும் சட்டம் என்கின்ற அந்த ஒரே சொல்லேதான் வருகிறது.

அது மாத்திரமல்ல; ஒரு 'ஆக்ட்' சட்டம்—ஆக்டாக ஆவதற்கு முன்பு சட்ட மன்றத்திலே வருகிறது. சட்ட மன்றத்திலே சொல்கிற பொழுது அங்கே என்ன சொல்லு கிறோம். வேறு மொழியிலே 'மசோதா' என்று இப்பொழுது சொல்லவில்லை. தமிழ்நாடு சட்ட மன்றத்திலே 'சட்ட முன் வடிவு' என்று சொல்லுகிறோம்.

அதற்கு ஆங்கிலத்திலே 'பில்' என்று பெயர்.

ஆக, அங்கேயும் தமிழில் சட்டம்தான். ஒரு வார்த்தை யைச் சேர்த்துக் கொள்கிறோம் 'முன் வடிவு' என்று. அதாவது 'சட்ட முன்வடிவு' என்று சொல்கிறோமே யல்லாமல் அதற்கு என்று தனிப் பெயர் இல்லை. ஆனால் ஆங்கிலத்திலே அது 'பில்' என்று சொல்லப்படுகிறது.

அந்தப் 'பில்' அங்கே விவாதிக்கப்பட்டு, பிறகு ஓட்டளிக்கப்பட்டு, நிறைவேறிய பிறகுதான் 'ஆக்ட்'டாக வருகிறது. ஆங்கிலத்திலே அது ஆக்டாகி விட்டது என்று சொல்லுகிறோம்.

அப்பொழுதும் தமிழிலே சட்டமாகிவிட்டது என்று கூறுகிறோம்.

பையன் என்ன படிக்கிறான்? சட்டம் படிக்கிறான்.

வழக்கறிஞர் அறையிலே என்ன படிக்கிறார்? சட்டம் படிக்கிறார்.

'லா' படிக்கும் பொழுதும் சட்டம் படிக்கிறான் என்று சொல்லுகிறோம்.

'ஆக்ட்' புத்தகத்தைப் படிக்கும் பொழுதும் சட்டப் புத்தகம் படிக்கிறான் என்று சொல்லுகிறோம்.

'பில்' வரும் பொழுதும் சட்ட முன்வடிவு என்கிறோம். 'பில்' என்று சொல்லவில்லை. ஆங்கிலத்திலே சொன்னால் 'பில்' என்கிறோம். தமிழில் சொல் இல்லை.

அது மீண்டும் 'ஆக்ட்'டாகிறது. இத்தகைய 'ஆக்ட்டு' களை — இத்தகைய சட்டங்களை நிறைவேற்றக் கூடிய இடம் எது? சட்டமன்றம் என்கிறோம். ஆங்கிலத்திலே 'லெஜிஸ் லேட்டிவ் அசம்பிளி' என்று சொல்லப்படுகிறது.

எம்.எல்.ஏ. என்றால் 'மெம்பர் ஆஃப் தி லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி.' எம்.எல்.சி. என்றால் 'மெம்பர் ஆஃப் தி லெஜிஸ் லேட்டிவ் கவுன்ஸில்' என்கிறோம்.

இதற்கு வேறுபாடான வார்த்தைகள் ஆங்கிலத்திலே இருக்கின்றன. ஆனால், தமிழிலே சட்டமன்ற உறுப்பினர்— எம். எல். ஏ. என்பதற்கு.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் — எம். எல். சி. என்பதற்கு. அதற்கும் சொல் இல்லை.

இதைவிட 'கான்ஸ்டிடியூசன்' என்று சொல்கிறோம் ஆங்கிலத்தில். அதற்குத் தமிழிலே என்ன என்றால் முன்னால் ஒரு வார்த்தையைப் போட்டு — அரசியல் என்ற வார்த்தை யைப் போட்டு-அரசியல் சட்டம் என்கிறோம்.

ஆக, பையன் படிக்கிற காலத்திலே இருந்து பாராளு மன்றம் வரையிலே பார்த்தால் 'சட்டம்—சட்டம்—சட்டம்' என்கின்ற ஒரே சொல்லைத்தான் நாம் பயன்படுத்திக் கொண் டிருக்கிறோம்.

வேறு சொல் — பொருத்தமான சொல் இதுவரையிலே கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அது பழக்கத்திற்கு வரவில்லை. ஆனால், ஆங்கிலத்திலே எத்தனை சொற்கள் மாறி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'லா' என்றும் 'பில்' என்றும் 'ஆக்ட் என்றும், 'லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில்' என்றும் 'லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி' "கான்ஸ்டிடியூஷன்" என்றும் எத்தனை வார்த்தைகள்?

சட்டமன்றத்துறை என்றுதான் சொல்லுகிறோம். சட்ட மன்ற இலாக்கா என்றுதான் சொல்லுகிறோம்.

ஆனால் ஆங்கிலத்தில் — லெஜிஸ்லேட்டிவ் டிப்பார்ட் மெண்ட் என்று வேறு பெயர் வந்துவிடுகின்றது. லீகல் அட்வைசர் என்பதை சட்ட ஆலோசகர் என்கிறோம்.

இப்படி ஆங்கிலத்திலே பல பெயர்களுக்கு இடம் தரக் கூடியதாகவும் ஆங்கிலத்திலே பல பெயர்களைக் கொண்ட அகராதியை உடையதாகவும் இன்று சட்டத்துறை இருக்கும் பொழுது, தமிழிலே மாத்திரம் சட்டத்துறைக்கு நாம் அதிகச்

சொற்களைக் காணமுடியாதவர்களாக — கண்டும் பழக்கத்திலே கொண்டு வர முடியாதவர்களாக இருக்கின்றோம். இந்தக் குறையை நாம் நிவர்த்திக்க எல்லாவிதமான முயற்சிகளையும் புதுவை மாநிலம் மாத்திரம் அல்ல — அருகாமையில் இருக்கின்ற தமிழ்நாடு அரசும் அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டாக வேண்டும்.

அரசு ஈடுபட்டால் மாத்திரம் போதாது. சட்டத் துறையிலே பயின்ற நல்ல ஆற்றலாளர்கள் அதற்கான நல்ல ஆக்கமும் ஊக்கமும் தரத்தக்க கருத்துக்களை வாரி வாரி வழங்கிட வேண்டும் — அரசும் — அப்படிப்பட்ட ஆற்றலாளர்கள் தருகின்ற கருத்தும் இணைந்தால் ஒரே நேரத்திலே சட்டத்துறையிலே அதிகம் ஆக்கம் தரக்கூடிய தமிழ்ச் சொற்களை நாம் பெற முடியும் என்பதற்காகத்தான் இதை நான் உங்களிடத்திலே எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல.

ஒரு மொழி பல சொற்கள் பொருந்தியதாக இருந்திட வேண்டும்.

தமிழ்மொழி இலக்கியத் துறையில் — இலக்கணத் துறையில் தொன்மைக் காலத்தில் இருந்து வளர்ந்து வந்த அந்த வேகத்தில் பல சொற்களை உடைய மொழிதான். நான் மறுக்கவில்லை. யாரும் மறுக்க இயலாது.

ஆனல் வளர்ந்து வருகின்ற இந்த அறிவுலகத்தில் அதற்குத் தேவையான சொற்களை இன்றைக்குத் தமிழ் மொழி பெற்று இருக்கிறதா என்றுல் இல்லை.

'ஆ' — 'பசு' — 'கோ' என்ற இந்த மூன்று சொற்களும் பசு மாட்டைக் குறிப்பிடுவதற்கு தமிழிலே உண்டு. நான் இல்லை என்று சொல்லவில்லை. பசுவுக்கே மூன்று சொற்கள் இருக்கின்றன. ஆனல் அதோடு நின்று விட்டது. தமிழினுடைய வளர்ச்சி ஒரு கட்டத்தோடு நின்றுவிட்டது. அதை மேலும் வளர்க்கின்ற அந்தப் பணியை நாம் மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட விஞ்ஞானத் துறையில்—சட்டத் துறையில் தமிழினுடைய வளர்ச்சி ஓரளவு குறுகி இருக்

கின்றது. அதை மேலும் உயர்த்துவதற்கான வழிமுறைகளை நாம் கண்டிட வேண்டும். தமிழை வளர்த்த பெருமை பாண்டிய மண்டலத்திற்கு உண்டு; சேரர்—சோழர்—பாண்டியர் என்றெல்லாம் மூவேந்தர்கள் ஆண்டார்கள் என்றாலும், தமிழில் ஒரு இடத்தில் சங்கம் வைத்து—முதற் சங்கம்—இடைச் சங்கம்—கடைச் சங்கம்—என்று மூன்று சங்கங்களை வைத்து வளர்த்த பெருமை மதுரைக்கு உண்டு; மதுரையை ஆண்ட பாண்டியனுக்கு உண்டு. அந்தப் பாண்டியர்களுடைய பெயரை பெற்றிருக்கின்ற நண்பர் பாண்டியன் அவர்களை இன்று தலைவராகப் பெற்றிருக்கின்ற இந்தப் பேரவைக்கும் உண்டு என்ற வகையிலே நீங்கள் பெருமையைச் சேர்க்க வேண்டும் தமிழுக்கு என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொண்டு—நீங்கள் கோரிய வரங்களை எல்லாம் தருவதாக அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்களும், அவர்களுக்கு ஒத்துழைப்பாக இருப்போம் என்று நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இங்கே வாக்களித்து இருக்கின்றீர்கள். இந்தச் சாட்சிகள் எல்லாம் போதாது என்றுதான் என்னையும் சாட்சியாக இங்கே அழைத்திருக்கின்றீர்கள். எனவே நானும் சாட்சியாக இருந்து அடிக்கடி உங்கள் முதல்வரைச் சந்திக்கின்ற நேரத்திலே எல்லாம் 'என்ன ஆயிற்று அந்த அடிக்கல் நாட்டு விழா?' என்று கேட்டுக் கொண்டே இருப்பேன் என்பதை உங்களிடத்திலே மனப்பூர்வமாக உறுதி அளித்து வாழ்க உங்களுடைய திறன், வளர்க உங்களுடைய புகழ் என்று வாழ்த்துகிறேன்.

5—10—80 அன்று புதுவை சட்டக் கல்லூரி விழாவில் ஆற்றிய உரை.

இளைஞர்கள் கட்டாயமும் காலம்!

தாவூர் கலைக் கல்லூரியில் இன்று நடைபெறுகிற விழா மாணவர் பேரவையினுடைய தொடக்க விழாவா அல்லது கோரிக்கை விழாவா என்று—தெரியாமல் நான் இங்கே அமர்ந்திருந்தேன். காரணம் மாணவர் தலைவர் சிவகுமார் ஆற்றிய வரவேற்பு உரை முழுவதும் இன்ன இன்ன சலுகைகள் வழங்க வேண்டும்; கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர்களிடத்திலே கேட்டுக்கொண்டு—தனது வரவேற்புரையை அமைத்துக் கொண்டார்.

கல்லூரிப் பேரவையின் தொடக்க விழாவிற்கு நான் வந்து பேசவேண்டும் என்று மாத்திரம் எண்ணியிருப் பார்களேயானால் அவர்கள் அமைச்சர்களை அழைக்காமல் என்னைக்கூட அழைத்திருக்க முடியும்.

இளைஞர் விழா நடத்தப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. விலைவாசி ஏறிக் கொண்டே போவது சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு நிவாரணம்

அளிக்கப்பட வேண்டும் என்கின்ற நிலை இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. பல்கலைக்கழகம் வேண்டும்—அதற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இவைகளெல்லாம் மாணவர்களுக்கு மிகமிகத் தேவையான பிரச்சினைதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. பல்கலைக் கழகம் புதுவை மாநிலத்திற்கு மிக விரைவிலே வரும் என்பதை நான் மாண்புமிகு முதல்வரோடு உரையாடிய நேரத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் சண்முகம் அவர்களோடு கலந்து பேசிய நேரத்திலும் உணர முடிந்தது.

மாணவர்கள் இன்றைக்கு இந்த மாநிலத்திலே உள்ள பிரச்சினைகள் மாத்திரம் அல்ல—அண்டை மாநிலத்திலே உள்ள பிரச்சினைகள் மாத்திரம் அல்ல—இந்தியத் திருநாட்டிலே இருக்கிற பிரச்சினைகளும், இந்தியத் திருநாட்டை பாதிக்கக்கூடிய அளவிற்கு உலக அரங்கத்திலே எழுந்துள்ள பிரச்சினைகளையும், எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டத்திலே இருக்கின்றீர்கள்.

மாலை நேரத்திலே வானொலியிலே என்ன செய்தி சொல்லப்பட்டதோ என்று ஆவலோடு எதிர்பார்க்கின்ற அளவிற்கு, வானொலிச் செய்தி கேட்டீர்களா? என்ன செய்தி சொன்னார்கள் என்று வானொலி கேட்டவர்களை பார்த்து கேட்கின்ற அளவிற்கு, இரண்டு நாடுகள் இன்றைக்கு போர் முனையிலே நிற்கின்ற காட்சியை நாம் ஏடுகளிலே பார்க்கின்றோம். ஈரான்—ஈராக் இரண்டு நாடுகளிலும் குண்டுமாரிப் பொழியப்படுவதும், உலகத்திற்கே பெட்ரோல் வழங்கக்கூடிய அளவிற்கு அதிக அளவு உற்பத்தி செய்யக்கூடிய இந்த நாடுகளில் பெட்ரோல் கிணறுகள் எல்லாம் குண்டுகள் விழுந்து அழிக்கப்படுகின்ற நிலைமைகள் நாள்தோறும் வளர்ந்த வண்ணம் இருக்கின்றன.

யுத்த காலத்தில் அவர்களுடைய நகரங்களை நாங்கள் பிடித்துவிட்டோம் என்பதும் இவர்களுடைய நகரங்களை

நாங்கள் பிடித்துக் கொண்டு விட்டோம் என்பதும் வழக்க மாக வாடிக்கையாக வரும் செய்திகள்தான் என்றாலும்கூட, நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் ஈரான் அதிபருக்கும் ஈராக் அதிபருக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார் என்று பத்திரிகையிலே பார்த்தேன். உடனடியாக போரை நிறுத்தி ஒரு சமரசமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இரு நாடுகளும் முன்வாருங்கள் என்று கேட்டுக் கொண்டு பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் இந்தியத் திருநாட்டின் சார்பாக தன்னுடைய வேண்டுகோளை விடுத்திருக்கின் றார்கள்.

இதிலே ஈரான் போக்கு சரியா? அல்லது ஈராக் நாட்டி னுடைய போக்கு சரியா? என்கின்ற பிரச்சினையில் நான் ஈடுபடத் தயாராக இல்லை. நாம் ஈடுபட வேண்டியதும் இல்லை. அவைகளெல்லாம் ஆய்வுகளுக்கு, விமர்சனங் களுக்கு உட்பட்டவையாகக்கூட இருக்கலாம். ஆனால் நமக்கு வேண்டியது—யாருடைய போக்கு சரியோ, தவறோ அதைப் பற்றிக் கவலை இல்லை—இரு நாடும் இந்தப் போரை நிறுத்துவதன் மூலம், உலகத்திலே ஒரு அமைதியை உருவாக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உலகத்தின் அமைதியிலே அக்கறை கொண்ட அத்தனைத் தலைவர்களுக் கும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

நாம் எங்கேயோ இருக்கிறோம்—இந்திய நாட்டினுடைய ஒரு கோடியிலே, புதுவை மாநிலத்திலே, ஒரு சின்னஞ்சிறு மாநிலத்திலே இருக்கிறோம் என்கின்ற எண்ணம் இல்லாமல், உலகத்திலே எந்தப் பகுதியிலே அமைதிக்குப் பங்கம் விளைகிறது என்றாலும் அது நம்மையும் பாதிக்கும். அங்கே போர்முனையிலே உள்ளவர்களை—அருகிலே உள்ளவர்களை அவர்களுடைய உயிரைப் பாதிக்கக்கூடிய அளவிற்குத் தாக்குதல்கள் நடைபெறலாம். ஆனால், இங்கே நமது எதிர் காலத்தைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு—இந்தியாவினுடைய

பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு—இந்தியாவினுடைய வசதிகளைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு—வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு அந்தப் போராட்டத்தினுல் ஆபத்துக்கள் ஏற்படக்கூடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதைத்தான் நான் உங்களுக்குக் குறிப்பாகச் சொல்வேன்.

எங்கேயோ நடக்கிறது நமக்கென்ன என்ற எண்ணம் என்றைக்கும் நமக்கு ஏற்படக்கூடாது. அதைப் போலவே யாருக்கோ நடக்கிறது நமக்கென்ன என்கிற நினைவு நமக்கு ஏற்படக்கூடாது. யாருக்கு? அல்லது எங்கே என்ன நடை பெற்றாலும் அதில் நமக்குத் தொடர்பிருக்கிறது என்ற எண்ணம் உருவாக வேண்டும். அதைத்தான் நம்முடைய முன்னோர்கள்—நமக்குச் சொன்னார்கள்—யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்று!

எல்லா ஊரும் நமது ஊரே; எல்லோரும் நமது உறவினரே என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனல் அந்தப் பரந்த மனப்பான்மைக்கு நாம் முழுமையாக ஆட்பட்டு விடுவோமேயானுல், நமக்கென்று ஒரு மொழி கிடையாதா? நமக்கென்று ஒரு இனம் கிடையாதா? நமக்கென்று ஒரு தேசியம் கிடையாதா? என்கின்ற அந்தக் கேள்விகளை நாம் மறந்து விட்டோம் என்று ஆகிவிடும். பரந்த மனப்பான்மை மனிதாபிமானத்தினுடைய அடிப் படையிலே உலகத்தில் எந்த மூலை முடுக்கிலே—யாருக்கு எந்தத் தீங்கு ஏற்பட்டாலும், என்ன பாதிப்பு ஏற்பட் டாலும் அது நம்மையும் பாதிக்கிறது என்ற மனிதாபிமான அடிப்படையிலே அந்த உணர்வுகள் இருந்தாக வேண்டும்

அதே நேரத்தில் நம்முடைய மொழியைக் காக்க—நம்முடைய சமுதாயத்திலே முன்னேற்றம் காண—நம்முடையநாடுவாழ—நலிவு தீர நம்முடைய முயற்சிகள் என்ன என்பதை யோசித்தாக வேண்டும். இந்தக் கல்லூரியில் படித்து, முன்னேறி, பட்டம் பெற்று, தேர்விலே வெற்றி

பெற்று வெளியே செல்கிற மாணவர்கள் முழு மன நிறை வோடு வெளியேற முடியுமா? அவர்கள் வாங்கிய மதிப்பெண் களுக்காக நான் சொல்லவில்லை. அவர்கள் முதல் தரத்திலே வெற்றி பெற்றூர்களா? இரண்டாவது கட்டமா? மூன்றுவது கட்டமா? என்ற அந்த ஆராய்ச்சிக்கு செல்லவில்லை. அவர்கள் பட்டமளிப்பு விழாவிற்கு பிறகு, பட்டத்தைப் பெற்று வெளியே செல்கிற நேரத்தில் பேரானந்தத்தோடு செல்கிறவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்தோடு செல்கிறவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இந்திய பூபாகம் முழுவதும் எல்லா இடங் களிலும் இளைஞர்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டி ருக்கிறூர்கள். மக்கள் தொகை வளர்கிறது. பொருளாதாரத் திலே பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு சிலர் இந்தியாவினுடைய பொருளாதாரத்தை தங்க ளுடைய கைகளிலே வைத்து ஆதிக்கம் செலுத்துகின்ற காரணத்தால், அடக்கி வைத்துக் கொண்டு இருக்கின்ற காரணத்தால் மிகப் பலர் வாட வேண்டியிருக்கின்றது.

இந்தக் கல்லூரிக்குப் பெயர் தாகூர் கல்லூரி. அந்தத் தாகூர் சொன்னூர் — 'ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக் கின்றன்' என்று சொன்னூர்.

அவர் சொன்னதைத்தான் இங்கே பிறந்து வாழ்ந்து தமிழ்ப்பாக்கள் ஆயிரக்கணக்கானவற்றை வடித்தெடுத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் சொன்னூர்:

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல்வாய்க்காலும்
வகைப்படுத்தி நெற்சேர உழுதுழுது
பயன் விளைத்த நிறை உழைப்பு
தோள்களெல்லாம் எவரின்
தோள்கள்?"

என்று கேட்டார்.

அதே கேள்வியைத்தான் இந்தப் பகுதியிலே வாழ்ந்த விடுதலே வீரர்கள் கேட்டார்கள்.

பாரதிதாசனுக்கு ஆசானுக, குருவாக விளங்கிய கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதி கேட்டார். ஆனுல், அந்தக் கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லே.

"ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கின்முன்"— தாகூர் சொன்னுர். அந்தச் சிரிப்பை காண்பதற்கு என்ன முயற்சியில் ஈடுபட்டோம்? ஈடுபடாமல் இல்லே. ஆனுல் அந்த முயற்சி முற்றக் கனிந்ததா? முழுமையாக வெற்றி பெற்றதா? என்முல் இல்லே என்றுதான் மனச்சோர்வோடு நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலேமை நாட்டிலே இருக்கின்றது.

இது ஒருவருடைய கையிலே மாத்திரம் ஒப்படைக்கப் பட்ட பொறுப்பா? இல்லே.

நம் அனேவரது கையிலேயும் ஒப்படைக்கப்பட்டிருக் கின்ற பொறுப்பு. அந்தப் பொறுப்பினே நாம் நிறைவேற்றி யாக வேண்டும். எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்பது, பாகுமொழியாக பசப்பு மொழியாகப் பல காலம் பயன்படுத் தப்பட்டதுண்டு. அதே நிலே தொடர்ந்து — அடிப்படைப் பிரச்சினேகள் வளருமேயானுல், நாம் கேள்விக்குறிகளாக மாறிவிட வேண்டியவர்களாக இருக்கிறேம்.

ஜனநாயகம் இந்தியாவிலே தழைத்து ஓங்குகிறது. மக்கள் அரசியலிலே மாறுதல்களே உருவாக்குகிருர்கள். இந்தியத் திருநாட்டில் ஒரு நிலேயான அரசை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்முர்கள். இடையிலே இருந்த அரசு நிலே குலேந்த காரணத்தால், தானும் நிலே குலேந்து இந்தியாவி னுடைய கௌரவத்தையும் நிலேகுலேத்த காரணத்தால், புதிய அரசு மீண்டும் உருவாகிஇன்றைக்கு நிலேயானதாக, பக்கத்து நாடுகள் பார்த்துப் பாராட்டத் தக்கதாக— வெளிநாடுகள் பார்த்து இதுவும் ஒளிமிகுந்த நாடு

தான் என்று போற்றத் தக்கதாக, அமைகின்ற கௌரவ மிக்க நாடாக இன்றைக்கு இந்த நாடு மாற வேண்டும் என்ற கவலை உள்ள அரசாக இன்றைக்கு இருக்கின்ற அரசு இருந்தாலும்—இன்னும் பல பிரச்சினைகளை; மத்திய அரசானாலும் சரி; இந்தியாவில் இருக்கின்ற மாநில அரசுகளானாலும் சரி சந்திக்க வேண்டியிருக்கின்றது. அப்படிச் சந்திக்கின்ற நேரத்தில் ஒவ்வொரு மாநில அரசும் தன்னுடைய நிலையையும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அப்படிச் சிந்திக்கின்ற அரசுகளில் ஒன்றுக நம்முடைய புதுவை மாநில அரசு இருக்கும் என்பதை நான் உணர்ந்தேன். நண்பர் மாண்புமிகு அமைச்சர் சிவகுமார் இங்கே பேசும்போது சொன்னார். இந்தக் கல்லூரிக்கு நீண்ட காலம் என்னை அழைத்து நான் வர முடியாமல் போய், இந்த மாணவர் தலைவர் சிவகுமார் அழைத்தபோது வந்திருக்கிறேன் என்று சொன்னார். பெருமாள்ராஜா பேசும்போது, சொன்னர். எங்கள் சிவகுமார் இப்படி அதிக நேரம் பேசுக என்று கட்சியின் தலைவருக்கு கட்டளையிடலாமா? என்று அவர் கேட்டார். ''இளங்கன்று பயம் அறியாது'' என்பது பெருமாள்ராஜா அவர்களுக்கு தெரியாது போலும். அது மாத்திரம் அல்ல. சிவகுமாரைப் போன்ற இளைஞர்கள் கட்டளையிடவும், என்னைப் போன்றவர்கள் அதனை நிறைவேற்றவும் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர்கள் கட்டளையிடும் காலம்தான் இந்தக் காலம். ஆனால், அந்தக் கட்டளை நல்ல அறிவார்ந்த உள்ளத்திலே இருந்து பிறக்கக்கூடிய கட்டளையாக இருக்கவேண்டும். அந்த ஆணையை நல்ல முதிர்ச்சி பெற்ற மூளையிலிருந்து மூளைக்கக் கூடிய ஆணைகளாக இருக்கவேண்டும். அப்படிப் பட்ட கட்டளைகளை நிறைவேற்ற என்றென்றைக்கும் நான் தயாராக இருக்கின்றேன் என்பதைக் கூறிக்கொள்வேன். காரணம், நான் திரும்பிப் பார்க்கிறேன், என்னுடைய மாணவப் பருவத்தை. பெருமூச்சுவிடவில்லை. ஆகா! அப்படி இளைஞனாக இருந்தோமே; இப்படி ஆகிவிட்டோமே? என்று தலையிலே கைவைத்துப் பார்த்துக்கொள்ளவில்லை.

என்னுடைய மாணவப் பருவத்திலோ, இளமைப் பருவத்திலோ நானும் பலருக்குக் கட்டளை இட்டு இருக்கின்றேன்.

என்னுடைய ஊருக்கு வந்த கிருபானந்தவாரியாருக்கே கட்டளையிட்டு இருக்கிறேன். எத்தனையோ பேருக்கு கட்டளையிட்டு இருக்கின்றேன்.

ஆனால் அந்தக் கட்டளைகளெல்லாம் ஏன் பிறந்தன? ஆணைகளெல்லாம் ஏன் பிறந்தன? மொழியைக் காப்பாற்ற—பகுத்தறிவைப் பயன்படுத்த—மூட நம்பிக்கையை வீழ்த்த அன்றைக்கு ஏற்பட்ட உணர்வின் அடிப்படையிலே தோன்றிய கட்டளைகள்தான் அந்தக் கட்டளைகள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இந்தக் கையிலேதான் 1938-ம் ஆண்டு புலி-வில்-கயல் என்ற மூன்று சின்னங்களும் பொறித்த தமிழ்க்கொடி ஏந்திக் கொண்டு 'இந்தி திணிக்கக் கூடாது; கட்டாய இந்தியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்று திருவாரூர் வீதியில் பள்ளிச் சிறுவனாக நான் பவனிவந்தேன். ஏறத்தாழ 14 வயதுச் சிறுவனாக இருந்த அந்தக் காலத்திலே, அன்றைக்கு ஏந்திய 'இந்தித் திணிப்பை எதிர்ப்போம்' என்ற அந்தக் கொடி இன்னமும் என்னுடைய கையிலேயிருந்து கீழே போட வில்லை என்பதையும், என்றைக்கும் இந்தக் கொடி தணியாது என்பதையும் தமிழ் வாழ—தமிழ்ச் சமுதாயம் செழிக்க—தமிழ் இலக்கியங்கள் போற்றி பாதுகாக்கப்பட—தமிழர்களுடைய வரலாறு மங்காமல் மறையாமல் என்றும் நிலைத்து நிற்க கருணாநிதி அன்றைக்குத் தூக்கிய அந்தக் கொடி என்றென்றும் தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள் தங்களுடைய கையிலே ஏந்தி அதற்கென தங்களுடைய வாழ்வை அர்ப்பணித்து நாம் மொழியால் தமிழர் — இனத்தால் திராவிடர் — நாட்டால் இந்தியர் என்கின்ற அந்த உணர்ச்சியோடு, உலகத்தால் மனிதர் என்கின்ற அந்த மனிதாபிமான எண்ணத்தோடு நீங்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

5—10—80 அன்று புதுவை தாகூர் கலைக்கல்லூரி விழாவில் ஆற்றிய உரை.

இலக்கியத்தில் தமிழகம்

பொன்னேரியில் அமைந்து, நீண்ட காலமாக அறிவுத் தொண்டாற்றி வருகின்ற இந்தப் பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரியில் நம்முடைய மாணவ நண்பர்கள் பேரவையின் தொடக்க விழாவினை நான் நடத்தித் தரவேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டு, உங்களையெல் லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக் கிறீர்கள்.

கல்லூரியின் முதல்வர் வழக்கமாக ஆங்கிலத்திலே பேசக் கூடியவர் என்றும் — இன்று அவர் இங்கே தமிழிலே பேசியது உங்களுக்கு வியப்புக்குரியதாக இருந்தது என்றும் — அதனுல் இடையிடையே உங்களுடைய மகிழ்ச்சியை ஆரவாரத்தின் மூலமாக வெளிப்படுத்திக் கொண்டீர்கள் என்றும் நான் அறியலானேன்.

எனக்குள்ள வருத்தமெல்லாம், தமிழ் ஒலிக்கும்போது அது மழலைமொழியில் ஒலித்தாலும் ஒலிப்பது தமிழ் அல்லவா

என்ற உணர்வோடு அதை வரவேற்கின்ற பக்குவத்தை — பண்பாட்டினை நாமெல்லாம் பெற்றிட வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழிலே பேசுவதே அவமானகரமானது; மதிப்பிற்குரிய காரியமல்ல; தமிழ் ஒரு நீசமொழி. எனவே ஆங்கில மொழியிலேதான் பேச வேண்டும்; அப்படிப் பேசுவதுதான் — பேசுகின்றவனுடைய சமுதாய அந்தஸ்தையும் பொருளாதார அந்தஸ்தையும் அரசியல் அந்தஸ்தையும் உயர்த்திக் காட்டுகின்ற ஒன்று எனக் கருதப்பட்ட காலம் தமிழகத்திலே இருந்தது. மிகப் பெரும் திறன் வாய்ந்தவர்கள் — மேதைகள் — உளமாற நாட்டு மக்களுக்கு உழைக்க வேண்டுமென்று கருதியவர்கள்கூட, தமிழ் மொழியின் மீது அவர்களுக்கு அன்பு இருந்தாலும் ஆங்கிலத்திலே பேசினால்தான் மாற்றார் தங்களை மதிப்பார்கள் என்கிற மன நிலைபெற்று, ஆங்கிலத்திலே பேசுவதை தங்களுடைய வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள்.

கடந்த முப்பதாண்டு காலத்திற்குள்தான் தமிழ்நாட்டிலே பெரும் மாறுதல் ஏற்பட்டு — தமிழிலே பேசுவதுதான் மரியாதைக்குரியது; தமிழன் தமிழ்நாட்டிலே தமிழிலேதான் பேச வேண்டும் என்கிற அந்தத் தாய்மொழி உணர்வு உள்ளத்திலே பதிந்து — அந்த உணர்வு நல்லதோர் வெற்றியை நமக்கெல்லாம் நல்கியிருக்கிறது என்பதை நாம் காணும்போது பெருமையடைகிறோம்.

நான் இந்த விழாவிற்கு வருவதை கல்லூரி முதல்வர் எந்த அளவிற்கு விரும்பினர் என்பதை வரவேற்புரையில் மாணவர் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார். கல்லூரி முதல்வர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்களுடைய பாடலோடு — தமிழ்த் தாய் வாழ்த்தோடுதான் இந்த நிகழ்ச்சி தொடங்கியது.

நான் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு வரை — தமிழ்த் தாய் வாழ்த்து என்ற பெயரால்

அல்லது கடவுள் வாழ்த்து, இறை வணக்கம் என்ற பெயரால் — கல்லூரிகளில் ஆனலும் கல்வி நிலையங்களில் ஆனலும் அரசு விழாக்களில் ஆனலும் அமைச்சர்களோ — அதிகாரிகளோ கலந்து கொள்கிற விழாக்களில் ஆனலும் தமிழ்த் தாய் வாழ்த்து என்று ஒன்று இல்லாமல் அவரவர்களுடைய விருப்பத்திற்கிணங்க இறை வணக்கம் என்று சொன்னதும் — ஒரு அம்மையார் ஒலி பெருக்கியின் முன்னல் வந்து ஒரு தெலுங்கு கீர்த்தனையைப்பாடி முடித்துவிட்டுப் போவதும், இன்னெரு நிகழ்ச்சியிலே ஒருவர் ஆண்டவனைப் பற்றி ஒரு பாடலை பாடி விட்டுப் போவதும் — இப்படிப்பட்ட நிலைமை இருந்ததை நான் உணர்ந்தேன்.

எனவேதான் மனேன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய "நீராறும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்ற பாடலைத் தேர்ந்தெடுத்து தமிழக அரசு விழாக்களானலும் — அரசு சார்புடைய நிறுவன விழாக்களானலும் — இறுதியிலே தேசிய கீதம் பாடவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதைப் போலவே தொடக்கத்திலே "நீராறும் கடலுடுத்த" என்று தொடங்கும் இந்தத் தமிழ்த்தாய் வணக்கத்தைப்பாட வேண்டியதும் இன்றியமையாதது என்ற அறிவிப்பு அரசின் சார்பாகப் பிறப்பிக்கப் பட்டது- இங்கே அந்த அடிப்படையில் அந்தப் பாடல் ஒலி பரப்பப்பட்டபோது உள்ளம் மகிழ்ந்தேன்.

கல்லூரி முதல்வர் உரையாற்றும்போது என்னைப் பற்றிச் சிலவற்றைக் குறிப்பிட்டார்.

விருந்தினர்களை வரவேற்கிற நேரத்தில் சம்பிரதாயத்திற்காகச் சில பாராட்டுரைகளைச் சொல்லவேண்டும். அப்படி என்னைச் சம்பிரதாயத்திற்காகப் பாராட்டியதாகத்தான் அதனை எடுத்துக் கொள்கிறேன்.

என்னை அவர் 'ஜீனியஸ்' என்றும், மேதை என்றும். நிர்வாகத் திறன்மிக்கவன் என்றும், எழுத்தாளன் என்றும் பேச்சாளன் என்றும் ஆற்றலாளன் என்றும் இப்படி

எத்தனையோ சொற்களைக் கொண்டு அவர் என்னைப் புகழ்ந்து பேசினார் என்றால், ஒரு கல்லூரியின் முதல்வராக இருப்பவர் அந்தக் கல்லூரிக்கு அழைக்கப்பட்டிருப்பவனைப் பற்றி அது கூடச் சொல்லாவிட்டால், தகுதியற்ற ஒருவனை அழைத்த குற்றத்திற்கு அவர் ஆளாக நேரிடும்.

எனவேதான் அவர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டவைகள் சம்பிரதாயத்திற்காகச் சொல்லிய வார்த்தைகள் என்ற அளவில்தான் நான் எடுத்துக் கொள்கிறேன்.

ஆனால் சிலர் இருக்கிறார்கள். இவ்வளவுதானா என்னைப் பற்றிச் சொன்னீர்கள்? இதையெல்லாம் விட்டு விட்டீர்களே என்று வருத்தப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் அவர்களைப் பற்றிப் பாராட்டுகிற நேரத்தில் அவைகளுக்குத் தாங்கள் உரியவர்கள்தான் என்ற எண்ணத்தோடு எதிரே வீற்றிருக்கும் மக்களை தங்களுடைய விழிகளால் சுழற்றிப் பார்த்து, 'பார்த்தாயா! நான் யார் தெரிகிறதா? கல்லூரி முதல்வரே என்னைப் பாராட்டுகிறார்!' என்று தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்கிறவர்களும் இருக்கிறார்கள். நான் அடக்கத்தின் காரணமாக மாத்திரமல்ல; உண்மையிலேயே சொல்கிறேன். இன்னும் இந்த நாட்டிற்கு — இந்தச் சமுதாயத்திற்கு — இந்தச் சமுதாயம் உயிர் எனப் போற்றுகின்ற தமிழ் மொழிக்கு தமிழின் மேன்மைக்கு — தமிழர்களின் மேன்மைக்கு — தமிழர்கள் பாதுகாக்க வேண்டிய இலக்கியங்களின் வளர்ச்சிக்கு - தமிழ்நாட்டு மக்களுடைய நல் வாழ்விற்கு ஆற்ற வேண்டிய தொண்டு ஏராளம் இருக்கிறது. அந்தத் தொண்டு முழுவதையும் ஆற்றி முடிக்கக் கூடிய அளவிற்கு என்னுடைய வாழ்நாள் இருக்குமா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதை விட — வாழ்ந்த காலம் குறைவோ — நிறைவோ — என்ன செய்தோம் என்ற கேள்விக்கு மன நிறைவோடு நாமே பதில் காண்பதுதான் சரியான வாழ்க்கை; நியாயமான வாழ்க்கை; உண்மையான வாழ்க்கையாகும்.

அந்த வாழ்க்கையைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் நடத்திக் கொண்டிருந்தான்.

அப்படிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழன் நடத்துகின்ற அளவிற்கு அவனுக்கு இலக்கியங்கள் கிடைத்தன.

வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமை தமிழ் இனத்திற்கு உண்டு.

தொல்காப்பியம்தான் தமிழிலே மிகத் தொன்மை வாய்ந்தது என்று கூறுகிறோம். தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழன் தன்னுடைய மொழிக்கு இலக்கணம் கண்டறிந்தான் என்பதற்கான சான்றுகளை நாம் தொல்காப்பியத்திலேயே காண முடிகிறது.

'என்மனார் புலவர்' என்று தொல்காப்பியம் கூறுகிறது. சில கருத்துக்களை உணர்த்துகின்ற நேரத்தில் இப்படிப் புலவர்கள் சொல்வார்கள் என்று தொல்காப்பியம் சுட்டிக்காட்டுகிறது என்றால் — அதற்கு முன்பே இலக்கணம் குறித்த ஆராய்ச்சிகள் நடைபெற்று — தமிழ்மொழி, இலக்கணம் கொண்ட மொழியாக இருந்திருக்கிறது.

தொல்காப்பியம் தமிழர்களுக்கு கிடைத்த காலம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்று புலவர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். சிலர், தங்களுடைய ஆராய்ச்சியின் மூலம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்றும் குறிப்பிடுவார்கள்.

மூவாயிரம் ஆனாலும், நான்காயிரம் ஆனாலும் ஒரு மொழி இலக்கண வளம் பெற்ற மொழியாக ஆகியே மூவாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால், அந்த மொழி அதற்கு முன்பு பேச்சு வழக்கிலே எத்தனையோ ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும். அது எத்தனை ஆண்டுக் காலம் மக்களிடையே பழகி, புழக்கத்திற்கு வந்திருந்தால் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணத்தைப் பெற்றிருக்கும். அதையெல்லாம் ஆய்வு செய்த அறிஞர் பெருமக்கள் தமிழின் காலம் ஏறத்தாழ எட்டாயிரம் அல்லது பத்தாயிரம்

ஆண்டு காலத்திற்கு முந்தியதாக இருந்திருந்தால்தான் அது ஐந்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்படிப்பட்ட அரிய கருவூலமாக இருக்கிற இலக்கண வளத்தைப் பெற்றிருக்க முடியும் என்று கருதுகிறார்கள். ஆக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் மூத்த மொழியாக தமிழ் மொழி இருந்திருக்கிறது. அதனுல்தான் "கல் தோன்றி மண் தோன்று காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்று நம்முடைய பெருமையை இலக்கியங்கள் இன்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஒரு முறை தந்தை பெரியார் அவர்கள் தமிழைப் பற்றி விமர்சித்த நேரத்தில், தமிழ் மொழியிலே இருக்கிற புராணங்கள்—இதிகாசங்கள் காரணமாக தமிழ்ச் சமுதாயம் எப்படிக் கெட்டு விட்டது என்கிற மனநோக்காட்டோடு இவைகளை எண்ணிப் பார்த்து சினம் கொண்டு—சீற்றம் கொண்டு—தமிழ் மொழியைப் பற்றிச் சொல்லும்போது அது ஒரு 'காட்டு மிராண்டி மொழி' என்று கூடச் சொன்னுர்கள். சென்னையில் மயிலைப் பகுதியில் நடை பெற்ற ஒரு கூட்டம்; தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்ட கூட்டம். அந்தக் கூட்டத்தில் என்னிடம் ஒரு துண்டுத்தாள் தரப்பட்டது. அதில் "தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொல்கிற பெரியாரை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?" என்ற கேள்வி எழுதப்பட்டிருந்தது.

அதற்கு நான், "இதை நான் ஏற்றுக் கொள்கிறேன்; பெரியார் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை" என்றேன்.

மக்கள் வியப்பால் 'இவனும் இப்படிச் சொல்கிருனே' என்று ஆச்சரியப்பட்டார்கள். பிறகு நான் அதற்கு விளக்கமளித்தேன்.

"பெரியார் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. காட்டு மிராண்டிகளாக மக்கள் வாழ்ந்த அந்தக் காலத்திலேயே இருந்தமொழி தமிழ் மொழி. ஆகவேதான் தமிழ் மொழியை காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் சொல்லியிருக்

கிறார்'' என்று நான் குறிப்பிட்டபோது பெரியாரே அவருக்குரிய புன்னகையோடு அதனை வரவேற்று மகிழ்ந்த காட்சி இன்னும் என் மனக்கண் முன்னுல் நின்று கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட தொன்மை வாய்ந்த மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம்! அப்படிப்பட்ட ஒரு மொழியைச் சேர்ந்த குடும்பத்தினைச் சார்ந்தவர்கள் நாம்!

அந்த மொழியைக் காப்பாற்ற—அந்த மொழிக்குரிய மக்கள் பகுத்தறிவாளர்களாக—நல்ல நெறியாளர்களாக—நாம் பாடுபட்டாக வேண்டும்.

கல்லூரி முதல்வர் எடுத்துக் காட்டினுரே கடமை உணர்வும்—கண்ணிய உணர்ச்சியும்—கட்டுப்பாட்டு நிலையும் தேவை என்று அவரே எடுத்துக் காட்டினுரே—அப்படி எடுத்துக் காட்டிய நேரத்தில் அவர் தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டாரோ இல்லையோ—நீங்கள் எல்லாம் அந்த மூன்று வார்த்தைகளுக்கும் சொந்தக்காரர் நம்முடைய பேரறிஞர் அண்ணு அல்லவா என்று எண்ணிக் கொண்டிருந்திருப்பீர்கள்.

அந்த அண்ணன் 1966-ம் ஆண்டு இறுதியில் ஆட்சி நம் கைக்கு வருமா? வராதா? என்பது வினுக் குறியாக இருந்த காலக் கட்டத்தில் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று விரும்பியதற்குக் கூறிய ஒரேயொரு காரணம்—தமிழன் தன்னுடைய மொழியைப் பாதுகாக்கவும்—தன்னுடைய மரபைப் பேணவும்—தன்னுடைய இலக்கியங்களைக் காப்பாற்றவும்—தன்னுடைய வரலாற்று மேன்மை அழிந்து விடாமல் பாதுகாக்கவும்—இன்னும் ஐம்பது அல்லது அறுபதாண்டு கால வேலை தமிழகத்திலே பாக்கியிருக்கிறது.

எனவே ''ஆட்சிப் பொறுப்பிலே நாம் இருந்தாலும்—இல்லா விட்டாலும்—அந்தப் பணியைச் செய்து முடிக்க நோக்கம் கொண்டு நம்முடைய பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம்'' என்று குறிப்பிட்டார்கள்.

அண்ணு அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று இரண்டாண்டு காலம் நம்மோடு இருந்தார்கள்; பின்னல் மறைந்து விட்டார்கள் என்றாலும்கூட அந்த இரண்டு ஆண்டு காலத்திலே அவர் ஆற்றிய பணிகளில் மிகச் சிறந்த பணிகளாக மூன்று பணிகளை—அதனை யாராலும் மாற்ற முடியாத பணிகளாகச் செய்து முடித்தார்.

முதல் பணியாக தான், எந்தச் சுயமரியாதை உணர்வும்—மூட நம்பிக்கை அற்ற நிலையும் சமுதாயத்திலே பரவிட வேண்டும் என்று பெரியார் அவர்கள் சொன்னார்களோ அந்தப் பெரியாருடைய எண்ணத்தைக் காப்பாற்றுகின்ற வகையில் பேரறிஞர் அண்ணு அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்கின்ற மிகப் புரட்சிகரமான ஒரு தீர்மானத்தை சட்ட மன்றத்திலே கொண்டுவந்து அதை நிறைவேற்றிக் காட்டினார்கள்.

எதுவுமே நிறைவேறுகிற வரையிலே கடினமாகத் தோன்றும். சுயமரியாதைத் திருமணங்கள் அப்படிச் செல்லுபடியாக வேண்டும் என்ற முறையீடு நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. அது நிறைவேற்றப்படாத அந்தக் காலகட்டம் வரையில் அது ஒரு கடினமான பணியாகத் தோன்றியது.

ஆனால், அண்ணு அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி 'செல்லுபடியாகும்' என்ற ஒரு உத்தரவைப் பிறப்பித்து இனிமேல் நடைபெறுகிற திருமணங்கள் மாத்திரம் அல்ல இதற்கு முன்பு நடைபெற்ற திருமணங்கள்கூட சட்டப்படி செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தைச் சட்டப் பேரவையிலே நிறைவேற்றி அது இன்றைக்கும் நடைமுறையில் இருந்து வருகிறது.

அடுத்தபடியாக, அண்ணு அவர்கள் தமிழகத்திலே ஆங்கிலம்—தமிழ்—இந்தி—என்ற இந்த மூன்று மொழிகளைப்

படிக்க வேண்டிய இன்னல், தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு இருப்பதை உணர்ந்து அண்ணுவைப் போலவே தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களும்—மாணவர் களும் உணர்ந்து, மூன்று மொழிகளைப் படிப்பது இயலாத காரியம், இந்தி மொழி கட்டாயம் என்று ஆக்கப்படுமே யானால் தமிழன் இந்தியாவிலே இரண்டாந்தரக் குடிமகனாக ஆகிவிடுவான். அந்த நிலை மாற்றப்பட வேண்டும். கட்டாய இந்தி எங்கள் மீது திணிக்கப்படுவதை நாங்கள் எதிர்க் கிறோம் என்று மாணவர்கள் போர்க்குரல் கொடுத்தார்கள்.

1938-ம் ஆண்டிலேயே கட்டாய இந்தியை எதிர்த்து காராகிருகத்திலே ஆறு மாத காலம் பூட்டப்பட்டிருந்த அண்ணு அவர்கள் — தொடர்ந்து பல ஆண்டுக்காலம் இந்தி யைத் திணிப்பது கூடாது என்ற முழக்கத்திற்குச் சொந்தக் காரராக இருந்த அண்ணு அவர்கள், முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற உடனேயே மாணவர்கள் குரலுக்கு மதிப் பளித்து தன்னுடைய கொள்கை நிறைவேறுகிறது என்கின்ற குதூகலத்தோடு சட்டப் பேரவையிலே தீர்மானித்தார்கள். 'இனித் தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தாய்மொழி தமிழும், அடுத்தபடியாக, தொடர்பு மொழியாக ஆங்கிலமும் இருக்கும்; இந்திக்கு வேலை கிடையாது' என்கின்ற அந்தத் தீர்மானத்தைப் பேரறிஞர் அண்ணு அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றினர்கள்.

அடுத்தது நீண்ட காலமாக இருந்து வந்த மற்றோர் முறையீடு.

நம்முடைய தமிழ் நிலத்திற்கு "சென்னை ராஜ்யம்" என்பதுதான் பெயராக இருந்தது. இது இளைஞர்களுக்குத் தெரிய நியாயமில்லை. அவர்கள் பாடப் புத்தகத்திலேதான் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

சென்னை ராஜ்யம் என்பது ஆந்திரத்திலே ஒரு பகுதியும், கேரளத்திலே ஒரு பகுதியும், இன்றைக்கு உள்ள கர்நாடக மாநிலத்திலே சில பகுதிகளும் இணைந்து 'மெட்ராஸ் பிரஸி

டென்சி — சென்னை ராஜதானி' என்ற பெயர் பெற்ற ஒரு பூபாகமாக விளங்கியது.

அப்பொழுதெல்லாம் சென்னை ராஜதானிக்கு ஆளுகின்ற தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களை 'முதலமைச்சர்' என்றுகூட அழைப்பதில்லை; 'பிரதமர்' என்றேதான் பெயர்.

மறைந்துவிட்ட சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பிரதமராகத்தான் இருந்தார் — இந்தியாவுக்கு அல்ல; சென்னை ராஜதானி என்கிற தமிழகம் முழுவதும் — ஆந்திரத்திலே — கேரளத்திலே — கர்நாடகத்திலே சில பகுதிகளைச் சேர்ந்த, அந்த இணைந்த ராஜ்யத்திற்கு — சென்னை ராஜதானிக்குப் பிரதமராகத் தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இருந்தார்கள்.

அந்த, சென்னை ராஜதானி பிறகு பிரிக்கப்பட்டு, ஆந்திரர்கள் தங்களுக்குத் தனி மாநில உரிமை வேண்டும் என்கின்ற போர்க் குரல் எழுப்பி, கேரளம் தனியாக — ஆந்திரம் — தனியாக — கர்நாடகம் தனியாகப் பிரிந்து தனி மாநிலங்களாக அவைகள் அரசோச்சக் கூடிய பக்குவத்தைப் பெற்ற கால கட்டத்தில் — தமிழகம் சில பகுதிகளை இழந்து, தமிழ் மாநிலமாக ஆனலும் கூட, இங்குள்ள அரசியல் கட்சிகள் தான் தங்களுடைய பெயருக்கு முன்னல் 'தமிழ்நாடு' என்கின்ற அந்தச் சொல்லைச் சேர்த்துக் கொண்டனவே அல்லாமல், அரசாங்கம் 'தமிழ்நாடு' என்கின்ற பெயரை சேர்த்துக் கொள்ளவில்லை. "சென்னை ராஜ்யம்" என்றேதான் பெயர் வழங்கியது.

நான் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி உறுப்பினனாக இப்போது இருப்பதைப் போல அப்போதும் இருந்தேன்; 1967-க்கு முன்பு.

அப்பொழுது இருந்த அமைச்சர் பெருமக்களைப் பார்த்து நான் கேட்ட போதெல்லாம் சொன்னார்கள்: 'தமிழ்நாடு தமிழ்நாடு — என்று பெயர் வைக்கவேண்டும் என்று

சொல்லுகிறீர்களே! அந்தப் பெயர் இலக்கியத்திலே இருக்கிறதா?' என்றெல்லாம் கேட்டவர்கள் உண்டு.

'இலக்கியத்திலே இல்லாத ஒரு பெயரை வைக்கச் சொல்கிறுயே நியாயம்தானு?'' என்று கூடக் கேட்டார்கள்.

நான் சட்டமன்றத்திலேயே சொன்னேன். ''இமிழ் கடல் வரைப்பில் தமிழகம்'' என்று சிலப்பதிகாரத்திலே இருக்கிறது. ஒரு வேளை சிலப்பதிகாரத்தை நீங்கள் இலக்கியம் என்று ஏற்றுக் கொள்ளவில்லையா?'' என்று நான் சட்டமன்றத்திலே கேட்டிருக்கிறேன்.

ஆனுல் நிறைவேறவில்லை.

அண்ணு அவர்கள்தான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற உடன் சென்னை ராஜ்யம் என்கின்ற இந்தப் பெயரை மாற்றி ''தமிழ்நாடு என்கின்ற பெயரை உருவாக்கி — இருந்த பெயரை அறிமுகப்படுத்தி 'தமிழகம்' என்று பெயரிடலாமா? 'தமிழ்நாடு' என்று பெயரிடலாமா? என்ற சர்ச்சை எழுந்த பொழுது, டெல்லியிலே இருந்தவர்கள் 'தமிழகம்' என்று சொன்னுல் எங்களால் சொல்ல அவ்வளவு சுலபமாக இருக்காது. எனவே, 'தமிழ்நாடு' என்றே இருக்கட்டும் என்று அவர்கள் கேட்டுக் கொள்ள, அதற்கேற்ப, பேரறிஞர் அண்ணு அவர்கள் 'தமிழ்நாடு' என்கின்ற பெயரை நம்முடைய மாநிலத்திற்குச் சூட்டுகிற நிகழ்ச்சியை கோலாகலமாகக் கொண்டாடி சட்ட மன்றத்திலே நிறைவேற்றி — அவரே, ''தமிழ்நாடு — தமிழ்நாடு — தமிழ்நாடு'' என்று மூன்று முறை சட்ட மன்றத்திலே சொல்லி எல்லா உறுப்பினர்களும் ''வாழ்க — வாழ்க — வாழ்க'' என்று கூறிய அந்த வரலாற்றுச் சம்பவம் என்றைக்கும் மறக்க முடியாத சம்பவமாகும்.

ஆக, சுய மரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்கிய அறிவார்ந்த கொள்கை நிறைவேற்றம் —

இந்தி ஆதிக்கத்திற்கு இங்கே தமிழ்நாட்டில் இடமில்லை. தமிழ் — ஆங்கிலம் என்கின்ற இரு மொழி கொள்கைதான் இங்கே உண்டே தவிர கட்டாய இந்தி இங்கே இருத்தல் ஆகாது — பள்ளிக்கூடங்களில் அதற்கு வேலை இல்லை என்கின்ற மொழிப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி—

தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான 'சென்னை ராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு, 'தமிழ்நாடு' என்று பெயர் வந்த அந்த வெற்றி —

இந்த மூன்றையும் அண்ணு அவர்களுடைய வாழ்க்கையிலே இருந்து அவருடைய இரண்டாண்டு கால ஆட்சியிலே இருந்து — அந்தச் சரித்திரத்திலே இருந்து யாராலும் பிரிக்க முடியாது.

அண்ணு அவர்கள் உடல் நலிவுற்று, அவர்கள் இனி உயிர் வாழ்வார்களா? என்ற ஐயப்பாட்டிற்குரிய ஒன்றுக ஆகி அந்தக் கால கட்டத்திலே சென்னை ராஜ்யத்தினுடைய பெயர் மாற்றத்தைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒரு மண்டபத்திலே விழா ஏற்பாடு செய்து அந்த விழாவிற்கு அண்ணு அவர்கள் அழைக்கப்பட்டபொழுது மருத்துவர்கள் எல்லாம், இந்த உடல் நிலையோடு நீங்கள் செல்லக் கூடாது. என்று தடுக்க, அப்பொழுது அண்ணு அவர்கள் சொன்னார்கள்: ''இருப்பது ஒரு உயிர். அது போகப் போவதும் ஒரு தடவை. ஒரு நல்ல காரியத்திற்காகப் போகட்டும்'' என்று சொல்லிவிட்டு, ''என்னுடைய மண்ணுக்கு தமிழ்நாடு என்கின்ற பெயர் வைக்கின்ற நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளாவிட்டால் அந்த உயிர் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நான் சென்றே தீருவேன்'' என நிகழ்ச்சிக்கு வந்தார்கள்.

'ஐந்து நிமிட நேரமாவது பேசுவார்களா? அந்த அளவிற்கு உடல் நலிவு ஏற்பட்டு தளர்வுற்று இருக்கிறார்களே' என்று எண்ணிக் கொண்டிருந்தோம். நீண்ட நேரம் பேசினார்கள்.

பேசிய பொழுது சொன்னார்கள்: தன்னைப் பற்றி தன்னிலை விளக்கம் அளித்தார்கள். "அண்ணாதுரை என்ன செய்தான் என்று கேட்கிறார்கள். அண்ணாதுரை நீண்ட காலம் ஆள முடியுமா என்றெல்லாம் மிரட்டுகிறார்கள். அண்ணாதுரையினுடைய ஆட்சி எவ்வளவு காலம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

"நான் அப்படிக் கேட்கின்ற என்னுடைய அன்புக்குரிய மாற்றூர்களுக்கு சொல்லுவேன்" என்று அண்ணா சொன்னார்; "நீங்கள் என்னுடைய ஆட்சியை மாற்றி விடலாம். என்னுடைய ஆட்சியை இல்லாமல் ஆக்கிவிடலாம். அண்ணாதுரை இனி ஆளவில்லை என்கிற நிலையை நீங்கள் உருவாக்கி விடலாம்.

"ஆனால் ஒன்றை மறந்து விடாதீர்கள். என்னுடைய ஆட்சிக் காலத்திலே நான் ஏற்படுத்தியிருக்கின்ற 'இரு மொழித் திட்டம்', 'இந்தித் திணிப்புக்கு இங்கு இனி இடம் இல்லை' என்ற அந்தத் திட்டம், சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருக்கிறேனே அந்தக் கொள்கை வெற்றி, 'சுயமரியாதைத் திருமணத்தை சட்டப் படி செல்லுபடியாக்க முடியும்' என்று ஆக்கிக் காட்டியிருக் கிறேனே—ஆகிய இந்தத் தீர்மானங்களை எல்லாம் நீங்கள் நிச்சயமாக மாற்ற முடியாது.

நான் இல்லாவிட்டாலும்கூட, என்னுடைய ஆட்சியே இல்லாவிட்டாலும்கூட, எனனுடைய கட்சியினுடைய ஆட்சியே இல்லாவிட்டாலும்கூட, இரு மொழித் திட்டத்தையோ — தமிழ்நாடு என்று வைக்கப்பட்ட பெயரையோ அல்லது சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற நிலையையோ யாராலும் மாற்ற முடியாது. அதை மாற்றிவிட்டு தமிழ்நாட்டில் எவரும் ஆட்சி செலுத்த முடியாது" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சொல்லிவிட்டு இன்னென்னையும் குறிப்பிட்டார்கள், "அந்த நிலை இருக்கிற வரையில் அண்ணாதுரை வாழ்ந்து கொண்டே இருப்பான்" என்று குறிப்பிட்டார்கள்.

அவருடைய பெயர் இருக்கும் என்று அண்ணு அவர்கள் அறுதியிட்டுச் சொன்னர்கள். அந்த நிலைதான் இன்றைக்கு.

யார் வந்தாலும், தமிழ்நாட்டிற்கு வருகின்ற—வடபுலத்திலே இருந்து வருகின்ற எந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களாக இருந்தாலும்கூட, தமிழ்நாட்டு மண்ணை மிதித்தால் அவர்கள் தமிழ்நாட்டு மக்களைப் பார்த்துச் சொல்லுகின்ற முதல் வார்த்தை, "நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம். பயப்படாதீர்கள்" என்று சொல்லி விட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டியதிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதற்கு அந்த விலையைக் கொடுத்து இருக்கிறார்கள்.

விலை என்றால் சாதாரண விலையா?

தங்கள் நரம்புகளை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

அதிலே மீட்டப்பட்ட வீணைதான் தமிழ் இசை அமுதாக இன்றைக்கு தமிழ்ச் சமுதாயத்து மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

தங்களுடைய கபால எலும்புகளை உடைத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

தங்களுடைய தேக்கு மரத் தேகங்களுக்கு எட்டுச் சிங்க இளைஞர்கள் தீயிட்டுக் கொண்டார்கள். உலகத்திலே மதத்திற்காகத் தீயிட்டுக் கொண்டு செத்தார்கள் மதக் குருக்கள் என்கின்ற வரலாற்றைப் படித்திருக்கிறோம்.

மொழிக்காக — மொழியைக் காப்பாற்றுவதற்காக தீயிட்டுக் கொண்டு செத்தார்கள் என்கின்ற வரலாறு உலகத்திலே தமிழ்நாட்டிற்கு மாத்திரம் உரிய வரலாறே தவிர, வேறு யாருக்கும் இல்லாத வரலாறு.

எனவே அப்படிப்பட்ட இளைஞர்கள் இன்றைக்கு தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டிய — தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஏற்றத்திற்கு தோள் கொடுக்க வேண்டிய கால கட்டம் மீண்டும் வந்திருக்கின்றது.

நான் இங்கே மாணவ நண்பர்களைப் பார்க்கிறேன். நண்பர்கள் என்று சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும்; மாணவத் தம்பிகளை எல்லாம் பார்க்கிறேன்; மாணவத் தங்கைகளைப் பார்க்கிறேன்; நீங்கள் எல்லாம் இந்தச் சமுதாயத்தினுடைய ஏற்றத்திற்கும், தமிழர்களுடைய நல் வாழ்விற்கும் பாடுபட வேண்டும்; பணியாற்றிட வேண்டும்.

இங்கே ஒரு ஒற்றுமையைக்கூடக் கண்டேன். நம் முடைய மாணவர் தலைவருடைய பெயர் ரவி.

ரவி என்பது வடமொழி.

கல்லூரி முதல்வருடைய பெயர் பத்மநாபன். அதுவும் வடமொழிதான்.

இரண்டும் வடமொழியாக இருந்தால்கூட அதற்குத் தமிழ்ச் சொல் ரவி என்றால் கதிரவன், கதிரவனே இங்கே மாணவர் பேரவையினுடைய தலைவராகப் பெற்று இருக் கிறீர்கள்.

கதிரவனுக்காக மலரக்கூடிய ஒரேயொரு மலர் தாமரை.

அந்தத் தாமரையை வடமொழியில் பதுமம் என்று அழைப்பார்கள். பத்ம மலர் என்பார்கள்.

எனவே ரவிவும் — பத்மாவும் இங்கே அமர்ந்திருக்கின்ற காட்சியினைக் காணுகின்றீர்கள்.

கதிரவனுடைய ஒளிபட்டு தாமரை மலர்வதைப் போல பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவு ஒளிபட்டுத் தமிழ்ச் சமுதாயம் மலர்ந்தது.

அப்படி மலர்ந்த சமுதாயம் கருகிவிடாமல் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை இளைஞர்களே நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டு இந்தப் பேரவையைத் தொடங்கி வைக்கிறேன்.

15—10—80 அன்று பொன்னேரி அரசினர் கல்லூரி விழாவில் ஆற்றிய உரை.



உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு என்ற கொள்கை யோடு வாழ்ந்து இந்தக் கலைக்கோயில்-அறிவாலயம் உருவா வதற்கு பெரும் பணி மேற்கொண்டு — மறைந்தாலும் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற தியாகராசர் அவர் களுக்கு, என்னுடைய இதயமார்ந்த நன்றியுணர்வைத் தெரிவித்து இந்த இளங்கோ மன்றத்தினுடைய தொடக்க விழாவில் என்னுடைய உரையை ஆற்ற முற்படுகிறேன்.

இளங்கோ மன்றத்தினுடைய தொடக்கவிழா; செங்குட்டுவன் மன்றத்தினுடைய விழாப்போல அவ்வளவு எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இளங்கோ புலவர்; எழுத்தில் வேகமிருந்தாலும் அவருடைய தன்மை, மென்மையானது. செங்குட்டுவன் அவ்வாறு அல்ல; களம் பல கண்டவன். இமயம்வரை படையெடுத்துச் சென்று பகையை முறியடித்து, கண்ணகிக்குச் சிலை வடிக்க கனகவிசயர் தலையில் கல்லேற்றி வந்தவன்.

இந்த மண்டபத்திற்குள்ளே நான் நுழையும்போது நீங்கள் காட்டிய எழுச்சி; சேரன் செங்குட்டுவன் போருக்குச்

சென்ற நேரத்தில் அவனுடைய வீரர்கள் எழுப்பிய முரசின் முழக்கத்தைப்போல இருந்ததேயல்லாமல், இளங்கோ மன்றத்தில் நடைபெறுகின்ற ஒரு இனிய நிகழ்ச்சியாக எனக்கு தெரியவில்லை. காரணம் எழுச்சிக் காவியத்தை என் முன்னுல் நான் இப்பொழுது பார்க்கிறேன். உணர்ச்சி ஓவியத்தை என் முன்னுல் நான் இப்பொழுது பார்க்கிறேன்.

மாலை அணிவித்தவர்கள் - வரவேற்றவர்கள் அத்தனை பேரும், என்னை வாழ்த்திப் பாராட்டியபோது நான் வந்திருக் கிறேன் என்பதில் அவர்கள் காட்டிய மகிழ்ச்சியைவிட ஏதோ ஒன்றைப் பறிகொடுத்து விட்டோம் என்பதில் உள்ள பரபரப்பு அதிகமாகத் தென்படுகிறது. (கை தட்டல்) நம் முடைய தாளாளர் திரு. கண்ணன் அவர்கள் நான் கல்லூரிக்குள் நுழைந்து அவரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, என்னிடத்தில் சொன்னார்: 66-ல் இந்த கல்லூரிக்கு வந்தீர்களாம்; அப்பொழுது நான் மிக மிக இளைஞன்; பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு; இப்போது வந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னுல் வருவதென்று சொன்னுல்; எதற்கு வருவதென்று, இராமயணம் படித்த உங்களுக்குத் தெரியும் (மகிழ்ச்சி - ஆரவாரம்) நான் இங்கே கம்பனைப்பற்றி பேசப் போவதில்லை. (மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரம்) இளங்கோ மன்றத்தைத்தான் தொடங்கி வைக்க வந்திருக்கிறேன்.

இந்த கல்லூரியில் தமிழ் மணம் கமழ்ந்திட வேண்டும் என்பதற்காகவும், தமிழ் உணர்வு செழித்திட வேண்டும் என்பதற்காகவும், தமிழர்கள் இன உணர்வு பெற்றிட வேண்டும் என்பதற்காகவும், தியாகராசர் அவர்கள், அருந் தொண்டு ஆற்றியது மாத்திரமல்ல; எங்களைப் போன்றவர் களை எங்களுக்கு வழி காட்டியாக இருந்தவர்களை, எங்களை ஒரு காலத்தில் தலைமை ஏற்று நடத்திக்கொண்டிருந்தவர்களை இந்தக் கல்லூரிக்கு அழைத்து பேசச் செய்த. முத

பெருமைக்குரியவராக தியாகராசர் அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் காட்டுவது நன்றி தன்மைக்கு அடையாளமாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாணவ மணிகள் எதிர்காலத்தினைப் பற்றி, சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவர்கள். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு நிகழ் காலத்தில் உள்ள நிலைமைகள் தடங்கலாக இருந்தாலும், கடந்த காலத்து வரலாறுகளும்—இலக்கியங்களும் அந்த சிந்தனைக்கு ஏற்ற உரங்களாக அமைந்திட வேண்டும்.

பேராசிரியர் பெருமக்களிடத்தில் சங்க இலக்கியப் பாடல்களை கேட்டவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். நான் நன்முக அறிவேன்; இருந்தாலும் உணர்ந்தவைகளையும்—அறிந்தவைகளையும் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துவதில் தவறில்லை.

நம்முடைய தாய் மொழி தமிழ்! மூத்த மொழி என்று பெருமையோடு பேசிக் கொள்கிறோம்; நம்முடைய மொழிக்குரிய இலக்கணம் மிகமிக தொன்மை வாய்ந்த இலக்கணம். தொல்காப்பியத்தை விட தொன்மை வாய்ந்த இலக்கண மானாலும் நமக்கு முழு உருவத்தில் கிடைத்த இலக்கணம் தொல்காப்பியம் என்கின்ற அளவிற்கு நம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழி பெருமை பெற்ற மொழியாகும்.

அத்தகைய இலக்கண எழிலைப் பெற்ற நாம்—இலக்கியச் செழிப்பைப் பெற்ற நாம்—வரலாறுகள் முழுமையாகக் கிடைக்கா விட்டாலும், அந்த வரலாறுகள் எல்லாம் வீர வரலாறுகளாகவே உடையவர்களாக இருந்த நாம்—இன்றைக்கு நாம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதென்றால், ஒரு கல்லூரியினுடைய மாணவன் படித்து, தேர்வு எழுதி, வெற்றி பெற்று, பட்டம் பெற்று, வெளியிலே செல்லுகின்ற நேரத்திலே ஏதோ உத்தியோகம் பார்க்கலாம்;

வேலை ஏதாவது கிடைக்குமா? அல்லது கிடைக்கிற வரையிலே மாதம் ஐம்பது ரூபாய்தான் கிடைக்குமா? (கை தட்டல்) அதாவது கிடைக்குமா? (மாணவர்கள் ஆர வாரம்) என்கின்ற இந்த நிலைமையிலே உள்ள எதிர்பார்ப்பல்ல—நான் உங்களிடத்திலே கோருவது!

பழந்தமிழர்களுடைய காலமே அப்படியே மீண்டும் வரவேண்டும் என்றும் நான் கூறமாட்டேன்.

ஆனல் பழந்தமிழர்களுடைய காலத்திலே நாம் பெற்றிருந்த அந்தப் பெருமைகள்—பழந்தமிழர்களுடைய காலத்திலே நாம் பெற்றிருந்த அந்த வளங்கள்—அறிவுச் செல்வங்கள் இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம்—நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம்—உலகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு வாழுகின்ற வகையிலே தமிழர்களுக்குக் கிடைத்திட வேண்டும்.

அந்த நிலையை நாம் உருவாக்கிட வேண்டும் என்பதற்காகத்தான் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்த சிந்தனைக்கு உரமாகத்தான் நம்முடைய பழைய இலக்கியங்களைப் புரட்டிப் பாருங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொல்காப்பியருடைய காலத்தில் நமக்குக் கடவுள்கள் இல்லாமல் போய்விடவில்லை. நம்முடைய நிலமே நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்ற நிலங்களாகும்.

ஐந்து நிலங்கள் என்று சொன்னலும்கூட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்தாவது நிலமாகப் பாலை என்ற பகுதியைச் சொன்னலும்கூட, நம்முடைய தென்னகத்தைப் பொறுத்த வரையில்—தமிழகத்தைப் பொறுத்தவரையில்—பாலை நிலம் என்பது

தனியாக எங்கும் சங்க காலத்திலேயோ, தொல்காப்பிய ருடைய காலத்திலேயோ இருந்தது கிடையாது.

பாலை என்பது அவ்வப்பொழுது மருத நிலத்திலும் உருவாகும்; முல்லை நிலத்திலும் உருவாகும்; அதைப் போலவே குறிஞ்சி நிலத்திலேயும் உருவாகும்.

வறண்ட காலம்தான், பாலை நிலப்பகுதி என்று கருதப் பட்டது.

எனவேதான், பாலை என்பது அவ்வப்பொழுது பற்பல நிலங்களிலே உருவாகின்ற காரணத்தினுல் ஐந்து நிலங்கள் என்று கூறுவதைவிட, நான்கு நிலங்கள் என்று கணக்கிட்ட தன் காரணமாகவே நானிலம் என்கின்ற பெயர்கூட வந்த தென்று புலவர் பெருமக்கள் கூறுவார்கள்.

அந்த நானிலத்தை நாம் திரும்பிப் பார்த்தால், அந்த நானிலத்தைப் பற்றி, தொல்காப்பியருடைய காலம் வரையிலே என்னென்ன சிறப்புகள் சொல்லப்படுகின்றன என்று பார்த்தால் இன்றைய தினம், கடவுளைப் பற்றி சொல்லப்படுகின்ற கருத்துக்கள்—கடவுள் உண்டா இல்லையா? என்று ஆராயப்படுகின்ற இந்தக் கருத்துக்கள்—இவைகளைப் பற்றி இல்லை என்பதற்கு ஆதாரம் தேடுகின்றவர்கள் பழந்தமிழர்களுடைய வாழ்க்கையிலே கடவுளுக்கே இடம் இல்லை என்றுகூட வாதிக்கக்கூடும்.

ஆனுல், பழந்தமிழர்களுடைய காலத்தில் கடவுளுக்கு இலக்கியங்களிலே இடம் இருந்திருக்கிறது. தொல்காப்பியம் அதையே சுட்டிக் காட்டுகிறது.

நான் நம்முடைய தியாகராசர் கல்லூரியினுடைய இலச்சினையைப் பார்த்தேன். அந்த இலச்சினையில் மேலே சூரியன்—ஒரு பக்கத்திலே யாழ்; கீழே எழுதப்பட்டிருக்கின்ற எழுத்துக்களில் 'அன்பும் அறிவுமே சிவம்' என்கின்ற எழுத்துக்கள்—இவைகளைக் கண்டேன்.

இப்பொழுதுதான் 'சிவம்' என்கின்ற அந்தச் சொல்லே காணமுடிகிறதே அல்லாமல், தொல்காப்பியருடைய காலத்திலே, அவர் வகுத்துத் தந்திருக்கின்றாரே, நான்கு நிலம், குறிஞ்சி—முல்லை—மருதம்—நெய்தல். இந்த நான்கு நிலங்களில் குறிஞ்சியில் உள்ளவர்கள் முருகனைத் தெய்வமாகவும், முல்லை நிலத்திலே வாழ்ந்தவர்கள் திருமாலைத் தெய்வமாகவும், மருத நிலத்திலே வாழ்ந்தவர்கள் வேந்தன் என்று கூறப்படுகின்ற இந்திரனைத் தெய்வமாகவும்—நெய்தல் நிலத்திலே வாழ்ந்தவர்கள் வருணனைத் தெய்வமாகவும் வழிபட்டார்கள் என்றுதான் இருக்கிறதே அல்லாமல் தொல்காப்பியர் காலம் வரையில் 'சிவம்' அல்லது 'சிவன்' என்ற வார்த்தைக்கு இடம் கிடையாது.

எனவே முருகன் முன்பே பிறந்து விட்டார்; சிவன் பிறகுதான் பிறந்திருக்கிறார். (பலத்த கை தட்டல்)

அதற்குப் பிறகு வேறு சில இனங்கள் இந்தியாவிலே வந்து குடியேறிய காரணத்தால் அந்த இனங்கள் சாதிப் பிரிவுகளைக் கொண்டு வந்தன என்று கூறமாட்டேன்—வரும்போது ஒன்றுகத்தான் வந்தார்கள்: வந்த பிறகு இங்கே பல்வேறு பிரிவு மக்கள்—தொழிலால் வேறுபட்டிருந்தார்கள்.

தொழிலால் வேறுபட்டிருந்த பல்வேறு பிரிவு மக்கள் வருணாசிரமத்தால் பிரிக்கப்பட்டார்கள். பிறப்பிலே வேறுபாடு உண்டு என்ற நிலை உருவாயிற்று.

பிறப்பிலே வேறுபாடு உண்டு என்ற நிலை உருவானது மாத்திரமல்ல; நான் முதலில் குறிப்பிட்ட முருகனை அன்னியில்— திருமாலை அன்னியில்— வருணனை அன்னியில்—இந்திரனை அன்னியில் பல்வேறு கடவுள்கள் அதற்குப் பிறகு தோன்றலாயின. நூறு, இருநூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று ஆயிரக்கணக்கான கடவுள்கள் தோன்றின.

இன்றைக்கும் ஒருவர்தான் கடவுள் என்று வாதிக்கக் கூடியவர்கள் திருமூலருடைய திருமந்திரத்தை எடுத்துக்

காட்டி அந்தக் காலத்திலே ஒரே கடவுளைத்தான் வழி பட்டார்கள் என்று ஆதாரத்தை எடுத்து வைத்தாலும்கூட திருமூலர் ஏன் அதைப் பாட முடிந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கத் தவறிவிடக் கூடாது.

'ஒன்றே குலமும் — ஒருவனே தேவனும்' என்று திருமூலர் பாடவேண்டிய இன்றியமையாத நிலை அவருக்கு ஏற்பட்டதற்குக் காரணமே ஆயிரக்கணக்கான கடவுள்களை வழிபடக்கூடிய அளவிற்கு தமிழ் மரபு மாறிவிட்ட காரணத் தினாலேதான்.

'ஒன்றே குலம்— ஒருவனே தேவன்' என்று திருமூலர் அன்றைக்கு எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதைத்தான் திருவள்ளுவரும்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

—என்று குறிப்பிட்டார். செய் தொழிலினுடைய வேற் றுமையின் காரணமாகத்தான் பல பிரிவுகள் இருக்க முடியுமே அல்லாமல், பிறப்பின் காரணமாக சில சாதிகள் இருக்க முடியாது என்று திருவள்ளுவர் அறுதியிட்டுக் கூறினர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்;
நீதி வழுவாநெறிமுறையின்— மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழி குலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி"

—என்ற பாடலும் அன்றைக்கு அறிவுரையாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தரப்பட்டது.

இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? சாதிப்பிரிவுகள் தமிழ்ச் சமுதாயத்தை புற்றுநோய் போலப் பற்றிக்கொள்ளத் தொடங்கிய காரணத்தினாலேதான் திருவள்ளுவருக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று அவர் சொல்ல வேண்டியிருந்தது.

ஏனென்றுல் சாதிகள் முதலிலே தொழில் வாரியாகப் பிரிந்து, பிறகு சாத்திர—சம்பிரதாய—ஆண்டவன் பெயரால் இயற்றப்பட்டு சாதிகளே இல்லே என்று கூறுவது ஆண்டவனுக்குச் செய்கின்ற துரோகம்— பாவம் என்று அச்சுறுத்தப் படுகின்ற சூழ்நிலே உருவாயிற்று.

ஆண்டவனுடைய தலேயிலே பிறந்தவர்கள் உயர்ந்த சாதிக்காரர்கள் என்றும், தோளிலே பிறந்தவர்கள் அடுத்த சாதிக்காரர்கள் என்றும், தொடையிலே பிறந்தவர்கள்— அதற்கடுத்த சாதிக்காரர்கள் என்றும், காலில் பிறந்தவர்கள் மிக மிக தாழ்ந்த சாதிக்காரர்கள் என்றும் எழுதி வைக்கப் பட்டார்கள்.

நான் வாதத்திற்காக ஒப்புக் கொள்கிறேன். அப்படியே கூடப் பிறந்து இருக்கலாம். ஆண்டவனுடைய நெற்றியிலும்; ஆண்டவனுடைய தோளிலும்; ஆண்டவனுடைய தொடையிலும்; ஆண்டவனுடைய காலிலும் கூடப் பிறந்திருக்கலாம்.

அதன் காரணமாக சாதிகள் வெவ்வேருக ஆகி இருக்கலாம். ஆனுல் நான் ஆண்டவனேப் பார்த்து அல்ல: இப்படிப்பட்ட ஒரு கற்பனேயை எழுதியோர்களேப் பார்த்து கேட்க விரும்புவது எல்லாம் ஆண்டவன் ஒருவன்தான். அவனுடைய உடலிலே எந்தப் பகுதியிலே பிறந்தாலும் அவன் மனிதனுகத்தான் இருக்க வேண்டும். இதில் ஏன் உயர்ந்தவன் — தாழ்ந்தவன் — மத்திமமாக வாழ்பவன் என்ற பேதங்கள்? அத்திமரம் இருக்கிறது. அத்திமரத்தின் உச்சியிலே இருக்கிற கொம்பிலேயும் காய் காய்க்கிறது, கிளேயிலும் காய்க்கிறது; வேரிலேயும் காய்க்கிறது. வேரிலே இருக்கிற காயும் அத்திக்காய்தான், அடிக் கிளேயிலே இருக்கிற காயும் அத்திக் காய்தான். நுனிக் கொம்பிலே இருக்கிற காயும் அத்திக்காய்தான்.

நுனிக் கொம்பிலே இருக்கிற காய் பறங்கிக்காய்; அடிக் கொம்பிலே இருக்கிற காய் புடலங்காய்; கீழே இருக்கிற — வேரிலே இருக்கிற காய் பாகற்காய் (கைதட்டல்) என்று

யாரும் சொல்வதில்லை. எல்லாம் எப்படி அத்திக்காய்களோ, அதைப்போலத்தான் ஆண்டவனுடைய தலைமுதல் கால் வரையிலே பிறந்திருக்கின்ற மனித சாதி அத்தனையும் ஒரே சாதியாக இருக்க முடியுமே அல்லாமல் (பலத்த கைதட்டல்) தனித்தனிச் சாதிகள் இருந்திட முடியாது என்கிற வாதத்தைத்தான், ஆண்டவன்பேரால் சாதிப் பிரிவுகளை நம்முடைய நாட்டிலே உருவாக்கியவர்களுக்கு சொல்லக் கூடியவர்களாக இருக்கிறோம்.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதியார் பாடிக் காட்டிய பிறகும், சாதிகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தச் சாதிகளை வீழ்த்துகின்ற பெரும் பணியினை இந்த இளமைக் காலத்திலே மாணவர்கள் மேற்கொண்டாக வேண்டும்.

இளமைக் காலம் கடந்து விடுமேயானால் அதற்குப் பிறகு உங்களையும் சாதிப் பிணி பற்றிக்கொள்ளும். இங்கே மாணவர்கள் என்ற ஒரே சாதி நீங்கள். இங்கே இருந்து வெளியே போனால்: நாயுடுகளாக ஆவீர்கள்: ரெட்டியார் களாக ஆவீர்கள்: முக்குலத்தோராக ஆவீர்கள், வன்னியர் களாக ஆவீர்கள்; செட்டியார்களாக ஆவீர்கள்.

ஆனால் இந்த மண்டபத்திலே கல்லூரியிலே நீங்கள் படிக் கின்ற காலகட்டம் இருக்கிறதே: நீங்கள் ஒரே சாதி – தமிழ்ச் சாதி. அந்த தமிழ்ச் சாதிக்கென்று ஒரு மொழி உண்டு. அந்த மொழி பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய மொழி; அந்த மொழிக்கு ஈடான மொழி உலகத்திலே இது வரையிலே தோன்றியது கிடையாது. அந்த மொழியைப் போல் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துத் தந்த மொழியும் வேறு எங்கும் கிடையாது.

அருமையான சங்க இலக்கியங்களைத் தந்திருக்கின்ற மொழி நம்முடைய மொழி. சங்க இலக்கியங்கள் நமக்குக் கருவூலங்களாகக் கிடைத்திருக்கின்றது என்றாலும் இங்கே பேசிய பேராசிரியர் ஒருவர் சங்க இலக்கியங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்தச் சங்க இலக்கியங்கள் வளர இந்த தியாக

சாயர் கல்லூரி எதிர்காலத்திலே நான்காவது தமிழ்ச் சங்கமாக ஆகிட வேண்டும் என்று ஒரு காலத்திலே பேரறிஞர் அண்ணு அவர்கள் எடுத்துச் சொன்னதை நினவூட்டி அந்தக் காலக் கட்டத்தை எதிர்பார்ப்பதாகச் சொன்னுரே, நான்காவது சங்கம் தொடங்குவது இருக்கட்டும் மூன்று சங்கங்கள் நமக்குத் தந்திருக்கின்ற முத்தாரங்கள் எத்தனை? எத்தனை?

அவைகளை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அந்த மூன்று சங்கங்கள் நமக்குத் தந்திருக்கின்ற அரிய கருவூலத்தை நாம் பயன்படுத்தி இருக்கிறுமா?

நம்முடைய சங்க நூல்கள் தனித் தனிப் பாடலுடைய தொகுப்புகளாக இருந்தபோதிலும், ஒரே நூல்தான் ஒரே ஆசிரியரால் முதன் முதலாகத் தமிழகத்திற்குத் தரப்பட்ட நூல்.

அதுதான் திருவள்ளுவர் யாத்துத் தந்த திருக்குறள்.

சங்க இலக்கியங்களில் வழிந்தோடுகின்ற சுவை சாதாரணமானதல்ல. அந்த இலக்கியச் சுவையை நாம் எண்ணி எண்ணி இறும்பூதெய்தலாம்.

நான் சொன்னேனே பாலை நிலம் பற்றி—அது நிரந்தரமானதல்ல என்ருலும்கூட, முல்லை நிலத்திலேகூட ஏற்படக் கூடும். குறிஞ்சியிலே கூட கண்டிடக்கூடும். மருதத்திலே கூட ஏற்படக்கூடும் என்று குறிப்பிட்டேனே, அந்தப் பாலை நிலத்தைப் பற்றி சங்ககால இலக்கியம் என்ன கூறுகிறது?

பாலையினுடைய வெப்பம் எப்படி இருக்கும் என்பதை சங்க காலத்துப் புலவன் விளக்குகிருன். கோடையினுடைய வெப்பத்தை விளக்க வடமொழியிலே ஒரு நூலில் சில வரிகள் உண்டு. சாகுந்தலத்தைத் தீட்டிய காளிதாசன் வருணிக்கின்ருன்! கோடையினுடைய வெப்பத்தை அவன் எழுதிக் காட்டுகிருன்.

பாம்பு ஒன்று, கோடையினுடைய வெப்பம் தாங்க முடியாமல் வயற்காட்டில் அங்கும் இங்கும் நெளிந்து நெளிந்து ஓடி வரவே அதனுடைய உடல், வெப்பத்தால் தகிக்கிறது.

அப்படித் தகிப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத அந்த நாகப்பாம்பு, தன்னுடைய வால் முனையை தரையிலே ஊன்றிக் கொண்டு, தன்னுடைய உடம்பு முழுவதையும் மேலே தூக்கி, தன்னுடைய உடம்பிலே வெப்பம் படாமல் படமெடுத்து நின்று ஆடிக் கொண்டிருக்கிறது.

வால்முனை மாத்திரம் தரையிலே ஊன்றப் பட்டிருக் கிறது. அந்த நேரத்திலே வெப்பம் தகிக்கின்ற காரணத்தால், நிழல் தேடி அலைகிறது. ஒரு தவளை. அதற்கு எங்குமே நிழல் கிடைக்கவில்லை. அங்கே இருக்கிற பாம்பின் நிழல், பாம்பின் நிழல் என்று அதற்குத் தெரியாமல், ஏதோ நிழல் கிடைத்தது என்று ஆறுதலாக தவளை, பாம்பின் நிழலுக்குக் கீழே வந்து உட்கார்ந்து கொள்ளுகிறது. தவளைக்குத் தெரிய வில்லை—தனக்கு நிழல் கொடுத்தது பாம்பு என்று. பாம்புக்குத் தெரியவில்லை. தன்னுடைய ஆகாரம் தனக்குக் கீழே காத்திருக்கிற செய்தி—அதற்கும் தெரியவில்லை.

இப்படிப்பட்ட ஒரு உறவு—இப்படிப்பட்ட ஒரு நிலை—காளிதாசனுடைய சாகுந்தலத்திலே கோடையை வெளிப் படுத்துவதற்காக ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் உதவி செய்கிறார்கள்.

ஆனால், சங்க காலத்துப் புலவன் பாலைக்கலி பாடுகிறான்.

இரண்டு மான்கள். ஆண்மான் ஒன்று; பெண்மான் ஒன்று. இரண்டும் கோடையினுடைய வெப்பம் தாங்க முடியாமல், இன்னல் அனுபவிக்கிற நேரத்தில் அங்கே ஆண்மான் என்ன செய்கிறது தெரியுமா? தானே அந்தக் கோடை வெப்பத்திலே நின்று கொள்கிறது! நின்று கொண்டு பெண்மானை அருகிலே அழைத்து என்மீது

கோடை சூரியனுடைய ஒளி விழுந்து அந்த நிழல் கீழே விழுகிறதல்லவா... அந்த நிழலில் நீ படுத்துக்கொள்!

"இன்நிழல் இன்மையால்
வருந்திய மடப் பிணைக்கு
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை"

கொடிய வெம்மையால் வருந்துகின்ற பெண்மானுக்குத் தன்னுடைய நிழலையே கொடுக்கின்ற ஆண் மான் என்று சங்கப் புலவன் பாடிக் காட்டுகின்றான்.

இந்தக் காலத்திலே ஆண் மான் — பெண் மானுக்கு அப்படி உதவி புரியுமா? (பலத்த சிரிப்பு)

ஆனால் நான் இங்கே சொல்ல வந்தது சங்கப் புலவன், ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, கோடையினுடைய வெப்பத்தைத் தணித்துக் கொள்ளுகின்ற அந்தக் காட்சியை நமக்குக் காட்டுகின்றான்.

காளிதாசன், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலேயே அங்கே அந்தக் கோடையினுடைய வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளுகின்ற காட்சியை நமக்குக் காட்டுகிறான்.

வாழ்க்கையோடு இணைந்திருக்கின்ற இலக்கியங்களை நம்முடைய தமிழ்ப் புலவர்கள் நமக்கு ஏராளமாகத் தந்திருக்கிறார்கள்— அப்படிப்பட்ட இலக்கியங்களைப் பெற்றிருக்கின்ற தமிழர்களாகிய நாம் தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களாகிய நாம், நமக்கென்று ஓர் எதிர்காலத்தை எழுதுகின்ற வாய்ப்பினை வீணுக்கிவிடக்கூடாது. அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். எத்தனையோ இலக்கியப் பெட்டகங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

திருக்குறளை எடுத்துக் கொண்டால், திருக்குறளிலே இல்லாதது எதுவுமில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு, தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்ல, இந்த உலகிற்கே பலஅரிய கருத்துக்களை திருவள்ளுவர் வாரி வாரி வழங்கியிருக்கின்றார்.

தன்னுடைய மகனுக்கு ஒரு தகப்பன் செய்ய வேண்டிய கடமை என்ன என்ற கேள்வியை வள்ளுவர் கேட்டுவிட்டு— அவர் சொல்கிறார்:

"தந்தை மகற்கு ஆற்றும்நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்!"

ஒரு தந்தை தன்னுடைய மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை, அவையத்தில் (உலகத்தில்) —சபை நடுவே முந்தி யிருக்கக் கூடிய பெருமைக்குரியவனாக அவனை ஆக்குவதுதான் என்று குறிப்பிடுகின்றார்.

அதே நேரத்தில்,

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்!"

என்றும் குறிப்பிடுகின்றார்.

ஒரு மகன் தந்தைக்காற்ற வேண்டிய உதவி என்ன வென்றால், "இவனுடைய தந்தையானவன் என்ன தவம் செய்தானோ — இவனைப் பெற்றெடுக்க" என்று உலகத்தார் பாராட்டுகின்ற அந்தப் பெரும் புகழைத் தன்னுடைய தந்தைக்கு மகன், தன்னுடைய நடத்தையின் காரணமாக வழங்கிட வேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அப்படிப்பட்ட செல்வங்களாக,

அப்படிப்பட்ட மக்களாக,

தியாகராசர் கல்லூரி மாணவர்கள்—ஏன்? மதுரையில் இருக்கக் கூடிய கல்லூரிகளுடைய மாணவர்கள் எல்லோரும் தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று இந்தத் திருக் குறளின் வாயிலாக உங்களை எல்லாம் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்று முப்பாலைப் பிரித்துத் தந்து, இந்த முப்பாலும் தமிழர்

களுக்குத் தப்பாமல் என்றென்றும் நல்வாழ்வை அளிக்கக் கூடிய அழகான அறிவுரைகளை வள்ளுவர் நமக்கு வழங்குகின்றார். அவைகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருக்குறளைப் போலவே நமக்கு வீரச் சுவையை—காதல் சுவையை—வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கக் கூடிய சங்க இலக்கியங்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அகநானூறு ஆனாலும், புறநானூறு ஆனாலும், இன்னும் பல்வேறு சங்க இலக்கியங்களானாலும் அவைகளையெல்லாம் நாம் பாதுகாத்தல் மட்டுமே போதாது; அவைகளையெல்லாம் படித்துப் படித்து அவற்றிலே நமக்குக் கிடைக்கின்ற தேன் துளிகளைச் சுவைத்துச் சுவைத்து—அதை மற்றவர்களுக்கும் அளித்து அளித்து மகிழ்ந்திட வேண்டும்.

நான் இந்த அரிய நேரத்தில்—உங்களையெல்லாம் சந்திக்கின்ற மாலை நல்வேளையில் புறநானூற்றினுடைய கடினமான நடையை எளிய நடையிலே மாற்றி எழுதிய ஒரு கவிதையை உங்களிடத்திலே கூறுவது என்னுடைய உள்ளத்திற்கு ஊக்கமூட்டுவதாக அமையும். உங்களையும் உற்சாகப்படுத்துவதாக அமையும்; நான் கையாண்ட இந்த முறையைப் போல நீங்களும் சங்க இலக்கியங்களைக் கையாள வேண்டும் என்பதற்கு வழி காட்டுவதாகவும் அமையும் அது. இங்கே என்னை வரவேற்று மாலை அணிவித்த மாணவக் கண்மணிகள் அவர்களே, முன்வந்து இயற்றிய கவிதை வரிகளைக் கேட்டேன். அவைகள் என்னைப் பற்றியதற்காக இல்லை: அதிலே வழிந்தோடிய தமிழ் இன்பத்தை நான் பாராட்டுகிறேன். என்னைப் பாராட்டினார்கள் என்பதற்காக இல்லை; எவ்வளவு அருமையாகத் தமிழை எடுத்துக் கோக்கிறார்கள். இவர்களுடைய கையிலே எதிர்காலம் தரப்படுமேயானால் தமிழர்களுக்கு எவ்வளவு பெரிய பெருமை காத்திருக்கிறது என்று நான் எண்ணினேன்.


அந்த எண்ணத்தின் காரணமாகத்தான் தொடர்ந்து நீங்கள் இந்தத் தூய பணியிலே ஈடுபட வேண்டும் என்று நான் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு புறநானூற்றிலே உள்ள கடினமான சொற்களையும் எடுத்து வைத்து— அது தமிழ்நாட்டு மக்களுக்கு எளிய முறையிலே புரிய வேண்டும் என்பதற்காக எனக்குத் தெரிந்த தமிழில் பல கவிதைகளை—கவிதையல்ல என்கின்ற பெயரில் நான் தீட்டி மகிழ்ந்திருக்கிறேன்..

(கலைஞர் எழுதிய "புறநானூற்றுத் தாய்" என்ற பாடலை, வீரம் கொப்பளிக்க அவரே கூறுகிறார். மாணவர்கள் எழுச்சி ஆரவாரம்! உற்சாகம்! கைதட்டல் நீண்டநேரம்)

அதை உங்களைப் போன்ற மாணவனாக இருந்த காலகட்டத்திலே எழுதினேன். (கைதட்டல்) அவ்வளவு வீரமாக எழுத இப்போது வருமா? எனக்கே தெரியாது. (கைதட்டல்)

எனவேதான் நான் உங்களை வேண்டுகிறேன்; விரும்புகிறேன்—உங்களால் எழுத முடியும் என்று! இதைப் போன்ற புறநானூற்றுப் பாடலை எளிய முறையிலே எழுதாவிட்டாலும் அந்தப் புறநானூற்றுத் தாய் மகிழ்ந்து பாராட்டிலுமே, அதைப் போன்ற தமிழ்ச் சமுதாயப் பிள்ளைகளாக—வீரர்களாக—தீரர்களாக தமிழ்நாட்டைக் காப்பாற்ற—தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்ற நீங்கள் பீடுநடை போடுங்கள் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்!

20—10—80 அன்று மதுரை தியாகராசர் கல்லூரி விழாவில் ஆற்றிய உரை.



கரும்பினை சுவைப்பதற்காக எறும்புகள் மொய்ப்பது உண்டு! அந்தக் கரும்பினையே பிழிந்து சாறுக வடிக்கின்ற கரும்பு ஆலைகளும் உண்டு! நான் இப்பொழுது கல்விச் சாலைக்கு வந்திருக்கிறேனு? கரும்பு ஆலைக்கு வந்திருக்கிறேனு? என்று எனக்கே தெரியவில்லை! (கைதட்டல்)

என் உடலில் உள்ள இரத்தமெல்லாம் வியர்வையாகப் பெருகிட உங்கள் முன்னுல் நின்றுகொண்டு இருக்கிறேன்.

நீண்ட காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட இந்த நெடிய மண்டபம் இப்படிப்பட்ட விழாக்களை இனிமேல் தாங்காது என்பதையும் வெகு விரைவிலே இந்த நெடிய மண்டபத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதையும் தொடர் புடையவர்களுக்கெல்லாம் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

என்பால் நீங்கள் கொண்டிருக்கிற அன்பும் ஆர்வமும், பற்றும் பாசமும் எவ்வளவு என்பதை கல்லூரியினுடைய முகப்பிலிருந்து நான் இறங்கியது தொடங்கி இந்த மேடை யிலே வந்து என்னை நீங்கள் தூக்கிப் போட்டது வரையில் (கைதட்டல்) உணர்ந்தே இருக்கிறேன்.

நான் இந்தக் கல்லூரிக்கு வருவது என்பதும் மாணவர் களுடைய பேரவைகளை — தமிழ் மன்றங்களை துவக்கி வைப்பது அல்லது அவற்றின் நிகழ்ச்சிகளில் கருத்துரை ஆற்றுவது என்பதும் புதுமையானது அல்ல.

ஆண்டுக்கு ஆண்டு என்னை அழைக்கின்ற கல்லூரிகளில் ஒன்றுக பச்சையப்பன் கல்லூரியும் திகழ்கிறது என்பதை அறிவேன். நான் ஆண்டு கொண்டு இல்லாவிட்டாலும் (கைதட்டல்) ஆண்டுக்கு ஆண்டு என்னை அழைக்கிறீர்கள்.

இந்தத் தொடக்க விழாவிற்கு வர வேண்டும் என்று என்னை நீங்கள் அழைக்கவந்த பொழுது உங்களுடைய ஆர்வத் தையும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் உத்வேகத்தையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனவேதான் கொஞ்ச நாட்களை ஒத்திப் போடலாம் என்று சொன்னாலும் உங்கள் முன்னால் அது பயன்படாது — பலிக்காது என்று புரிந்துகொண்டு உடனடியாக நாளைக் குறித்துத் தந்தேன்.

இந்தப் பதினெட்டாம்நாள் கட்டாயம் நீங்கள் பேசிட வேண்டும் என்று அன்புக்கட்டளை பிறப்பித்தீர்கள். என்னை நீங்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் அமைதியான முறையில் என்னை இந்த மண்டபத்திற்குள்ளே அழைத்து வந்திருப்பீர்களே யானால் இவ்வளவு களைப்பிற்கு நான் ஆளாகி இருக்க மாட்டேன்.

வியர்வை சிந்த உழைப்பவர்கள் உண்டு. வியர்வை சிந்தப் பாடுபடுபவர்கள் உண்டு. பேசிக் கொண்டே இருக்கும் பொழுது நேரமாக நேரமாக உணர்ச்சி பொங்கி எழுந்த காரணத்தால் வியர்வை சிந்துவதும் உண்டு. ஆனால் நான் மேடைக்கு வருவதற்கு என் உடலில் இருந்து ஒரு வியர்வை ஆறே பெருக்கெடுத்து ஓடவேண்டும் என்ற ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கின்றீர்கள். ஆனால் அந்த வியர்வைத் துளி ஒவ்வொன்றிலும் உங்களுடைய அன்பு கலந்த இரத்தத் துளி ஒளிவிடுவதை என்னால் உணரமுடிகிறது. (பலத்த கை தட்டல்)

நீங்கள் என்னிடத்திலே கொண்டு இருக்கின்ற பேரன் பிற்கு எப்படி நன்றி செலுத்துவது என்றே எனக்குப் புரிய வில்லை.

தமிழகத்திலே பல்வேறு கல்லூரிகளில் நடை பெறுகின்ற பலதரப்பட்ட துவக்க விழா, சிறப்பு விழா போன்ற நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பினை நான் தொடர்ந்து பெற்று வருகின்றேன். மாணவர்கள் எதிர்காலத்தைப் பூக்க வைக்கின்ற சமுதாயம், மாணவர்களை ஊக்கப்படுத்துவது என்னுடைய கடமை. எனவே நான் அந்தக் கடமை தவ றுமல் உங்களுடைய அழைப்பினை ஏற்று இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்றேன்.

தத்துவப் பேரவையினுடைய துவக்கவிழா என்பதால் நான் எதிர்பார்த்தேன். பேராசிரியர் டாக்டர் முத்துராமன் அவர்களும் கல்லூரியினுடைய முதல்வர் டாக்டர் சண்முக நாதன் அவர்களும் உரையாற்றி அவர்களுடைய உரையினை யும் நீங்களும் நானும் கேட்டு இடையிலே என்னை அழைத்து வந்தகாரணத்தால் ஏற்பட்ட களைப்பினையும் கொஞ்சம் போக்கிக் கொண்டு பேச எழலாம் என்று இருந்தேன். ஆனல் மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படுத்திக் கொண்டுதான் நான் உங்கள் முன்னல் பேச்சுக்குத் துவக்கம் செய்ய வேண் டிய நிலைமை எனக்கு ஏற்பட்டு இருக்கிறது.

இவ்வளவு அன்பினை நீங்கள் பொழிகிறீர்கள். ஆனல் இந்த அன்பினை நீங்கள் அமைதியாக கட்டுப்பாடாக என்னி டத்திலே காட்டியிருப்பீர்களேயானல் இன்னும் இந்த விழா சிறப்புற அமைந்து இருக்கும்.

'உனக்கு வயது ஐம்பத்தியெழு ஆகிறது. நீ அப்படி தான் அமைதிபற்றிச் சொல்வாய். நாங்களோ இருபதையும் எட்டாத வாலிப வயதினர். எங்கள் வயதில் நீயும் இப்படி தான் இருந்திருப்பாய்; இந்தத் துடிப்புத்தானே நாட்டிற்கு தேவை! சமுதாயத்திற்குத் தேவை! மொழியை வளர்க்கத் தேவை! இந்த துடிப்பைத்தானே நீ கூட மானசீகமாக விரும்பு

கிறுய். இருந்தாலும் எங்கள் முன்னுல் இவ்வளவு துடிப்பு கூடாது என்று பொய் சொல்கிறுயே, பொருத்தம்தானு?'' என்று உங்களுடைய விழிகள் என்னைப்பார்த்து பேசுவதை, கேட்பதை நான் உணராமல் இல்லை!

துடிப்புத் தேவைதான்! அந்தத் துடிப்பு ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட, துடிப்பாக இருந்திடல் வேண்டும். இராணுவ வீரர்களுக்குக்கூட விறுவிறுப்பும் துடிப்பும் தேவை. ஆனுல் அவர்கள்கூட ஒருவர் மேல் ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு போர்க்களத்திலே நுழைவார்களேயானுல் போரிலே வெற்றியை எதிரிகளுடைய கையிலே கொடுத்துவிட நேரி டும். ஆகவே தான் கட்டுப்பாடு தேவை என்பதை நான் எடுத்துரைத்துக் கொள்கிறேன்.

மனித சமுதாயம் தொடக்கத்தில் கட்டுப்பாடற்ற முறையிலேதான் வளர்ந்தது. கட்டுப்பாடும் ஒழுங்கும் நீதி யும் மனித சமுதாயத்திலே ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பல பெரியவர்கள் அரிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றூர்கள். கட்டுப்பாடு என்பதும் தத்துவத்திற் குள்ளே அடங்குகின்ற ஒன்றுதான். தத்துவத்திலே அடங் காத ஒன்றல்ல. தத்துவம் என்றுலே பலபேர் நாம் நெருங்க முடியாத ஒரு இடம் போலும் என்று கருதிக் கொண்டிருக் கிறூர்கள். தத்துவம் என்றுலே பாரதக் கதையிலே வருகின்ற பவளத்தீவிற்கு பார்த்திபனை அனுப்புவதாக படிக்கின்றுமே அதைப் போல படாத பாடுபட்டு பலரை வென்று கொண்டு வர வேண்டிய பவளக்கொடி அல்ல தத்துவம் என்பது. அதைப் போல பாரிஜாத மலருமல்ல. பல இன்னல்களுக்கு இடையே கொய்து வரவேண்டிய ஒன்றுமல்ல, அதைப் போலவே பல கடல் தாண்டி பல பொய்கைகளிலே புகுந்து தாமரைத் தண்டிலே நுழைந்து பாதாளத்திற்குச் சென்று அங்கே கட்டப்பட்டிருக்கிற பயங்கரமான குகைக்குள்ளே நுழைந்து அந்த குகையிலே எங்கோ ஒரு மூலையில் வைக்கப் பட்டு இருக்கின்ற ஒரு சிமிழைத் திறந்து அந்த சிமிழுக்குள் இருக்கின்ற வண்டைப் பிடித்து அழுத்தினுல் தான் மயில்

இராவணனுடைய உயிர் போகும் என்று புராணத்திலே எழுதி இருக்கிறார்களே, அப்படிக் கஷ்டப்பட்டு கண்டுபிடிக்க வேண்டிய கருவண்டும் அல்ல தத்துவம் என்பது!

அது நம்முடைய வாழ்க்கையிலே சாதாரணமாகத் தென்படக்கூடிய ஒன்றுதான். அதைத் தமிழிலே மெய்ப் பொருள் இயல் என்று கூறிவிட்டாலோ அல்லது உண்மை என்று உரைத்துவிட்டாலோ எல்லோருக்கும் சாதாரண மாகத் தெரியும்.

சில விஷயங்கள் சாதாரணமாகத் தெரியக்கூடாது என்பதற்காகவே அவை வேறுமொழிகளிலே சொல்லப்பட்டு யாருக்கும் புரியாத ஒன்றாக அது நம்மால் புரிந்துகொள்ள முடியாது என்கிற நம்பிக்கையின்மையை ஏற்படுத்தக் கூடியதாக ஆக்கப்பட்டு விட்டன. அந்த வரிசையிலே இடம் பெறக்கூடிய ஒரு சொல்தான் தத்துவம் என்பதாகும்.

தண்ணீர் கொடு என்று சொன்னால் இன்றல்ல ஒரு காலத்திலே அது கொச்சையாகக் கேட்பதாகப் பொருள். "ஜலம்" கொண்டு வா; "தீர்த்தம்" எடுத்துவா இப்படிச் சொன்னால்தான் கௌரவமாகக் கேட்பதாகப் பொருள். ஆகவேதான் உண்மை என்று மிகச் சாதாரணமாக உச்சரிக்கக் கூடிய அவர்கள் விரும்புகின்ற, கலைச்சுவையோடு உச்சரிக்க வேண்டுமேயானால் மெய்ப்பொருள் இயல் என்று சொல்லக் கூடிய ஒன்றைத்தான் தத்துவம் என்று சொல்லுகிறோம். அது மிக மிகச் சாதாரணமானது. அதே நேரத்தில் சாதாரண மானதுதானே என்று அதை அலட்சியப்படுத்திவிடவும் முடியாது.

நம்முடைய வாழ்க்கையிலே தொடர்ந்து தொய்வு இல்லாமல் இணைந்து பிணைந்து இருக்கின்ற ஒன்றுதான் தத்துவம். தத்துவத்தை உண்மை என்று பொருள் கொள்கிற நேரத்தில் உண்மை வேறு—வாய்மை வேறு என்பதையும் நாம் அறிந்து கொண்டாக வேண்டும். வாய்மை என்ப

தற்கு வள்ளுவர் தருகின்ற பொருளே அழகானதாகும். அற்புதமானதாகும்.

உண்மையும்—வாய்மையும் ஒன்றுதான் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. இன்னமும்கூட எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் உண்டு! உண்மை வேறு! வாய்மை வேறு!

வாய்மை என்பது பிறருக்குத் தீங்கு இல்லாமல் சொல்லப்படுகின்ற ஒன்றிற்குப் பெயர். யாருக்கும் எந்தவிதக் கெடுதியும் வராது இந்த வார்த்தையினுல் என்கின்ற அந்த உறுதியோடு சொல்லப்படுகின்ற வார்த்தைகள் வாய்மையின் பால் வைக்கப்படுகிறது. உண்மை அதற்கு அடுத்த கட்டம் தான்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்றார் வள்ளுவர்.

பொய்மைகூட வாய்மையினிடத்திலே வைக்கப்பட்டு விடும். புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனின்—யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாத நன்மையை உண்டாக்குமென்றால் பொய் என்பது கூட வாய்மை என்ற இடத்திலே வைக்கப் பட்டுவிடும் என்கிறார் அது எவ்வாறு?

நான் வள்ளுவரை வைத்தே உங்களுக்கு ஒரு நாடக ஓவியத்தை தீட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு வேடன் வேகமாக ஒரு மானைத் தூரத்தி வருகிறான். அழகான புள்ளிமான்குட்டி. அது துள்ளி ஓட வேண்டிய தோட்டத்தில் ஓட விடாமல் அதைக் கொன்றுவிட வேண்டும் என்கிற விருப்பத்தோடு வேடன் துரத்திவர, அது எங்கெல்லாமோ சுற்றி இறுதியாக வள்ளுவரின் இல்லத்திற் குள்ளே நுழைந்துவிட, வாயிற்புறத்திலே உட்கார்ந்து குறள் தீட்டிக் கொண்டிருக்கிற வள்ளுவர் தன்னைக் கடந்து தன்

வீட்டுக்குள்ளே மான்குட்டி சென்றதைக் காணுகிறார். பத்து நிமிடத்திற்குப் பிறகு வேடன் அங்கே ஓடி வருகிறான். ஓடி வந்து வள்ளுவரைப் பார்த்துக் கேட்கிறான். "இந்தப் பக்கம் ஒரு மான்குட்டி வந்ததா?" என்று.

பொய் சொல்வதே தீது என்று கருதுகிற வள்ளுவர் என்ன சொல்லி இருக்க வேண்டும்? "ஆமாம், வந்தது! வீட்டிற்குள்ளேதான் இருக்கிறது" என்று சொல்லி இருக்க வேண்டும். சொல்லவில்லை; சொன்னால் வேடன் உள்ளே நுழைந்த அந்த மான்குட்டியை இழுத்துச் சென்று கொன்று தின்று இருப்பான். எனவே "வரவில்லையே" என்கிறார். வள்ளுவரா பொய் சொல்லுவார் என்று எண்ணிக் கொண்டு வேடனும் வேறு பக்கம் போய்விடுகிறான். அதற்குப் பிறகு வள்ளுவருடைய மாணவன் கேட்கிறான். "பெருந்தகையே, பொய்யே சொல்லாத தாங்கள் இப்படி ஒரு பொய் சொல்வதற்கு காரணம் என்ன!" என்று கேட்கிறான். அப்பொழுதுதான் வள்ளுவர் சொல்கிறார்: 'நான் சொன்னது பொய்யா? உண்மையா? என்பதல்ல. வாய்மையா, அல்லவா என்பதை ஆராய்ந்து பார். பிறருக்குத் தீங்கு செய்யாத ஒன்றைச் சொன்னால், அதற்குப் பெயர் வாய்மை. எனவே நான் சொன்ன பொய்யையும் அந்த வாய்மையினிடத்தில் வைக்கப்படும்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"

என்றார்.

உண்மை வேறு! வாய்மை வேறு! அந்த உண்மை எப்படி இருக்க வேண்டும்? எது உண்மை? பச்சையப்பன் கல்லூரியில் தத்துவக் கலைக்கழகத்தில் கருணாநிதி பேசிக் கொண்டு இருக்கிறான் என்பது உண்மை! பேசியதாக நாளைக்குச் செய்தி வரும்! அது உண்மை! இவன் யார்? இவன் மனிதன்! அது உண்மை!

தந்தை பெரியார் அவர்கள் தத்துவம் பற்றி ஒரு முறை உரையாற்றிய பொழுது குறிப்பிட்டார்.

"தத்துவம் என்பது உண்மையென்றுல் நான் ஒப்புக் கொள்கிறேன். உண்மைதான் என்பதை. ஆனல் யாராவது பச்சை உண்மையைப் பேசுகிறுர்களா?" என்று பெரியார் ஒரு கேள்வியைக் கேட்டார்.

'பச்சை உண்மையை யாராவது பேசினுர்களா?' என்றுகேட்டு விட்டுச் சொன்னுர், "மனிதனைப் பார்த்தேன் என்றுசொன் னுல் சட்டை போட்ட, வேட்டி கட்டிய, கண்ணுடி அணிந்த துண்டு போட்ட ஒரு உருவத்தைத்தான் பார்க்கிறேரும், அல்லது கோட்டு அணிந்த, சூட்டு உடுத்திய,பூட்ஸ் மாட்டிய தொப்பி வைத்துக் கொண்டிருக்கிற..." (பலத்த ஆரவாரம்) நான் உங்களோடு இருக்கிறேன். நீங்கள் எங்கேயோ போகி றீர்கள். "பூட்ஸ் அணிந்த சூட் அணிந்த கோட் அணிந்த தொப்பி வைத்துக் கொண்டிருக்கிற" என்று சொன்னேன்! எனவே வேறெங்கும் தயவுசெய்து சொல்லாதீர்கள். நான் அப்படி உங்களை இழுத்துச் செல்ல விரும்பவில்லை. அந்த ஈனத்தனமும் எனக்குக் கிடையாது. (கைதட்டல்), "இப்படி உடைகள் அணிந்திருக்கிற உருவத்தைக்காட்டி இது மனிதன் என்று சொல்லுகிற நேரத்திலே அங்கே உண்மை வெளிப்பட வில்லை." பெரியார் சொல்கிறுர். "மனிதன் என்றுல் எந்த உடைகளுமற்ற ஒரு உருவத்தைக் காட்ட வேண்டும். இவன் தான் மனிதன் என்று காட்ட வேண்டும். அதை எப்படி இப்போது காட்ட முடியவில்லையோ, அதைப்போலத் தான் இந்த உலகத்திலே மக்களுக்கு உணர்த்த வேண்டிய பல உண்மைகளை நாம் உணர்த்தாமலே இருக்கிறேரும். நான் பச்சையாகப் பல உண்மைகளைச் சொல்கிறேன். எனவே நான் இந்தச் சமுதாயத்திலே பலரால் கண்டிக்கப்படுகிறேன்; பல பேருடைய அதிருப்திக்கு ஆளாகிறேன்" என்று தந்தை பெரியார் அவர்கள் தத்துவப் பேருரையை ஒருமுறை ஆற்றிய நேரத்திலே குறிப்பிட்டது எனது நினைவிற்கு வரு கிறது.

இயற்கை ஞானம்தான் தத்துவம். தத்துவம் என்பது தனியான ஒன்றை மாத்திரம் குறிப்பது அல்ல. தத்துவத்திலே அரசியல் கருத்துக்கள் உண்டு! தத்துவம் சமுதாயத்தைச் சுற்றிச் சுழல்வதும் உண்டு. தத்துவம் பொதுடமையை மணக்கச் செய்வதுமுண்டு. தத்துவம் நன்முறைகளை வரவேற்பதும் உண்டு! வன்முறைகளைக் கண்டிப்பதும் உண்டு.

மனிதன் பிறக்கும் பொழுது எந்தத் துணையோடும் பிறப்பதில்லை என்று சொல்லுகிறோம். அவனுடைய இறுதிவரை அவனோடு இருப்பது எவ்வளவு ஆருயிர் நண்பர்களாக இருந்தாலும் நிழல் ஒன்றுதான் அவனோடு இருப்பது என்று சொல்கிறோம். இல்லை. மனிதன் பிறக்கும்பொழுதே சேர்ந்து பிறந்து இறுதி வரையிலே அவனோடு சேர்ந்து இருப்பது ஒன்றே ஒன்றுதான்! அதுதான் மரணம்! அதைப் போல வேறு யாரும் அவனுடன் சேர்ந்து இருப்பதே இல்லை. ஆனால் அந்த மரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் தத்துவவாதிகள் என்ன சொல்கிறார்கள்? வெவ்வேறு கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். "மரணம் என்பது மனிதனுடைய உயிர் அவனது உடலிலே இருந்து பிரிந்து வெளியே சென்று விடுகிறது. அதுதான் மரணம்" என்று சொல்கிறார்கள்.

ஆனால் அந்த உயிர் போய்விடுகிறது என்று சொல்லப்படுவதை நாம் ஒத்துக் கொள்கிறோமா? உயிர் என்ற ஒரு சொல் புழக்கத்திலே இருக்கிறது. ஆனால் உயிர் போய் விடுகிறது—உயிர் நீங்கி விடுகிறது என்றெல்லாம் நாம் வழக்கமாகச் சொல்லுகின்ற வாசகங்களாக இருக்குமேயல்லாமல் உயிர் எங்கே போகின்றது? எங்கிருந்தாவது வந்தால் அல்லவா அது இங்கிருந்து விடுவித்துக் கொண்டு போக வேண்டும்? உயிர் என்பது வருவதும் அல்ல போவதும் அல்ல.

ஒரு இயந்திரத்திலே இருக்கின்ற பல்வேறு விசைகள் எல்லாம் கூடி அந்த இயந்திரத்தை இயங்கச் செய்வதுபோல் மனிதனுடைய உடலிலே பல்வேறு உறுப்புக்கள் மனிதனை

இயக்கிக் கொண்டு இருக்கின்றன. மனிதன் குறிப்பிட்ட ஒரு நாளில் காலையில் ஏழு மணிக்கோ எட்டு மணிக்கோ தன்னுடைய உயிரைப் போகச் சொல்லிவிட்டான் என்று யாராவது சொல்லி இருக்கிறார்களா? அல்லது எந்த உறுப்பி லும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் ஒரு மனிதனு டைய உயிர் பிரிந்து விட்டது என்று யாராவது சொல்லி இருக்கிறார்களா? இல்லை! ஈரலிலே கோளாறு வரலாம்; சிறு நீரகத்திலே கோளாறு வரலாம்! நரம்பியல் மண்டலங் களிலே கோளாறு வரலாம்! மூளை போன்ற உறுப்பிலே நோய் நொடிகள் ஏற்படலாம். இருதயத்திலே நோய் ஏற்படலாம். இப்படி எங்காவது நோய் ஏற்பட்டு அது பரவி இறுதியாக இதயத்தினுடைய துடிப்புகள் நின்று, அது நின்ற காரணத்தினால் அது அழுத்தி வெளிப்படுத்தி மறுபடியும் உள்ளே இழுக்க வேண்டிய மூச்சு நின்று விட்டபிறகு மனி தனுடைய உயிர் அவனிலேயே அடங்கி விடுகிறது அல்லா மல் அது எங்கிருந்தும் வாவுமில்லை. விடை பெற்றுக் கொண்டு போகவும் இல்லை. அசைவு நின்று விடுகிறது! அவ் வளவுதான்! இதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

உயிர் என்ற ஒன்றை ஒத்துக் கொண்டால், பிறகு அதற்கு ஆத்மா என்கின்ற அணிகலனையும் பூட்டி அந்த ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு அப் படிச் சாந்தியடைய வேண்டுமேயானால் என்னென்ன தான தருமங்களைச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளையும் உருவாக்கிக் கொண்டு அந்தத் தானத் தருமங்களை யார் யாருக்குச் செய்ய வேண்டும், எவ்வளவு செய்ய வேண்டும் என்ற கணக்கையும் பார்த்து இவ்வளவையும் செய்கிறோம்.

ஆத்மா என்ற ஒன்றே இல்லை என்பது பகுத்தறிவுவாதி களுடைய வாதம். நம்முடைய பேராசிரியர் முத்துராமன் அவர்கள் அதிலே வேறுபடக்கூடும். ஏனென்றால் என்னை நேற்றைய தினம் இந்த விழாவிற்கு வருக என்று அழைப் பதற்காக அழைப்பிதழைத் தர வந்தபொழுது அவர் என்

னிடத்திலே வழங்கிய புத்தகத்தின் பெயர்— அவர் எழுதிய தமிழ் நூல் 'சைவ சித்தாந்தம்' என்பதாகும். எனவே நான் சொல்லுகின்ற இந்தக் கருத்துக்கள் அவருடைய கருத்துக்களுக்கு வேறுபாடானவையாக இருக்கலாம். வேறுபாடான கருத்துக்கள் இருப்பது தவறல்ல. எப்படி எனக்கு வேறுபாடான கருத்துக்கள் உள்ள நூலை அவர் எனக்கு வழங்க உரிமை படைத்திருக்கிறாரோ அதைப் போல அவருக்கு வேறுபாடான கருத்துக்களை நான் வழங்குவதற்கும் அவர் எனக்கு உரிமை அளித்திருக்கிறார் என்றுதான் நான் எண்ணி உங்கள் முன்னால் கூறிக் கொண்டிருக்கிறேன்.

ஆத்மா உண்டென்று நம்மிடத்திலே சொல்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள்? அந்த ஆத்மா நம்மிடத்திலிருந்து பிரிந்து அலைந்து திரிந்து பிறகு இன்னொரு உடலில் புகுந்து மறுபிறவி எடுக்கிறது. அடுத்த ஜென்மம் எடுக்கிறது என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் ஆண்டு தோறும் அந்த ஆத்மாவைத் திருப்திப்படுத்த மேல் உலகத்திலே இருக்கிற அந்த ஆத்மாவிற்காக நாம் இங்கே இருக்கிற புரோகிதரிடத்தில் திதி—திவசங்களைச் செய்து அவர்களிடத்திலே காய்கறிகளை, சொர்ணதானத்தை, கோதானத்தை இத்தனையும் வைத்து அந்த ஆத்மாவைச் சாந்தப்படுத்த வேண்டும் என்று சொல்கிறோம். எவ்வளவு முரண்பாடு?

இந்த ஆத்மா இன்னொரு உடலிலே போய் அடுத்த ஜென்மம் எடுக்கிறது என்று சொல்லி ஒரு கருத்தையும் சொல்கிறோம். அதே நேரத்தில் மேலுலகில் சஞ்சரித்துக் கொண்டுள்ள அதே ஆத்மாவை சாந்தப்படுத்த ஆண்டு தோறும் அதற்கென நம் வீட்டிலே புரோகிதரை வைத்து திதி—திவசம் செய்திட வேண்டும் என்றும் சொல்கிறோம். மறுபிறவி எடுத்த ஆத்மா பிறகு எங்கே மேல் உலகத்திலே உட்கார்ந்து கொண்டு இருக்கப் போகிறது, (சிரிப்பு) அதற்கு எதற்காக பிறகு ஆண்டுதோறும் திதி—திவசம்? (கைதட்டல்)

இந்தப் பகுத்தறிவு வாதங்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு விடை கிடைக்காத காரணங்களினுல்தான், நாங்கள் பல நேரங்களிலே வெறுக்கப்படுகிறோம் அல்லது கண்டிக்கப்படுகிறோம்; கடுமையான வார்த்தைகளால் தாக்கப்படுகிறோம்.

தத்துவத்தை எப்படி வேண்டுமானுலும் கையாளலாம், அது ஒரு இரும்புத் துண்டு போன்றது. இரும்புத்துண்டை வீரம் செறிந்தவர்கள் பயன்படுத்தக்கூடிய போர் வாளாகவும் செய்யலாம், சம்மட்டியாகவும் அமைக்கலாம். ஆணியாகவும் செய்யலாம். அதைப் போலத்தான் தத்துவத்தை அவரவரும் தங்கள் இயல்பிற்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம். தத்துவ மார்க்கங்கள் ஆண்டவன் வழியிலே செல்கிற மார்க்கங்களாகவும் மதவழியிலே செல்லுகின்ற நிலைமையிலும், பகுத்தறிவு வழியிலே மட்டும் பயன்படுத்தப்படுவதாகவும் உலகில் பல மேதைகளால் கையாளப்படுகின்றன.

அப்படிப்பட்ட தத்துவக் கோட்பாடுகளைப் பயிலுகின்ற மாணவர்கள் அனைத்தையும் கற்றிட வேண்டும். எல்லா மலரிலும் வண்டு சென்று தேனை சேகரிக்கிற காரணத்தினுலே தான் தேனுக்கு அதிகமான சக்தி உண்டு என்கிறார்கள். காரணம் பல்வேறு மலர்களிலே வண்டு சென்று அமர்ந்து அந்த மதுவினை சேகரிக்கின்ற காரணத்தால் தேன் சக்தி வாய்ந்த ஒரு மருந்து என்று கூறப்படுகிறது. அதைப் போலப் பல்வேறு கருத்துக்களையும் மாணவர்கள் உய்த்து உணர வேண்டும்.

மலர்களிலே— பல மலர்களிலே மொய்க்கின்ற வண்டாக இருக்க வேண்டும் என்று கருணுநிதி சொல்லி விட்டான் (ஆரவாரம்) என்று எண்ணிடாமல் தயவுசெய்து உவமையைத் தத்துவத்தோடு நிறுத்துங்கள். (பலத்த ஆரவாரம்)

அப்படி நாம் அறிந்துகொள்ள வேண்டிய, தெரிந்து கொள்ள வேண்டிய, ஆராய வேண்டிய கருத்துக்களை

எல்லாம் நாம் அறிந்து எப்படி அருமருந்தாக—தேன் பயன் படுகிறதோ அதைப் போல நம் வாழ்க்கைக்குப் பயன்படுத்தி யாக வேண்டும்.

இதுதான் முடிந்த ஒன்று என்றல்ல. இன்னும் ஆராய வேண்டிய—சிந்திக்க வேண்டிய பல கருத்துக்கள் நாட்டிலே இருக்கின்றன. அவைகளுக்கு நம்முடைய நேரத்தை—நினைப்பை செலவழித்தாக வேண்டும்.

தத்துவம் நாம் இங்கு எடுத்துக் காட்டிய மனித உணர்வுகளோடு—கடவுள்—மத—அறிவியக்க வாதங்களோடு நின்று விட்டதா என்றால் இல்லை. மனித சமுதாயம் தோன்றுவதற்கு முன்பு சூரியனிலிருந்து பூமி ஒரு கோளாக வெடித்துச் சிதறி, நெருப்புப் பிழம்பாக இருந்து எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த நெருப்பின் ஜுவாலை அடங்கி இன்னமும் பூமியின் மத்திய பாகத்திலே அந்த நெருப்பு இருக்கிற காரணத்தால் அது எரிமலையாகக் குமுறுகிறது என நிலநூல் கலையைப் படிக்கின்ற நாம் உணர்ந்திருக்கிறோம்.

பூமியிலே மனித ஜீவன்கள் என்றோ தோன்றின என எண்ணும் பொழுது மனித உயிர்களுக்கு முன்பு மிருகங் களும், மிருகங்களுக்கு முன்பு பூச்சி புழுக்களும் தோன்றின என்பதும் அதனுடைய பரிணம வளர்ச்சிதான் மனிதன் என்பதும் இந்த மனிதனுடைய அமைப்பு முறைகளும், உறுப்புக்களும்கூட இன்னும் கோடிக்கணக்கான ஆண்டு களுக்குப் பிறகு மாறக்கூடும் என்பதும் இன்றைக்கு நம்முடைய அறிவியக்க விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சி தெரிவித்துக் கொண்டிருக்கின்ற பேருண்மைகள்!

முதலில் காடுகளிலே திரிந்தார்கள். ஆடையில்லாமல் திரிந்தார்கள். ஆணும் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் கூச்சமில்லாமல், திரிந்தார்கள். ஒருவரோடு ஒருவர் உடல் உறவு கொள்கிறார்கள். உடல் உறவு கொண்டவர்கள் சிறிய சிறிய குடும்பங்களாக ஆனார்கள். அந்தக் குடும்பங்கள்

கூட தாய் என்றும் தந்தையென்றும் உறவுமுறை பாராமல் ஒருவரோடு ஒருவர் உடல் உறவு கொண்டார்கள். குடும்பத்திலே ஒருவன் இறந்து விட்டால் அந்த நேரத்திலே குடும்பத்திலே இருப்பவர்கள் பசித்து இருந்தால் பசித்த நேரத்திலே மானை, புலியோ வேறு மிருகங்களோ தின்பதற்கு கிடைக்காவிட்டால் தன் குடும்பத்திலே செத்துப் போன அந்தப் பிணத்தையே தின்றார்கள். இப்படி உருவான சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து விரிவடைந்து. விரிவடைந்த பிறகு தனக்குத்தானே சில காட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிற நேரத்திலே யார் வலிமை மிக்கவனுக இருக்கிறானே அவன் நம்மைக் காப்பான் என்று நம்பி அந்த வலிமையானவனிடத்திலே அந்தக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றுகிற உரிமையை விட்டு அப்படி அவர்களைத் காத்தவன் காவலனுகி அந்தக் காவலனே அரசராகி, அன்றைக்கு ஆன காவலன்தான் இன்றைக்கும் நாட்டை ஆளுகின்றவனை காவலன் என்று அழைக்கின்ற அளவிற்கு மனித சமுதாயம் உருவாகியது.

அப்படி அமைந்த காவலன் சில நேரங்களில் மற்ற பிரிவினரை பக்கத்திலே இருக்கிற வேறு குழுக்களை அடக்கி ஆளவும், அதன் காரணமாகப் போர்மூண்டு, அந்தப் போருக்குத் தேவையான கற்காலக் கருவிகளும் அதற்குப் பிறகு இடைக்காலப் போர்க்கருவிகளும் இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பிறகு யார் ஒருவன் அதிகப் போர் படைக்கலன்களை உடையவனுக இருக்கிறானே அவன்தான் வலிமை வாய்ந்தவன். அவனை யாரும் வெல்ல முடியாது என்கின்ற ஆதிக்க புரிகளும் உலகத்திலே உருவாயின. கட்டுப்பாடற்ற ஒரு சமுதாயத்திற்கும் கட்டுப்பாடுள்ள ஒரு சமுதாயத்திற்கும் இடையே தோன்றிய மேதைகள்தான் அரசியல் தத்துவத்தை உலகிற்கே போதித்தார்கள்.

ஐரோப்பியக் கண்டத்தினுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் 15-ஆம் நூற்றுண்டு வரையிலே மூடநம்பிக்கையிலே ஆழ்ந்து போயிருந்தது என்றும் 16-ஆம்நூற்றுண்டிலே

தான் ஐரோப்பா மறுமலர்ச்சி பெற்ற ஐரோப்பாவாக தோன் றிடத் தொடங்கியது என்றும் அதனை ஆங்கிலத்திலே "Period of Renaissance" என்று அழைத்தார்கள் என்றும் நாம் படிக்கிறோம்.

15-ஆம் நூற்றாண்டு வரையிலே மூட நம்பிக்கையிலே அமிழ்ந்து கிடந்த ஐரோப்பா மறுமலர்ச்சியின் காரணமாக 20-ம் நூற்றாண்டில் உலகத்திற்கே ஒளி பாய்ச்சக் கூடிய அள விற்கு வளர்ந்தது என்று சொன்னால் மிகையாகாது.

அரசியல் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருந்த நிலையைத் தான் "Natural Condition" அதாவது கட்டுப்பாடு இல்லா மல் இயற்கையின் வழியின்படி மனிதர்கள் அவரவர்கள் நடந்து கொண்ட தன்மை "Natural Condition" என்று இருந்தது.

கட்டுப்பாடு உள்ள தன்மை ஏற்பட்ட பிறகுதான் "Political condition" என்ற அளவிற்கு ஒருஅரசியல் தன்மை அன்றைக்கு ஏற்பட்டது. அந்தக் கட்டுப்பாட்டை உருவாக்க அரசு தேவைப்பட்டது. அந்த அரசு எப்படி இருக்க வேண் டும் என்பதைப் பற்றி 16, வது 17வது நூற்றாண்டிலே ஹாப்ஸ், லாக், ரூசோ என்ற மூன்று மேதைகளும் அரிய கருத்துக்களை வெளியிட்டார்கள். அதிலே ஹாப்ஸ் முதன்முத லாக வெளியிட்ட கருத்து அவருடைய காலத்தை ஒட்டிய கருத்தாக இருந்தது. மன்னன் ஆட்சிக்கே முழு உரிமை வைத்து அந்த மன்னனுக்கு அனைவரும் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். மன்னனுக்கு வரை முறையற்ற அதிகாரம் இருக்க வேண்டும் என்கின்ற அந்த அடிப்படையிலே ஹாப்ஸ் கருத் துக்களைத் தந்தார். அவருக்குப் பிறகு வந்த லாக்; மக்களால் மன்னர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கப்பட்ட உரிமைகளை மன்னர்கள் துஷ்பிரயோகம் செய் யாமல் மக்கள் மன்றங்களின் மூலம் மக்களை காப்பாற்றவேண் டும் என்ற கருத்தினை லாக் அறிவித்தார்.

அதற்குப் பிறகு ரூசோ! அவர் வாழ்ந்து கருத்து அளித்த காலம் பிரெஞ்சு நாட்டிலே 14வது லூயி கொடுங்கோல்

புரிந்து கொண்டிருந்த காலம்! எனவே அவர் மன்னராட்சியே கூடாது. மக்கள் ஆட்சிதான் தேவை என்ற கருத்தை அன்றைக்கு வெளியிட்டார்.

இந்த மூன்று கருத்துக்களில் இன்றைக்கு ரூசோவின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றாலும்கூட ஹாப்சினுடைய கருத்து அறவே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் கூட இடையிலே உள்ள லாக்கினுடைய கருத்தும் அறவே நீக்கி விடப்படவில்லை என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லாக், என்ற அந்த மேதையினுடைய கருத்தில் ஒரு அரசு இருக்கும்: அந்த அரசை ஒழுங்காக இயக்க சில மன்றம் இருக்கும். அந்த மன்றங்களில் மக்களின் பிரதிநிதித்துவம் இருக்கும். இதுதான் லாக்கினுடைய கருத்து. அந்தக் கருத்தை இன்றைக்கும் ஏற்றுக் கொள்கின்ற, உலகத்திலே ஒரு நாடாக இங்கிலாந்து விளங்குகின்றது; இங்கிலாந்தின் பாராளுமன்ற முறைதான் உலகத்திலே இன்றைக்கும் பல நாடுகளிலே பல்வேறு வடிவங்களிலே செயல்படுகிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இங்கிலாந்திலே ஒரு அரசன் அல்லது அரசியார் இருக்கிறார்கள். ஒரு அமைச்சரவையும் இருக்கிறது. பாராளுமன்றம் இருக்கிறது; பாராளுமன்றம் இரண்டு பிரிவாக இருக்கிறது; "House of commons" - "House of lords" அதாவது பொதுமக்கள் சபை-பிரபுக்கள் சபை என்று இரு பிரிவாக இருக்கிறது. இங்கே இந்தியாவை எடுத்துக் கொண்டால் அரசர் அல்லது அரசி என்பதற்குப் பதிலாக இங்கே ஒரு "President" இருக்கிறார். அவரைத் தேர்ந்தெடுக்கிறோம்.

ஜனாதிபதி அங்கே வம்ச வழியாக வருகிற அரசரைப் போல அல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாகக் கிட்டத்தட்ட இங்கிலாந்து நாட்டினுடைய பாராளுமன்ற முறையை நெருங்கி வருகிற நிலையில் ஜனாதிபதி பதவியும் பாராளுமன்ற முறைகளும்

இந்தியாவில் இருக்கிறது. இப்படி பல நாடுகளில் இருக்கின்றன.

இந்த முறைகள் எல்லாம் தேவை இல்லை; துப்பாக்கி ஏந்தியவன்தான், இராணுவத்தைக் கைப்பற்றியவன்தான் நாடாளுகின்ற வல்லமை படைத்தவன் என்கின்ற சர்வாதிகார முறையை உருவாக்குகிற நாடுகளும் இன்றைக்கு அரசியல் தத்துவத்தினிடைய கண்ணிலே படாமல் இல்லை.

அப்படிப்பட்ட நாடுகளும் இருக்கின்றன. ஜனநாயக நாடுகளும் இருக்கின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் ஆளுகிறார்கள்!

"நானே ராஜா!" என்று தானே நாடாளுபவராக ஆகிக் கொள்கிறவர்களும் ஆளுகிறார்கள்! "நானே ராஜா" என்று ஆள்பவர்கள் அத்தனை பேரும் மோசமானவர்களாகவும் இருந்ததில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேரும் நல்லவர்களாகவும் இருந்துவிடுவதில்லை. (ஆரவாரம்) இதை நாம் எண்ணிப் பார்க்கிற காரணத்தினுல் நமக்கு சர்வாதிகார முறைதான் தேவை என்கிற முடிவிற்கு வருகிறோமா என்றால் நான் அறிந்தவரையிலே அந்த அரசியல் தத்துவத்திற்கு நாம் யாரும் துணை போக முடியாது. மக்களுக்கு இடையிலே எத்தனையோ புகைச்சல், பூசல் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒரு நாட்டிலே வறுமை மிஞ்சிவிடுமேயானால் அந்த நாட்டிலேவேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு விடுமேயானால், படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்கள் எதிர்காலம் என்ன என்கின்ற நீண்ட எரி நெருப்பு பெருமூச்சுக்கு ஆளாகி விடுவார்களேயானால் அவர்கள் அந்த நாட்டிலே புரட்சித் தீப்பொறிகளாக ஆகி விடுகிறார்கள். அது அவர்களுடைய குற்றமா? அவர்கள் அப்படி மாறுவதற்கு இடம் தந்த நிலை வைத்த நம்முடைய குற்றமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நச்சுப் பாம்புகள் ஓட்டப்பட வேண்டும். அது நம்முடைய வீட்டிற்குள்ளே வராமல் தடுக்க வேண்டும் என்ற

எண்ணம் வரும். சரியான எண்ணம்தான். நச்சுப் பாம்பு கூடாதுதான். ஆனுல் நச்சுப் பாம்பு வந்து தங்குவதற்கு ஏற்ற புதர்களே நம் வீட்டிற்குப் பக்கத்திலேயே வைத்து விட்டு புற்றுகளையும் நம் வீட்டிற்கு அருகாமையிலே அனு மதித்துவிட்டு நாம் நச்சுப் பாம்பை ஒழித்தே தீருவேன் என்று சொன்னுல் ஒழிக்கப்பட வேண்டியது புதர்களா? அல்லது பாம்புகளா? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் அண்மையிலே டில்லியிலே ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டத்திலே பேசுகையிலேகூடக் குறிப்பிட்டேன்.

"வன்முறையில் ஈடுபடுகிறவர்கள் வறுமையால் பல்வேறு துன்ப துயரங்களால் ஆட்படுத்தப்பட்டு நாம் ஏன் இந்த நிலைக்கு ஆளானேம்? என்று கேள்வியை எழுப்புகிறர்கள். அவர்களுடைய உள்ளங்களில் சரியான கேள்விகள் எழுகின்றன. ஆனுல் பாவம் தவருன விடைகளைத் தேடிப் போகிறர்கள்" என்று குறிப்பிட்டுவிட்டு அந்தக் குழுக்கூட்டத்திலே சொன்னேன்: "நாம் இந்த தீவிரவாத வன்முறை எப்படி ஒதுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேமோ அதைப்போலவே இந்த வன்முறையும் தீவிரவாதமும் ஏற்படக்காரணமாக இருக்கின்ற தீவிரமான பழைமைவாதிகளின் எண்ணங்களும் கருத்துக்களும் ஒடுக்கப்பட்டாக வேண்டும்" என்ற கருத்தை நான் அங்கே எடுத்துச் சொன்னேன். எனவே தத்துவம் என்பது ஏதோ கடவுளைக் காணுகின்ற — மதத்தைக் காணுகின்ற —சொர்க்கலோகத்துக்கு வழி காட்டுகின்ற ஒன்று என்று யாரும் கருதிடத் தேவையில்லை.

தத்துவம் நாம் நிலைப்படியில் இடித்துக் கொள்ளும் போது தோன்றுகிறது. அன்ருடம் நாம் நடந்து செல்லுகின்ற பாதையைப் போன்றது அது! தத்துவம் நாம் உலவுகின்ற கடற்கரையைப் போன்றது. தத்துவம் நம் மீது படு

கின்ற வெய்யிலைப் போன்றது. தத்துவம் நம்மீது வீசுகின்ற தென்றலைப் போன்றது. தத்துவம் சில நேரங்களில் வீசுகின்ற புயலையும் போன்றது! தத்துவம் அன்பு கொண்டது! அதே நேரத்தில் தத்துவம் சில சமயம் கடுமையாகவும் காட்சி தரக் கூடியது! இந்தத் தத்துவம் எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்து இருப்பது கடவுள்கூட அல்ல. தத்துவம்தான் நிறைந்து இருக் கிறது. அந்தத் தத்துவத்தைப் பயிலுகின்ற மாணவர்கள் தங்களை இந்தத் தமிழ்நாட்டிற்கும் இந்தியத்திருநாட்டிற்கும் எதிர்கால மன்னர்களாக எண்ணி இந்த நாட்டை வாழ வைக் கின்ற தூதுவர்களாக எண்ணித் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறி இந்தத் தத்துவப் பேரவையைத் துவக்கி வைக்கிறேன்.

18—11—80 அன்று சென்னை பச்சையப்பர் கல்லூரி விழாவில் ஆற்றிய உரை.

"பிறப்பெடுக்கும்"

கல்லூரியினுடைய விழா என்ற தலைப்பிலே என்னை அழைத்து ஒரு பொதுக்கூட்டத்தை அவர்களையும் அறியாமல் இந்த நிர்வாகத்தினர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விழாவிற்கு வந்து மேடையிலே அமர்கிற வரையில் விழா என்ற காரணத்தாலேயோ என்னவோ—ஒவ்வொருவரும் கீழே விழாமல் இங்கே வருவது எளிதான காரியமல்ல என்ற நிலை ஏற்பட்டு—மாணவர்களுக்கு முக்கியமான தேவையான கட்டுப்பாடு—அமைப்பு முறை இவைகள் இந்த நிகழ்ச்சியிலே ஆர்வப் பெருக்கின் காரணமாக சரியாக கடைப்பிடிக்க முடியாமல் போய்விட்ட காரணத்தால்—நீங்களும் தொல்லைக்கு ஆளாகி நானும் தொல்லைக்கு ஆளாகி—எதிரே வீற்றிருக்கிற ஆயிரக்கணக்கான நீங்கள் இந்த மேடையைக் காண்கிறீர்கள்—நானும் காண்கிறேன். மேடை முழுவதும் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கின்ற சூழ்நிலை; புராணீகர்கள் மொழியில் சொல்ல வேண்டுமென்றால்—என்னுடைய ஜாதகம் எப்பொழுதுமே என்னைச்சுற்றி நெருக்கடி இருந்து கொண்டிருக்கும். அதற்கேற்ப இந்த மேடையிலும் நெருக்கடி இருந்து கொண்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

இன்று திருவாரூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச வேண்டும் என்று நண்பர்கள் வலியுறுத்தினர்கள். பொதுக் கூட்டத்திற்கு நான் ஒப்புதல் தரவில்லை. அது எவ்வளவு தவறு என்பதை என்னுல் இப்போது புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கல்லூரியின் நிகழ்ச்சி—கல்லூரியின் முதல்வர், பேராசிரியப் பெருமக்கள், மாணவப் பேரவையின் நிர்வாகிகள், மாணவக் கண்மணிகள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மாத்திரம் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டால் மாணவர்களிடம் கூறக்கூடிய பல விஷயங்களை கூறுகிற வாய்ப்பு எனக்கும் இருந்திருக்க முடியும்.

ஆனுல் இன்றைக்கு அப்படிப்பட்ட வாய்ப்பை நீங்கள் இழந்து விட்டீர்களோ—இல்லையோ எனக்குத் தெரியாது; நான் உள்ளபடியே இழந்துவிட்டேன்.

மாணவர்கள் மத்தியில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்ற ஆவலோடுதான் நான், இங்கே வந்தேன்.

ஆனுல் இது முப்பெரும் விழா; கல்லூரியின் ஆண்டு விழா; பேரவையின் நிறைவு விழா; பட்டம் அளிப்பு விழா ஆகிய மூன்று விழாக்கள் இணைந்த விழா. இந்த விழாவிலே இந்தக் கல்லூரி தோன்றிய காலத்தை—அது தோன்றுவதற்கு எந்த அரசு காரணமாக இருந்தது என்பதையெல்லாம் இங்கே முன்னிலை ஏற்றுள்ள நண்பர் தாழை சுட்டிக் காட்டினர்.

திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கல்லூரியைப் போலவே பேரறிஞர் அண்ணு அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சியில் ஒன்பதாண்டுக் காலம் தமிழகத்தில் தொடர்ந்து—நூற்றுக்கணக்கான கல்லூரிகள் தமிழகத்தில் உருவாக்கப் பட்டன.

இன்றைக்கு ஆங்காங்கு பல்கலைக் கழகங்கள் உருவா கின்றன என்றுல்—மலர் இருந்தால்தான் மாலை தொடுக்க

முடியும்; அதைப் போலக் கல்லூரிகள் இருந்தால்தான் பல்கலைக் கழகங்களை உருவாக்க முடியும். எனவே பல கல்லூரிகளை உருவாக்கிய பெருமை ஒன்பதாண்டு கால தி.மு. கழக அரசுக்கு உண்டு என்பதையும்-அந்த ஆட்சிக்குப் பிறகு ஏறத்தாழ இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் எந்த வொரு புதிய கல்லூரியும் தமிழகத்தில் உருவாகவில்லை என்பதையும்—ஏனென்றால் உருவாக்கத் தேவையில்லை என்ற அளவிற்கு முன்பே உருவாக்கப்பட்டு விட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

உங்களுடைய ஆர்வத்தைப் பார்க்கும் நேரத்தில்—நீங்கள் எல்லாம் வீட்டிற்குச் செல்லும்போது நிச்சயமாக ஒன்றை பேசிக் கொண்டு செல்வீர்கள். என்னவென்றால் "கருணாநிதியின் பேச்சு இன்று நன்றாக இல்லை" — ஏனென்றால் நீங்கள் இவ்வளவு திரளாக என்னிடம் எதிர்பார்த்து வந்திருப்பது வேறு: நான் இங்கே பேசப் போவது வேறு.

கட்சி அரசியல் இங்கே பேச மாட்டானு என்று பலர் அமர்ந்திருக்கிறீர்கள். ஆனால் எனக்குள்ள குறை அண்ணா அவர்களிடம் நான் பயின்ற காரணத்தால்—எதை—எங்கே—எப்படிப் பேச வேண்டும் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். எனவே உங்களுடைய ஆவலை என்னால் நிறைவு செய்ய முடியாது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சி அரசியல் என்று சொன்னேன். அரசியல் பேசுவது என்பது வேறு; கட்சி அரசியல் பேசுவது என்பது வேறு.

அரசியலை திருக்குறளே ஒத்துக் கொண்டிருக்கிறது. மாணவர்களுக்கு அரசியல் வேண்டுமா? வேண்டாமா என்ற வினாக்குறி எழுந்தபோது — எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன பொன் மொழியே — மாணவர்கள் அரசியலைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் மாணவப் பருவத்

தில் அரசியலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

இன்றைக்குத் தமிழகத்தில் மாத்திரமல்ல; இந்தியாவில் பல பகுதிகளில்கூட மாணவர்களிடம் ஒரு குமுறலை—ஒரு கொந்தளிப்பை — நம்மால் காணமுடிகிறது.

இன்றைக்கு முப்பது பேர் பட்டம் பெற்று — இங்கிருந்து விடை பெற்று வெளியிலே செல்கிறீர்கள் என்றால்—அவர்கள் வெளியே செல்கிறார்கள் என்று பொருள் அல்ல.

நான் காரில் குடந்தையிலிருந்து இங்கே வந்துகொண் டிருந்தபோது தாழையிடம், "இன்று பட்டம் பெற்று செல்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டேன். அவர் பதில் சொல்லும்போது, "எத்தனை பேர் என்று சரியாகத் தெரியவில்லை; முப்பது பேரோ—நாற்பது பேரோ 'ரிலீஸ்' ஆகிறார்கள்" என்று சொன்னார். நான் அவரைத் திரும்பக்கேட்டேன். "ரிலீஸ் என்ற அந்த எண்ணத் திலேயே இருக்கிறாயா? இப்போது நீ ரிலீஸ் ஆகி வந்ததைப் போல" என்று சொன்னேன்.

உள்ளபடியே நீங்கள் ரிலீஸ் ஆகிச் செல்வதாக நான் கருதவில்லை. இப்போதுதான் நீங்கள் சிறைச்சாலைக்கே செல்கிறீர்கள். (கைதட்டல்)

ஏனென்றால் உத்தரவாதம் இல்லாத ஒரு பட்டமளிப்பு விழாதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது எந்த ஆட்சிக் காலமானாலும் சரி—நாங்கள் பொறுப் பேற்றிருந்த அந்த ஆட்சிக் காலம் ஆனாலும் சரி—எங்களுக்கு முன்பிருந்த ஆட்சிக் காலமானாலும் சரி—இன்றைக்கு ஆனா லும் சரி—ஒரு கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியே செல்கிற மாணவர்களுக்கு—அவர்களுடைய வாழ்க்கைக்கான உத்தரவாதம் - அவர்களுடைய வேலைக்கான உத்தர வாதம் அளிக்கப்படுகிறதா என்றால் இல்லை. அளிக்கப் படக்கூடாது என்று எந்த அரசும் கொள்கை முடிவு எடுப்ப

தில்லை. உத்தரவாதம் அளிக்க முடியாத சூழலில் நாடும், நாட்டின் பொருளாதாரமும் இருக்கிறது. நாட்டின் நில வரங்களும் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

அந்த வகையில்தான் இன்றைக்கு இங்கிருந்து வெளியே செல்கிற மாணவர்கள் இதுவரையில் இந்தக் கல்லூரியில் அவர்கள் பெற்ற மகிழ்ச்சியை—வெளி உலகத்தில் அவர்கள் பெற இயலாது.

ஆனல் பட்டம் பெற்றவர்கள் அனைவரும் வேலைக்குத் தான் செல்ல வேண்டுமா? என்ற இந்தக் கேள்வி—நியாய மான கேள்விதான். ஆனல் கேட்கப்பட வேண்டிய இடம் நம்முடைய நாடாக இருக்கும்போதுதான் அதிலேபொருத்த மில்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. வெளிநாடுகளில் கல்லூரி களிலே பட்டம் பெற்று வெளியேறுகிற மாணவர்கள் ஒரு வேலைக்குத்தான் செல்ல வேண்டுமென்ற நிலை இல்லாமல் தாங்களே பல தொழில்களை உருவாக்கவும்—தங்களுடைய அறிவால்—ஆற்றலால்—தாங்கள் கற்ற கல்வியால்—தங்களுக் கும் பயன்படக்கூடிய — மற்றவர்களுக்கும் பயன்படக்கூடிய பல தொழில்களை நடத்திடக்கூடிய தகுதி பெற்றவர்களாக இருந்திடக் காண்கிறோம்.

அது அந்த நாட்டின் பொருளாதார சூழல்; நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் படிப்பதே வேலை பார்க்கத் தான். படிப்பது சமுதாயத்தினுடைய அந்தஸ்தை உயர்த்து வதற்காக என்று இல்லாமல் — படிப்பது சமுதாயத்தினுடைய முன்னேற்றத்துக்காக என்று இல்லாமல் — படிப்பது நாமும் நாட்டுக்கு நம்முடைய பணியைச் செய்தோம் என்பதற்காக என்று இல்லாமல் — படிப்பது நாமும் பணி புரிந்து நம் முடைய வயிற்றைக் கழுவிக் கொண்டு — நம்மை நம்பி வந்திருக்கிற பெற்றோர்களையும் வாழ வைத்து — நம்மை நம்பி வரவிருக்கிற புதிய வரவுகளையும் காப்பாற்ற — என்ற அந்த எண்ணத்தோடுதான் இன்றைக்கு ஒரு மாணவன்

கல்விக் கூடத்திற்கோ அல்லது கல்லூரிக்கோ நுழைய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். அப்படிப்பட்ட பொருளாதார சூழலில்தான் நம் நாடு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆனால் இன்றைக்கு இலட்சக்கணக்கானவர்கள் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள்; படித்துப் பட்டம் பெற்றவர்கள் மட்டும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலை கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள்.

இன்று இந்தத் திருவாரூர் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியே செல்கிற முப்பதுக்கு மேற்பட்ட மாணவ கண்மணிகள் ஒருவேளை ஐம்பது ரூபாய் மாதந்தோறும் மானியத் தொகை பெறுகிற பட்டியலில் இடம் பெற்றாலும் பெறக்கூடும் — வேலை கிடைக்கிற வரை; ஆனால் அரசின் அறிவிப்பு சரியாக நிறைவேற்றப்படுமேயானால் — பட்டதாரி மாணவர்கள் ஒரு இலட்சம் பேருக்கு மாதம் ஐம்பது ரூபாய் தரப்படும் என்ற அறிவிப்பு சரியாக நடைமுறைப்படுத்தப் படுமானால் நிச்சயமாக இந்த முப்பது பேருக்கு அந்தப் பட்டியலில் இடம் உண்டு; ஆனால் அந்த அறிவிப்பு சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றும் — இலட்சம் பேர் என்று தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்டது என்றும், இப்போது அந்தத் தொகை இலட்சம் பேருக்கு கிட்டவில்லை என்றும் — நாம் அறிகிற நேரத்தில் முப்பது பேருக்கும் அந்த சிறு உதவியும் கிடைக்கக் கூடிய வழியில்லை என்பதை நான் உணர்கிறேன்.

எனவேதான் படித்த படிப்பை — கற்ற கல்வியை — கல்லூரியில் பெற்ற பயிற்சியை — நூல்களின் மூலமும், பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலமும் தாங்கள் கண்ட புதுமைகளை - ஏதோ தங்கள் வயிற்றைக் கழுவுகிற வேலை வாய்ப்பு என்பதற்காக மாத்திரம் பயன்படுத்தாமல் — தங்களுடைய வாழ்நாளில் ஒரு பகுதியை இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கவும் பயன்படுத்த வேண்டுமென்று நான் மாணவச் செல்வங்களை கேட்டுக் கொள்வேன்.

நாட்டில் படிக்காத எத்தனையோ பெரியவர்கள் — பட்டம் பெறுத எத்தனையோ பெரியவர்கள் மக்களுக்காகவே உழைத்து — பாடுபட்டு — தியாகம் செய்து — மாண்டு மடிந்து போயிருக்கிறார்கள்.

என்னையும் — என்னை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணை அவர்களையும் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள், கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர் அல்ல.

தமிழகத்திலே எட்டாண்டு காலம் முதலமைச்சராக இருந்து — தாழ்த்தப்பட்ட — பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக பாடுபட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கல்லூரியில் நுழையாதவர் தான்.

நானும் கூட என்ன — பத்தாம் வகுப்பு வரை படித்தவன் தான்; எனவே படிப்பிற்கும். சமுதாயத்திற்கு ஆற்றுகிற பணிக்கும், தொடர்பு இருப்பதாகச் சொல்ல மாட்டேன் — ஆனால் படித்தவர்கள் — அண்ணாவைப் போன்ற மாமேதைகள் — சமுதாயத்திற்காகப் பணியாற்ற முன் வருகிற நேரத்தில் — சமுதாயத்திற்கு மற்றவர்கள் பணியாற்றுகிற நேரத்தில் கிடைக்கிற பயனைவிட — அதிகப் பயன் கிடைக்கும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது.

படிக்காத சிலர் தலைவர்களாகவும் வந்துவிடலாம். சிலர் பெரும் பொறுப்புக்குக்கூட வந்துவிடலாம். ஆனால் நான் மாணவ நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்:—

விதிவிலக்குகள் என்றைக்கும் வழிகாட்டிகளாக ஆக மாட்டா; விதிவிலக்குகள் விதிவிலக்குகள்தான். விதிவிலக்குகளையே பின்பற்றி — காமராசர் படிக்கவில்லை. முதலமைச்சராக ஆகி விட்டார். கருணாநிதி கூடத்தான் படிக்கவில்லை; ஒரு காலத்தில் முதலமைச்சராக இருந்தான் — இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறான். எனவே நாம் ஏன் படிக்க வேண்டும்? என்ற ஒரு கேள்வியை மாணவர்கள் தங்க

ளுக்குத் தாங்களே கேட்டுக் கொண்டால் — அதற்குத்தான் நான் சொல்கிறேன் "விதிவிலக்குகள் வழிகாட்டிகளாக ஆக மாட்டா" என்று.

உங்களுக்கு என்று நாட்டில் பல பணிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. உங்களுடைய குடும்பத்தையும், உங் களையும் கவனித்துக் கொண்டு — அதே நேரத்தில் இந்த நாட்டு மக்களை வாழ வைக்க வேண்டிய மிகப் பெரும் பொறுப்பு இன்று பட்டம் பெற்றுச் செல்கிற மாணவச் செல் வங்களின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இன்று காலையில் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். நான் உள்ளபடியே கவலைதோய்ந்த உள்ளத்தோடு எடுத்துக் காட்டுகிறேன்-

இன்று பல கல்லூரிகள் இல்லாவிட்டாலும் சில கல்லூரி கள் போர்க் களங்களாக காட்சி அளித்துக் கொண்டிருக் கின்றன. மாணவர்களுக்கிடையே பிணக்கு — பிரச்சினை — அமளி — அதன் காரணமாக அன்மையில் மதுரையில் இரண்டு மாணவர்கள் — ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த வர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற செய்தி ஏடுகளில் வந்து — நேற்று சட்டசபையில்கூட அது குறித்து பிரச்சினை எழுப்பப்பட்டு அமைச்சர்கள் பதில் தந்திருக் கிறார்கள்.

இன்று கல்லூரிகளிலும் சாதிப் பிரச்சினை தலை தூக்கியிருக் கிற கொடுமையை நாம் அலட்சியமாகக் கவனிக்காமல் விட்டு விட முடியாது.

எந்தச் சாதிக் கொடுமை ஒழிய வேண்டுமென்று பெரும் பெரும் தலைவர்கள் — மேதைகள் — சமூகப் புரட்சிக்காரர் கள் நம்முடைய நாட்டில் பல ஆண்டு காலமாக பாடுபட்டு அதற்காகவே தங்களுடைய பணிகளை அர்ப்பணித்து — தங்க ளின் உயிர்களையும்கூட தத்தம் செய்தார்களோ — அப்படிப் பட்ட போராட்டத்தில் அவர்கள் முழு வெற்றி பெற

வில்லையோ என்று நாம் சந்தேகப்படுகிற அளவிற்கு இன்று சாதி வெறி தலை விரித்தாடுகிறது.

பட்டிக் காடுகளில் — படிப்பறிவே இல்லாத பாமர மக்கள் வாழும் இடங்களில் சாதி தலைதூக்குமானுல் நாம் ஆச்சரியப்பட மாட்டோம். ஆனுல் "எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்கின்ற புதிய சிந்தனைச் செல்வங்களைப் பெறக்கூடிய இந்தக் கல்விக் கூடங்களில் — இந்த அறிவு ஆலயங்களில் இன்றைக்கு பயிலுகிற மாணவர்களிடையே — அந்த இளம் உள்ளங்களி டையே எப்படித்தான் இந்த சாதி எனும் நஞ்சு புகுத்தப்பட் டிருக்கிறதோ என்பதை என்னுல் அறிந்து கொள்ள முடிய வில்லை.

எனவே மாணவர்கள்— அந்தச் சாதியை ஒழிக்க— சாதி பேதத்தைக் களைய ஒரு சூளுரை மேற்கொள்ளவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானுல் இன் றைக்கு நான் பேசுகிற தலைப்புக்கூட "பிறப்பொக்கும்" என்ற அந்தத் தலைப்பில்தான் நான் உங்களிடம் பேசிக் கொண் டிருக்கிறேன். இதைப்போல— பலர்— பல்வேறு தலைப்புக் களில் பேசியிருக்கக் கூடும். நான் பேசுகிற தலைப்பு "பிறப் பொக்கும்" என்பதாகும். "பிறப்பொக்கும்" என்கிற இந்த ஒரு சொல்லில் ஆரம்பிக்கிற குறள்— வள்ளுவர் பெருமகனுல் அவர் வாழ்ந்த கால ஓட்டத்தில்— எவ்வளவு மனத் துயரத் தோடு வெளியிடப்பட்ட கருத்து என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார் வள்ளுவர்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார். பிறப்பால் எல்லா உயிர்களும் ஒன்றுதான். அதிலே உயர்வு தாழ்வே கிடையாது என்று சொல்கிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் வள்ளுவர் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியத் திற்கு ஆளாகியிருக்கிறூர் என்றுல் — அப்போதே பல்வேறு சாதிகள் துளிர்விட்டு இருந்தது என்பதும்— சாதியின் பெய ரால் உயர்வு, தாழ்வு உணர்வுகள் படர்ந்து இருந்தது என் பதும்— அந்தப் படர்ந்த கொடியின் வேரை அறுத்திட வேண்டும் என்பதற்காகத்தான்— வள்ளுவப் பெருமகனுர் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று எடுத்துச் சொல்லி யிருக்கிறூர் என்பதும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய பேருண்மையாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றுல் எல்லா உயிர்களும் பிறப்பால் சமம் ஆனவைகள்தான். அவைகளுக் குள் உயர்வு—தாழ்வு இல்லை என்று வள்ளுவர் சொன்னுர்.

எல்லா உயிர்களும் என்றுல் மனித உயிர்கள் மாத்திர மல்ல; எல்லா உயிர்களும்! புழு, பூச்சி, பறவை, மிருகம் என்று அனைத்து உயிர்களையும் எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்டால்- இன்னெரு இடத்தில்— 'புலால் மறுத்தல்' என்ற இடத்தில் வள்ளுவர்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்று சொல்கிறூர்.

மற்ற உயிர்களைக் கொல்லாதவனையும் — புலால் உண் ணுமல் இருக்கிறவனை— அவனுல் காப்பாற்றப்பட்ட— அவனுல் கொல்லப்படாமல் விடப்பட்ட எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்கிறூர்.

எனவே 'எல்லா உயிரும்' என்ற அந்தச் சொற்றெடர்— 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வருகிற சொல் தொடரோடு—பொருந்துகிற நேரத்தில் எல்லா உயிர்களையும் தானே குறிப்பிடுகிறது; உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளை யும்தானே குறிப்பிடுகிறது என்று நாம் எண்ணிக் கொள்ளக்

கூடும். ஆனல் வள்ளுவர் குறளை எழுதும்போது— அந்தக் குறளை மிருகங்கள் படிக்கும் என்றே— பறவைகள் படிக்கும் என்றே என்று எண்ணி எழுதவில்லை.

சிங்கங்கள் படிக்கும்— யானைகள் படிக்கும்— மான்கள்— மாடுகள்— கருடன்கள்— கழுகுகள்— காக்கைகள்— பாம்புகள் எல்லாம் படிக்கும் என்று அந்த ஜீவராசிகளுக்காக வள்ளுவர் அந்தக் குறளை எழுதவில்லை. யார் படிக்க வேண்டுமோ அவர்களுக்காக எழுதினர். அவர் அந்த உயிர்களுக்காக எழுத வில்லை. ஏனென்றல் பாம்புகளுக்குள்-ஆடு மாடுகளுக்குள்-மிருகங்களுக்குள் சாதிப்பூசல், குழப்பங்கள் கிடையாது. எனவே வள்ளுவர் அவைகளுக்காக எழுத வேண்டிய அவசியமில்லை. அவர் எழுதினலும்—அதைப் படித்துணரக்கூடிய ஆறுவது அறிவான பகுத்தறிவு அந்த உயிரினங்களுக்கு கிடையாது. ஆறுவது அறிவு உள்ள உயிரினங்களுக்காகத்தான் வள்ளுவர் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று எழுதினர்.

அடுத்து வள்ளுவர் "சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்கிறார் பிறப்பினல் எல்லோரும் ஒன்றுதான். ஆனல் அவர்கள் எப்போது மாறுபடுகிறார்கள் என்றல்—அவரவர்கள் செய்கின்ற—அவரவர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலைப் பொறுத்து அவரவர்களுடைய சிறப்புக்கள் வேறுபடுகின்றன; அவரவர்களுடைய தனித் தன்மைகள் வேறுபடுகின்றன என்று குறிப்பிட்டார்.

"சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" இன்றைக்குக்கூட குறளுக்கு பொருள் கூறுகிற சில ஆசிரியர்கள் தொழில் என்பது அவரவர்கள் ஈடுபட்டிருக்கிற தொழில்; ஒருவர் கொல்லராக—ஒருவர் தச்சராக—ஒருவர் ஆசிரியராக—ஒருவர் மருத்துவராக—ஒருவர் சலவைத் தொழிலாளியாக—ஒருவர் மாவட்ட ஆட்சித் தலைவராக ஒருவர் காவல் துறை அதிகாரியாக—ஒருவர் சங்கீத வித்வானாக—அப்படிப்பட்ட தொழில்களைச் செய்கிறவர்கள் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பார்; எனவே அந்தத் தொழிலைப்

பொறுத்துத்தான் இந்த வேற்றுமை என்று வள்ளுவர் கருதியிருக்கக்கூடும். அல்லது மற்றவர்களுக்கு உணர்த்தி யிருக்கக்கூடும் என்று யாராவது சொன்னால் நான் அவர் களுக்குத் தருகின்ற விளக்கம் எல்லாம் தொழில் என்பது தங்களுடைய பிழைப்பிற்காக அல்லது சமுதாயத்தின் தன்மைக்காக ஏற்றுக் கொண்டிருக்கிற தொழில் அல்ல: ஒரு வேலை என்கிற அந்த வார்த்தைக்குள் அடங்குகிற அந்தப் பொருளிலே தொழில்கள் குறிப்பிடப்படவில்லை.

கலெக்டர் தொழிலைச் செய்கிறவர்கூட—போலீஸ் அதிகாரியின் தொழிலைச் செய்கிறவர்கூட—அதிலே அவர் செய்கிற அந்தத் தனித் தன்மையைப் பொறுத்துத்தான் அதிலே சிறப்புக்களை அவரால் அடைய முடிகிறது.

எத்தனையோ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரியான சிறப்புகளை பெற்று விடுவதில்லை. நாமே கூடச் சொல்கிறோம். முன்பிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எவ்வளவோ மேல் என்று சொல்கிறோம் என்றால் (இந்த மாவட்டத்தைச் சொல்வதாக யாரும் கருதிக் கொள்ள வேண்டாம். பொது வாகச் சொல்கிறேன்)—என்ன அர்த்தம்? மாவட்ட ஆட்சித் தலைவர் என்பது அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு பணி. ஆனால் அவரவர்களும் செய்யும்போது எந்தத் தன்மையோடு செய்கிறார்களோ, எந்தத் திறமையோடு செய்கிறார்களோ—எந்தத் தூய்மையான உணர்வோடு செய்கிறார்களோ—அதைப் பொறுத்துத்தான் தொழிலுக்குப் பொருள் கொள்ள வேண்டும்.

சங்கீத வித்வான் எல்லோரும் அந்தத் தொழிலால் தொழிலுக்குரிய சிறப்பை அடைந்துவிட முடியாது. சில சங்கீத வித்வான்கள் திண்ணையிலே உட்கார்ந்து பாடினால், அடுத்த வீட்டுக்காரர்கள் காதை கூடப் பொத்திக் கொண்டு இருப்பார்கள்.

அவரும் சங்கீத வித்வான்தான்; அதே நேரத்தில் ஒரு பெரிய அவையிலே உட்கார்ந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ரசிக்கக்கூடிய அளவிற்கு இசையைப் பொழிகிறவரும் சங்கீத வித்வான்தான்!

எனவே சங்கீதம் என்ற தொழிலைக் கற்றுக்கொண்ட காரணத்தினுலேயே, அந்தத் தொழிலுக்கும் இன்னெரு தொழிலுச்கும் வேறுபாடு உண்டு என்ற அந்தப் பொருளிலே வள்ளுவர் கூறியதாக யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற தொழிலிலேகூட சில தனித் தன்மைகள் உண்டு.

ஒரு ஆசிரியர் மாணவர்களிடத்திலே மதிப்பு பெற்றவ ராக இருப்பார்; இன்னெரு ஆசிரியர் மாணவர்களின் கேலிக்கு உரியவராக இருப்பார்; இந்த இரண்டு ஆசிரியர் களுமே ஒரே தொழிலைத்தான் செய்கிறார்கள். ஆனலும்கூட அவர்களுடைய மனப் போக்கைப் பொறுத்து, நடவடிக்கை களைப் பொறுத்து, மாணவர்களிடம் மதிப்பைப் பெறு கிறார்கள்.

எனவே அவர்கள் செய்கின்ற காரியம்—அவர்கள் ஈடுபடுகின்ற காரியம்—அதிலே காட்டுகின்ற தனித்தன்மை இதைப் பொறுத்துத்தான் சிறப்புக்கள் அமைகின்றன; வேற்றுமைளே உருவாகின்றன.

எனவே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; மனித உயிர்கள் எல்லாவற்றிற்கும் பிறப்பு ஒன்றுதான். அந்தப் பிறப்பால் அனைவரும் சமம்தான். ஆனல் அவரவர்கள் தங்களுடைய தனித் தன்மையைக் காட்டுகின்ற வகையில் ஆற்றுகின்ற தொழில்கள்—காரியங்கள் இவைகளின் காரண மாகப் பல்வேறு சிறப்புக்களைப் பெறுகிறார்கள். அதிலேதான் வேற்றுமை இருக்கிறது என்று அழுத்தந் திருத்தமாக வள்ளுவர் குறிப்பிட்டார்.

ஆனல் அந்த வள்ளுவருடைய குறள் ஏட்டளவில் இருக் கிறது. குறள் உபன்யாசகர்கள் அதை மக்களுக்கு எடுத்துச்

சொல்கிறார்கள். குறளைப் பற்றிய பல்வேறு பதவுரைகள், விரிவுரைகள், பாழிப்புரைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக இந்தச் சாதிப் பிணக்கு மேலும் மேலும் வலுப்படுகிறதேயல்லாமல், நாம் அதைக் களைவதில் சிரத்தை எடுத்துக் கொள்கிறோமா என்றால் இல்லை. வெட்கப்பட வேண்டிய அளவிற்கு இருக்கிறோம் என்பதைத்தான் சொல்ல வேண்டும்.

சாதிக் கொடுமை ஒழியாமல்—சாதி ஆதிக்கம் ஒழியாமல் நாட்டிற்கு கிடைத்திருக்கின்ற சுதந்திரத்தை நீண்ட நாள் காப்பாற்றிவிட முடியும் என்பதும்—நாம் வெற்றி முழக்கமிட்டு வாங்கின விடுதலைக் கொடி பாரில் உள்ள நாடுகள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு பறக்கவிட முடியும் என்று எண்ணுவதும்—மிகமிகத் தவறான காரியமாகும்.

சாதியிலே, மதங்களிலே சாயாதே என்று சொன்ன வடலூர் வள்ளலார் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரியவர்களின் கருத்துக்களை எல்லாம் எடுத்துக் காட்டி இந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் முதற் கொண்டு—பேரறிஞர் அண்ணா முதற்கொண்டு—சாதிகளை ஒழிப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளை மாணவக் கண்மணிகள் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

சாதி ஒழிய வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்தில்—நானும் சரி அல்லது தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நன்மைக்காகப் பாடுபடுகின்ற, போராடுகின்ற ஒரு அணியினரும் சரி—இட ஒதுக்கீடு வேண்டும் என்று கூறுகிறோம்.

இன்று இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் இட ஒதுக்கீடு பிரச்சினையின் அடிப்படையில் நடைபெறுகின்ற அமளிகளை

நீங்கள் ஏடுகளில் பார்க்கிறீர்கள். குஜராத் மாநிலத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு கல்லூரிகளில் — வேலை வாய்ப்புகளில் — தங்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு — சாதி அடிப்படையில், சமுதாய அடிப்படையில் தங்களுக்கு இட ஒதுக்கீடு தேவை என்று போராடுகிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீட்டிற்காக ஆரம்ப காலத்தில் போராடிய கட்சி நீதிக் கட்சி; தென்னிந்திய நல உரிமைச் சங்கம்; திராவிடர் கழகம்; திராவிட முன்னேற்றக் கழகம்; இன்றளவும் போராடிக் கொண்டிருக்கின்ற திராவிடர் இயக்கம்; இதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

குஜராத்திலே இன்றைக்கு அந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. நாடாளுமன்றம் வரையில் அந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு, நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் — கட்சி மாறுபாடு இல்லாமல் இட ஒதுக்கீடு இருந்தாக வேண்டும் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மிக அழகாக — தெளிவாக — திட்டவட்டமாக — "எப்படி இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் நீடிக்கும் என்று என்னுடைய தந்தையார் நேரு அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்களோ — அதைப் போல, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் விரும்புகிற வரை இட ஒதுக்கீடு முறை நீடிக்கும்" என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள்.

"இட ஒதுக்கீடு இருந்து — அதே நேரத்தில் சாதி ஒழியும் என்று கனவு காண்கிறீர்களே, அது நியாயமா?" என்று சிலர் கேட்கிறார்கள். மேலெழுந்த வாரியாக இந்தக் கேள்வியைப் பார்க்கும்போது இந்தக் கேள்வியில் பொருத்தம் இருப்பதைப் போலவும், நியாயம் தட்டுப்படுவதைப் போலவும் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல.

இடஒதுக்கீடு கூடாது என்று இன்றைக்கு வாதிடுகிறார் களே, நான் அவர்களைப் பார்த்து கேட்கின்ற கேள்வி எல்லாம் — கல்லூரிகளிலே — மருத்துவக் கல்லூரியிலே, பொறியியல் கல்லூரியிலே சேருவதற்காகவும் — அரசாங்க வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்காகவும் — தகுதி, திறமை வேண்டும் என்று வாதிக்கின்ற உயர்ந்த குலத்துப் பெரியவர் களை நான் கேட்கின்றேன்.

பொறியியல் கல்லூரிக்குத் தகுதி, திறமை வேண்டும் என்கிறீர்கள்; அதைப் போலவே மருத்துவக் கல்லூரிக்குத் தனித் தகுதி, திறமை வேண்டும் என்கிறீர்கள்; சரி, அப்படி யானால் ஒரு ஆலயத்தில் இருக்கின்ற ஆண்டவனைப் பூஜை செய்கிற — அர்ச்சனை செய்கிற தகுதி திறமை வேண்டாமா? அந்தத் தகுதி, திறமையை மாத்திரம் அடிப்படையாக வைத்துத்தான் நாம் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும் — அவன் பிராமணக் குலத்திலே பிறந்திருந்தாலும், அல்லது அவன் செட்டியாராக இருந்தாலும் முதலியாராக இருந்தாலும், அல்லது அவன் பிள்ளைமாராக இருந்தாலும், அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தா லும் — ஒரு மாணவன் ஆண்டவனை அர்ச்சிப்பதற்குரிய மந்தி ரங்களைக் கற்று அதற்கான தேர்வில் தேறியிருந்தால் — அவன் எந்தச் சாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், தகுதி அடிப்படையில் அவனுக்கு ஆண்டவனை அர்ச்சனை செய்கின்ற உரிமை வேண்டும் என்ற சட்டத்தினை தி. மு. கழக அரசு தமிழகத்திலே நிறைவேற்றியது.

அந்தச் சட்டத்தின் கதி என்ன? அந்தச் சட்டம் என்ன வாயிற்று? உச்ச நீதிமன்றத்தில் சில சனாதனிகள் வாதாடி, உச்ச நீதி மன்றம் என்ன தீர்ப்பு அளித்திருக்கிறது தெரி யுமா?

"அரசியல் சட்டம் இதற்கு இடம் தராது; எனவே, தகுதி, திறமை அடிப்படையில் ஆண்டவனை அர்ச்சிப்பது கூடாது. சாதி அடிப்படையில்தான் அது நடைபெற வேண்

டும். உயர் சாதிக்காரர்களுக்குத்தான் ஆண்டவனைப் பூஜிப் பதற்குத் தகுதி, உண்டு'' என்றுல்— நான் கேட்கிறேன்: அங்கே மாத்திரம் உயர் சாதி வரலாம்: அங்கே மாத்திரம் உயர் சாதிக்கு ஒதுக்கீடு வரலாம்: ஆனுல் கல்லூரிகளில்— அரசு வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிற நேரத்தில், இல்லை, இல்லை, தகுதி, திறமை வேண்டுமென்று வாதிட்டால் குழப்பமாக இல்லையா? முரண்பாடாக இல்லையா?

ஒன்று, தகுதி, திறமைதான் முதல் இடம் என்றுல்— முதலிலே ஆலயத்திலே ஆண்டவனைப் பூஜிக்கின்ற அந்த உரிமையிலே எல்லா சாதிக்காரர்களுக்கும், அது யாராக இருந்தாலும், எந்தச் சாதியாக இருந்தாலும், அவன் ஆதி திராவிட வகுப்பிலே பிறந்திருந்தாலும்— அல்லது உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்கிற பிராமணக் குலத்திலே பிறந்திருந்தாலும்—யாராக இருந்தாலும்— அவன் அர்ச்சனை செய்வதற்குரிய பரீட்சையினை எழுதித் தேர்வு பெற்று, அந்தத் தகுதியை அவன் அடைந்தால்— அவன் ஆண்ட வனைத் தொட்டு வணங்கலாம்; ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யலாம்; ஆண்டவனைப் பூஜிக்கலாம் என்ற தகுதியைத் தருவதற்கு, இந்த நாட்டிலே உள்ள பெரியவர்கள் முன்வரு வார்களேயானுல்— நாட்டில் சாதி ஒழியும்; அப்படிச் சாதி ஒழிந்துவிடுமானுல்— கலப்புத் திருமணங்கள் பெருகுமே யானுல்— உயர்ந்த சாதிக்காரர்கள் தங்களுடைய ஆதிக் கத்தை விட்டு தங்களே விடுவித்துக் கொள்வார்களேயானுல்— தாழ்ந்த சாதிக்காரர்கள் என்று கருதப்படுபவர்கள் தங்க ளுடைய பலவீனத்தை விட்டு விட்டு— பய உணர்ச்சியை விட்டு விட்டு— அவர்களும் இந்த நாட்டில் வாழும் மனிதர் கள்தான்: மண் அன்று என்ற அந்த உரிமைக்குரலே எழுப்பு வார்களேயானுல்— அப்படி சாதியற்ற சமுதாயம் என்று இந்த நாட்டில் உருவாகின்ற அந்தக் காலக் கட்டத்தில்தான் இடஒதுக்கீடு என்பது சமுதாய அடிப்படையிலே தேவை

யில்லை; சமூக அடிப்படையிலே தேவையில்லை; வகுப்பு அடிப்படையிலே தேவையில்லை; அப்பொழுது பொருளாதார அடிப்படையில் பார்த்துக் கொள்ளலாம்.

அப்பொழுது இரண்டே சமுதாயம்தான்; ஒன்று பொருளாதாரத்தில் பின்தங்கிய சமுதாயம்; மற்றொன்று பொருளாதாரத்தில் முன்னேறிய சமுதாயம் என்று அப்படி இந்தச் சமுதாயத்தை இரண்டாகப் பிரிக்க முடியும். எனவே அதுவரையிலே— சாதிகள் இருக்கின்ற வரையிலே— அந்தச் சாதிகளுக்குத் தர வேண்டிய இட ஒதுக்கீடுகளை= அவர்களைக் கைதூக்கிவிட வேண்டிய காரியத்தை— நாட்டிலே இருக்கின்ற ஆட்சியாளர்கள் செய்து தீர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதைத்தான் குஜராத்திலே உள்ள ஆட்சியாளர்கள் செய்கிறார்கள்; அதற்கு உயர்சாதிக்காரர்களால் அங்கே எதிர்ப்பு ஏற்படுவதை நாம் காண்கிறோம்.

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்— சாதி ஒழிய வேண்டும் என்ற அந்தக் கருத்தை ஏதோ இங்கே கருணாநிதி புதிதாகச் சொல்கிறான்— அல்லது பேரறிஞர் அண்ணா புதிதாகச் சொன்னார் அல்லது தந்தை பெரியார் புதிதாகச் சொன்னார் என்று எண்ணிவிடாமல், இந்தக் கருத்து இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பு வள்ளுவர் காலத்தில்— புத்தர் காலத்தில் — மகாவீரர் காலத்தில்–மேதைகள் காலத்தில்—மகான்கள் காலத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்து என்று உணர வேண்டும்.

நாம் மகான்களை ஏற்றுக் கொள்கிறோம்; ஆனால் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை.

நாம் வள்ளுவரை வாழ்த்துகிறோம்; ஆனால், வள்ளுவர் சொன்ன அந்தக் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்வதில்லை.

நாம் பெரியாரை ஏற்றுக் கொள்கிறோம்; ஆனால் பெரியார் சொன்ன அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை!

நாம் அண்ணு அவர்களே ஏற்றுக் கொள்கிறோம்; ஆனல் அண்ணு சொன்ன அந்தக் கருத்துக்களே ஏற்றுக் கொள்வ தில்லே!

நாம் உத்தமர் காந்தி அடிகளே ஏற்றுக் கொள்கிறோம். ஆனல் அவர் தெரிவித்த கருத்துக்களே ஏற்றுக் கொள்வ தில்லே!

எனவே ஒருவரை ஏற்றுக் கொள்வது; அந்தக் கொள்கை வழி நடப்பது—அது எந்தக் கட்சியானலும், நான் சார்ந்திருக்கின்ற கட்சி உட்பட, எந்தக் கட்சி யானலும்—அந்தக் கட்சியிலே உள்ளவர்கள் அரசியல் ரீதியாக இன்றைக்கு சாதியை வளர்க்க முயலுவார்களானல் அவர்கள் தங்களேயும் அறியாமல் இந்த நாட்டிற்கு ஒரு பெரும் கேட்டை—எதிர்கால சமுதாயத்திற்கு ஒரு பெரும் ஆபத்தை உருவாக்குகிறார்கள் என்றுதான் பொருள். அந்த ஆபத்திற்கு இடம் தராத வகையில்—உழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு—இன்றைய இளேய தலைமுறையாம் மாணவச் சமுதாயத்தின் கையில்தான் இருக்கிறது.

அப்படிப்பட்ட இளேய சமுதாயம்—இன்றைய தினம் விழிப்புற்று நடமாடிக் கொண்டிருக்கின்ற அந்தச் சமுதாயம் மேலும் மேலும் தன்னுடைய அயராத தொடர் பணிகளின் மூலமாக புதியதொரு நாட்டை உருவாக்குவதற்கு—சாதி, சமயங்கள் அற்ற ஒரு சமத்துவ நாட்டை—பொருளாதாரத் தில் ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமதர்ம நாட்டை உருவாக்கு வதற்கு பாடுபட வேண்டும்.

அப்படிப் பாடுபடுகின்ற அந்தப் படையிலே சேருகின்ற முப்பது வீரர்களே இன்றைக்கு இந்தப் பட்டமளிப்பு விழாவிலே வாழ்த்துவதிலே பெருமை அடைந்து வாழ்த்தி விடை பெறுகிறேன்.

4—4—81 அன்று திருவாரூர் அரசினர் கலேக் கல்லூரியில் ஆற்றிய உரை.

நாம் ஒரே சாதி- தமிழ்ச் சாதி!

இந்தக் கல்லூரியினுடைய ஆண்டு விழாவும், மாணவர் பேரவையினுடைய நிறைவு விழாவும் மிகுந்த எழுச்சியோடு கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்தில் நானும் கலந்து சொள்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

குறித்த நேரத்திற்கு மாறுக ஒரு இரண்டு மணி நேரம் கழித்து நான் தாமதமாக வந்தமைக்கு நீங்கள் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இந்திய தேசிய செயற்கைக்கோள் இன்சாட் — 1ஏ, அமெரிக்காவிலே இருந்து விண்வெளியிலே பறக்கவிட இரண்டு நாள் தாமதமாகிறது. இதை நாமெல்லாம் பொறுத்துக் கொள்கிற நேரத்தில், ஒரு இரண்டு மணி நேர தாமதத்தையும் நிச்சயமாகப் பொறுத்துக் கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்த நிகழ்ச்சி மாணவர்களுக்காக மாத்திரம் நடடபெறுகிற நிகழ்ச்சி அல்ல என்பதை இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமி இருக்கின்ற பெருமக்களைப் பார்த்தாலே புரிகிறது.

மாணவர் பேரவையினுடைய நிறைவுவிழா என்று மாத்திரம் விளம்பரம் அல்லது அழைப்பு என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்குமேயானால் ஒரு அரங்கத்தில் அல்லது ஒரு மண்டபத்தில் மாணவர்களுக்கு மத்தியிலே மாத்திரம் என்னை நிறுத்தி பேசச் சொல்லி இருக்கக்கூடும்.

இது கல்லூரியினுடைய ஆண்டு விழாவாகவும் ஆகி விட்ட காரணத்தால், கல்லூரிக்கு வந்த மாணவர்களுக்காக மாத்திரமல்ல, கல்லூரிக்கு மாணவர்களை அனுப்பி வைத்த பெற்றோர்களுக்கும் சேர்த்து நடைபெறுகின்ற விழாவாகவே இங்கு நடப்பதாக நான் நம்புகின்றேன்.

ஆனால் ஒன்று. நான் மாணவர் பேரவையினுடைய நண்பர்களுக்கும் சொல்லிக் கொள்வேன். கல்லூரியினுடைய முதல்வர் அவர்களையும் வேண்டிக் கொள்வேன். பல்வேறு அரசியல் கட்சி சார்புடைய அமைப்புகளையும் நான் கேட்டுக் கொள்வேன்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள், மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளாக ஏற்பாடு செய்யப்பட்டு அதிலே கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பு என் போன்றவர்களுக்கு அளிக்கப்படுமேயானால் மிகச் சிறப்பாக அது அமைந்திடக் கூடும்.

இந்த மேடையில் யாரும் நேரிலே காணுமல் இந்த மேடையினுடைய நிகழ்ச்சிகளை ஒலிபெருக்கியின் மூலமாக மாத்திரம் கேட்டுக் கொண்டிருப்பார்களேயானால் ஒரு அரசியல் பொதுக்கூட்டம் நடைபெறுவதைப்போல— பல்வேறு கழக அமைப்புக்கள் சார்பில்—மன்றங்களின் சார்பில் எனக்கு மாலைகளை, கைத்தறி ஆடைகளை—ரூபாய் நோட்டுக்கள் கோத்திடப்பட்ட மாலைகளை எல்லாம் அணி

வித்திருப்பது நான் வேறொரு மேடையானுல் அவைகளை மிகுந்த விருப்பத்தோடு ஏற்றுக் கொள்வேன்.

ஆனுல், ஒரு கல்லூரியில் நடைபெறுகின்ற விழாவிலே அரசியல் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் தங்களுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக் கொள்ளுவது என்னைப் பொறுத்த வரையிலே நான் விரும்பவில்லை என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனுல், அவர்கள் கேட்டார்கள். 'நீ, நீண்ட நாளைக்குப் பிறகு விழுப்புரம் வருகிறாய்; வருகிற உன்னை வரவேற்கா விட்டால் என்ன எண்ணிக் கொள்வாயோ என்கின்ற ஐயம் எங்களுக்கு—நீண்ட நாட்களுக்கு பிறகு மாத்திரம் அல்ல; நீண்ட பயணம் வேறு நடத்திவிட்டு வருகிறாய். அந்த நேரத்திலே வரவேற்கா விட்டால் நீ என்ன நினைப்பாயோ என்கின்ற சிந்தனை எங்களுக்கு; வந்தது தான் வந்தாய் கல்லூரி நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு கூட்டத்திலே கலந்து கொள்கிறேன் என்று ஒப்புதல் அளித்திருந்தால் எங்க ளுடைய கைவரிசையை எல்லாம் அங்கே காட்டி இருப் போம். எனவே ஒரே நிகழ்ச்சி என்கின்ற காரணத்திலுல் நாங்கள் இந்த மேடையைப் பயன்படுத்திக் கொண்டோம்' என்று அவர்கள் சமாதானம் சொல்லக்கூடும்.

ஒருவேளை அதற்கும் நான் காரணமாக இருந்திருப் பேனேயானுல் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களுக்காக நடைபெறுகின்ற விழாக்கள், நிகழ்ச்சிகள் எதுவாயினும் அது ஆண்டு விழாவானுலும், நிறைவு விழாவானுலும், பேரவையினுடைய தொடக்க விழாவானுலும், மாணவர்கள் மாத்திரமே கூடியிருந்து வருகின்றவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்த—நல்ல கருத்துக் களை வழங்கக் கூடிய பெரியோர்களாக இருந்தாலும்,

அவர்கள் கட்சி சார்பற்ற முறையிலே சில கருத்துக்களை— நாடு வாழ—நலிவுதீர—சமுதாயத்திலே மேன்மைகள் கிடைக்க—அடக்கப்பட்ட—ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ— தமிழ்மொழி காத்திட—தமிழ்இனம் செழித்திட—மக்கள் உரிமைகளைக் காத்திட—சமதர்ம மணம் கமழ்ந்திட— சமத்துவம் எங்கெங்கும் பரவிட—எத்தகைய கருத்துக்கள் தேவையோ, அத்தகைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற அந்த நல்ல வாய்ப்பினை அவர்கள் பெறக்கூடும்.

ஆனல் இங்கே பெருந்திரளாகக் கூடி இருக்கின்ற இந்தக் கூட்டத்தில் பெரும்பாலோர் அசைவ உணவை விரும்பி வந்திருப்பவர்கள். அதைத்தான் நான் அரசியல் பிரச்சாரம் என்பதற்கு உவமையாகக் கூறுகிறேன்.

நான் இங்கே சைவ உணவு மாத்திரம் படைத்தால் போதுமென்று அந்தச் சமையலோடுதான் வந்திருக்கிறேன். எனவே இறைச்சி கிடைக்கும் என்று யாராவது இந்தப் பெரும் கூட்டத்திலே இருப்பார்களேயானல் அவர்கள் ஏமாந்து போனல் அதற்கு நான் பொறுப்பாளியல்ல.

காரணம் என்னை அழைத்தது மாணவர் பேரவை. நான் கருத்துக்களைக் கூறவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட இடம்—எடுத்துக் காட்டப்பட்ட இடம் கல்லூரி மண்டபம்.

எனவே நான் பரிமாறுவது அசைவமற்ற, சைவ உணவைத்தான் பரிமாறிட வேண்டும். இங்கேயும் நான் அசைவ உணவைப் பரிமாறுகின்ற மிலிடெரி ஓட்டலை நடத்துவேனேயானல் அது, நான் எந்த இடத்திலே பாடம் கற்றேனே—எந்தப் பள்ளியிலே பயின்றேனே—எத்தகைய தலைமையின் கீழ் என்னை நான் உருவாக்கிக் கொண்டேனே அதற்கு முற்றிலும் பொருந்தாது என்பதனை உங்களுக்குச் சொல்ல வேண்டியவனுக இருக்கின்றேன்.

இங்கே நம்முடைய பெரியவர் சண்முகனர் அவர்கள் இந்தக் கல்லூரி உருவாக்குவதற்குக் காரணமாக எத்தகைய

முயற்சிகளை எல்லாம் அந்தக் காலத்திலே மேற்கொண் டார்கள் என்பதை நண்பர்கள் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டினர்கள்.

இந்த விழாவிற்குத் தலைவராக இருக்கின்ற கல்லூரியின் முதல்வர் அவர்களும், மற்றவர்களும், பேசுகின்ற நேரத் திலேகூட இந்தக் கல்லூரி உருவாவதற்கு நானும்கூட ஒரு காரணம் என்று என்னைக்கூடப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

நீண்ட நேரம் அவர்கள் எல்லாம் உரையாற்ற முடிய வில்லையே என்கின்ற வருத்தம். எனக்கு. அவர்கள் உங்க ளுடைய உள்ளத்தைப் புரிந்து கொண்டிருக்கின்ற காரணத் தினால், தங்களுடைய உரைகளையெல்லாம் சுருக்கமாக முடித்துக் கொண்டார்கள் என்பதையும் நான் அறிந்து கொண்டிருக்கின்றேன்.

இந்தக் கல்லூரி விழுப்புரத்தில் உருவாக வேண்டும் என்று பாடுபட்ட பெரியவர் சண்முகனார், பெரு மகிழ்ச்சி அடையத்தக்க வகையிலும், இது உருவான பிறகு இந்தக் கல்லூரி சிறப்புற நடைபெறுகிறது, என்பதைக் கேள்விப்பட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைந்த நிலையிலும் இந்தக் கல்லூரி யில் உள்ள மாணவர்கள் மிகுந்த திறமைசாலிகள் என்று நான் கேள்விப்பட்ட நிலையிலும் இந்த விழாவிலே கலந்து கொள் வதை எனக்குக் கிடைத்த பெரும்பேறாக நான் கருதுகின் றேன்.

உங்களுடைய அழைப்பிதழை நான் பார்த்தேன். அதிலே 'டாக்டர் கலைஞர் உரையாற்றுவார்' என்று மாத்தி ரம் போட்டிருக்கிறீர்கள். 'கலைஞர் கருணாநிதி' என்று போடவில்லை.

கல்லூரியிலே பெயரை எடுத்துவிட்ட பிறகு, அழைப் பிதழிலே எதற்காக இருக்க வேண்டும் (கைதட்டல்) என்று எண்ணி இருப்பீர்கள்.

சில பேரைப் பார்த்துச் சொல்வார்கள்; நான் எப்படி நடக்க வேண்டும் என்று கேட்டால், 'நீ நல்ல பெயரை எடுக்க வேண்டும்' என்று சொல்வார்கள். அதுபோல் இன்றைக்கு இருக்கின்ற சிலர் நல்ல பெயரை எடுப்பதில் மிக மும்முரமாக இருக்கிறார்கள். (கைதட்டல்)

எனவே எப்படியாவது அவர்கள் நல்ல பெயரை எடுத்தால் போதும் என்கின்ற மகிழ்ச்சி தானே தவிர, பெயரிலே என்ன இருக்கிறது? உங்களுடைய உணர்வுகள் — உங்களுடைய உதிர ஓட்டத்தில் — உங்களுடைய நாடி நரம்புகளிலே பாய்ந்து ஓடுகின்ற குருதி கொப்பளங்களில் — உங்களுடைய மூச்சில் — இதயத் துடிப்பில் எங்கோ ஒரு மூலையில் — எனக்கு ஒரு இடம் இருக்கிறது என்கின்ற அந்த நம்பிக்கை ஒன்றுதான் ஆயிரக்கணக்கான சோதனைகளை, பல்லாயிரக் கணக்கான வேதனைகளை, துன்ப துயரங்களை, இடுக்கண்களை, இன்னல்களை, இடையூறுகளை, தாங்கிக் கொள்ள என்னைப் பழக்கப்படுத்தி இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நீங்கள் கல்லூரி மாணவர்கள். வரவேற் புரையாற்றியவர்கள் அல்லது வாழ்த்துரை வழங்கியவர்கள் அனைவருமே இங்கே எடுத்துக் காட்டியதைப் போல், நாளைய தினம் இந்த நாட்டை நடத்திச் செல்ல வேண்டியவர்கள்.

நாட்டை நடத்திச் செல்ல வேண்டியவர்கள் என்று சொன்னதும் நமக்கு எந்த இலாகா? இரண்டாவது மந்திரியா? மூன்றுவதா? நான்காவதா என்று நாட்டை நடத்துவதற்குப் பதவி ஒன்றுதான் தேவை என்று கருதாமல் பதவி இல்லாமலே கூட நாட்டை நடத்திச் செல்ல முடியும்.

எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்துகூட நாட்டை நடத்திச் செல்ல முடியும்.

எனவே நாட்டை நடத்துவதென்பது ஆட்சிச் செங்கோலை கையிலே வைத்துக் கொண்டுதான் நடத்துவது என்ற பொருளல்ல. பதவியிலே அமர்ந்துதான் நாட்டை நடத்திச்

செல்ல வேண்டும் என்று இல்லை. பதவியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாட்டை நல்ல முறையிலே நடத்திச் செல்ல வேண்டும் என்கின்ற எண்ணம் இன்றைக்கு இளம் தளிர்களாய், கொழுந்துகளாய் இருக்கின்ற மாணவ மணி களுக்கு ஏற்பட்டாக வேண்டும்.

இன்று தமிழகத்திலே ஏராளமான கல்லூரிகள் இருக் கின்றன. நன்றிப் பெருக்கோடு சொல்ல வேண்டுமேயானால் தமிழகத்திலே கல்வித் துறையில், ஒரு சமத்துவம் இட ஒதுக் கீடு மூலமாக, பிற்படுத்தப்பட்ட — தாழ்த்தப்பட்ட மக்க ளுக்குக் கிடைத்திட வேண்டும் என்று அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் தென்புலத்திலே உள்ள பெரியவர்கள் வாதாடி—போராடி—சட்டம் இயற்றி—அதிலே பெருவாரி யான வெற்றியைப் பெற்று அனைவருக்கும் கல்வி கிடைக்கக் கூடிய ஒரு நிலைமையை உருவாக்கி கல்வி நீரோடையிலே சில முதலைகள் — அந்த முதலைகள் கல்வி நீரோடையிலே இருத்தலாகாது; கல்வி நீரோடையில் அனைவரும் தக்க பயனை அனுபவித்திட வேண்டும்—என்ற கொள்கையின் அடிப்படையிலே கல்வியின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தப் பட்டது என்றாலும் கூட, அந்த முதியோர்களுக்கு—முன்னோர் களுக்கு — பெரியவர்களுக்கு—நாம் நன்றியைச் செலுத்த வேண்டியவர்களாக இருந்தாலும்கூட, அவர்களைத் தொடர்ந்து கல்விக் கண்ணைத் திறந்தார் பெருந் தலைவர் காமராசர் என்று சொல்கின்ற அளவிற்கு, கிராமங்கள் தோறும் பள்ளிக்கூடங்களை அமைத்திட்ட அந்த பெரும் பொறுப்பும், அருந்தொண்டும், அவரைத்தான் சாரும்.

அதுமாத்திரமல்ல, அன்றிருந்த பள்ளி இறுதி வகுப்பு வரையிலே காமராசருடைய ஆட்சியில் இலவசப் படிப்பு என் கின்ற ஏற்றமிகு திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அதன் பின்னர், அண்ணு ஆட்சிக்குவந்து அவர் மறைந்து அவரைத் தொடர்ந்து அந்தப் பொறுப்பு என் தோளிலே சுமத்தப்பட்ட நேரத்தில், ஆட்சிப் பொறுப்பு என்னுடைய தலைமையிலே இயங்கிய சமயத்தில் பள்ளி இறுதி வகுப்புவரை

யிலே இருந்த இலவசக் கல்வியை அன்றிருந்த பி.யு.சி. வரை யிலே என்கின்ற அளவிற்கு நான் தலைமையேற்றிருந்த ஆட்சி யின் சார்பாகச் செய்யப்பட்டது என்பதையும் நீங்கள் அறி யாதவர்கள் அல்ல.

எனவே, இப்படிக் கல்வித் தகுதியை இந்த நாட்டில் அனைவரும் பெறுகின்ற வகையிலே தொடர்ந்து எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும் அதிலே படிப்படியாக கல்வி வளர்ச்சியிலே நாட்டம் செலுத்தி இருக்கின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால் கடந்த 6 ஆண்டுகளாக தமிழகத்திலே புதிய கல்லூரிகளே உருவாகவில்லை. நான் இதைக் குறையாகச் சொல்வதாகக் கருதக்கூடாது. யாரை யும் குற்றம் சாட்டுவதாக எண்ணக் கூடாது.

என்ன காரணம்? புதிய கல்லூரிகளை உருவாக்கக்கூடாது என்பதா இன்றுள்ள ஆட்சியாளர்களுடைய எண்ணம்? அல்ல.

உருவாக வேண்டிய அளவிற்கு கல்லூரிகளை நாங்கள் ஏற்கனவே உருவாக்கி விட்ட காரணத்தால்!
(பலத்த கை தட்டல்)

இன்றைக்கு அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்பெல்லாம் எத்தனைக் கல்லூரிகளைச் சேர்த்து ஒரு பல்கலைக் கழகமாக ஆக்கலாம்? என்கின்ற அந்தக் கடமையை இன்றுள்ள ஆட்சி யாளர்கள் செய்து வருகின்றார்கள்.

இதைச் சொல்வது யாரையும் குறைகூற அல்ல என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கின்றேன்.

எனவே ஏராளமான கல்லூரிகளை, இதற்கு முன்பு காம ராசருடைய ஆட்சியைத் தொடர்ந்து, நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் கட்டி முடித்துவிட்ட காரண த்தால், கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், பின்தங்கிய—தாழ்த்தப்பட்ட மக்கள்—இவர்கள்

எல்லாம் நகரங்களுக்குச் சென்று கல்லூரிக் கல்வியைப் பெறுவது என்பது இயலாத காரியம் என்ற காரணத்தினுல், பல வேறு கிராமங்களை இணைக்கின்ற இடங்களில் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு இனி, கல்லூரிகள் போதும்; போதும், இன்னும் கொஞ்ச நாள் கழித்து கல்லூரிகளை உருவாக்கினுல் போதும் என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனுல் அந்தக் கல்லூரிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு மாணவமணிகளுக்கு இருக்கிறது என்பதை நான் மிகுந்த உரிமையோடு எடுத்துக்காட்ட வேண்டியவனுக இருக்கின்றேன்.

கல்லூரிகள் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குகின்ற இடங்கள்; எதிர்காலப் பேரறிஞர்களை தயாரிக்கின்ற பாசறைகள். எதிர்காலத்தில் இந்த நாட்டை ஒழுங்குபடுத்துகின்ற— இந்த நாட்டு மக்களுக்குத் தலைமையேற்கின்ற தலைவர்களை எல்லாம் படைத்தளிக்கின்ற பாடிவீடு!

அப்படிப்பட்ட கல்லூரிகளிலே பயிலுகின்ற மாணவர்கள் தங்களுடைய கடமையினை உணர்ந்தாக வேண்டும்.

என்ன கடமையை உணர வேண்டும்?

நீங்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். நான் கல்லூரிக்குச் செல்லாதவன். செல்லாதவன் என்றுல் இப்படிப்பட்ட விழாக்களுக்குச் சென்றவன்!

ஆனுல், பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லுகின்ற வாய்ப்பைப் பெருதவன். பள்ளி இறுதி வகுப்பில் நான் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே என்னுடைய எண்ணம், சிந்தனையோட்டம், செயல் இவைகள் அனைத்தும் தமிழ் மொழியின்பால்—தமிழ் இனத்தின்பால் ஈர்க்கப்பட்டு விட்டன.

அப்படி ஈர்க்கப்பட்டு விட்ட காரணத்தால், படிப்பிலே நான் கவனம் செலுத்தவில்லை. நீங்கள்கூட எண்ணலாம்! ஆகா! எவ்வளவு அருமையான உதாரண புருடர் இவர்!

படிப்பிலே கவனம் செலுத்தாத காரணத்தால் அல்லவா இப்படி பாராட்டுக்குரிய தலைவராக வந்திருக்கிறார். எனவே, இவரை உதாரணமாக எடுத்துக்கொண்டு, நாம் படிப்பில் கவனம் செலுத்தாமல் இருந்தால் ஒருவேளை உலகத் தலைவ ராக ஆனலும் ஆகலாம். (கைதட்டல்) ஒருவேளை எதிர்க் கட்சித் தலைவராக ஆனலும் ஆகலாம் என்று கருதி நீங்கள் உங்களை ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்.

இவைகள் எல்லாம் விதிவிலக்கு — விதிவிலக்குகள் வழி காட்டிகளாக ஆகமாட்டா! அதை மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

எனவே விதிவிலக்குகளையே உங்களுடைய வழிகாட்டி களாக நீங்கள் பின்பற்றிடக் கூடாது.

ஏதோ நூற்றிலே ஒன்று ஆயிரத்திலே ஒன்று இப்படி இருக்கலாம். அதற்காக நாமும் படிக்காமல் இருந்தால் — நாமும் தேர்வு எழுதாமல் இருந்தால் நாமும் படிப்பைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தால் மேன்மை பெறலாம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள்.

பெரியார் ராமசாமி கல்லூரிக்குச் சென்றவரா? இந்த கேள்வியை எழுப்பி உங்களுக்கு ஒரு கேடயத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள்.

பெருந்தலைவர் காமராசர் கல்லூரியிலே படித்தவரா? இந்தக் கேள்வியை எழுப்பி உங்களுக்கு ஒரு கவசத்தைப் போட்டுக் கொள்ளாதீர்கள்.

எனவே படிப்பு என்பது வேறு; அறிவு என்பது வேறு. ஆனல் இரண்டிற்கும் தொடர்பு உண்டு. இரண்டும் இணை கிற நேரத்தில் அறிவு மெருகேறுகிறது. அதைப் போலவே படிப்பும் அறிவின் காரணமாக பட்டை தீட்டப்பட்ட வைரமாக மாறுகிறது.

இந்த இரண்டும் இணையவில்லையே என்கின்ற ஆதங்கம் இன்றைக்கும் எனக்குண்டு. இருந்தாலும்கூட இனிமேல்

இளமை திரும்பி வரப்போகிறதா? இனியொரு மாணவப் பருவம் நமக்கு ஏற்படப் போகிறதா? எனக்கு அடுத்த ஜென்மத்திலே நம்பிக்கையில்லை. அடுத்த ஜென்மத்திலே மீண்டும் பிறந்து—பிறந்த பிறகு மாணவனாக பள்ளிக்குச் சென்று ஒழுங்காகப் படித்துத் தேறி—கல்லூரிக்குச் சென்று கல்லூரியிலே முதல்தர மாணவனாக தகுதியும் பெருமையும் பெற்று எண்களும் எடுத்து, அப்படியெல்லாம் உயர வேண்டும் என்கின்ற ஆசை இருந்தாலும், எனக்கு அடுத்த ஜென்மத்திலே நம்பிக்கை கிடையாது.

அடுத்த ஜென்மத்திலே நம்பிக்கை இருக்குமேயானால் நான் அப்படிப்பட்ட ஆசைகளைப் பெறுவதிலே நியாயம் இருக்க முடியும். ஏன் எனக்கு அடுத்த ஜென்மத்திலே நம்பிக்கை இல்லை என்றால், இந்த உலகத்தினுடைய விஞ்ஞான வளர்ச்சியை நாம் உற்றுநோக்கினால் ஏதோ வேதங்களிலும் புராணங்களிலும் அவர்கள் கொள்கைகளில் ஜென்மங்களைப் பற்றிக் கூறியிருந்தாலும் அந்த ஜென்மங்கள் இந்த ஜென்மத்திலே இருக்கின்ற மனிதனை மிரட்டிப் பணிய வைப்பதற்காக ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளே அவர்களைப் பணிய வைப்பதற்காக—ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளே அவர்களை அடங்க வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறு நம்பிக்கைகளே தவிர வேறு அல்ல.

இந்த ஜென்மத்திலே தவறு செய்தால் அடுத்த ஜென்மத்தில் நாயாகப் பிறப்பாய் என்றால், அதை எண்ணி இவன் தவறு செய்யாமல் இருக்க எண்ணுகிறான் என்று ஒரு நம்பிக்கை, அப்படிச் சொல்லுகின்றவர்களுக்கு!

அதற்குப் பணிந்தவனும் உண்டு. பரவாயில்லை நாயாகப் பிறந்தாலும் நாலு வீட்டு எச்சில் இலைகளைச் சாப்பிட்டு வயிறு நிரப்பும். இப்படி வயிற்றுச் சோறு இல்லாமல் வாடுவதைவிட விரைவிலே செத்துப்போய் நாயாகப் பிறந்து நாலு வீட்டு எச்சில் இலையைச் சாப்பிடலாம் என்று எண்ணுகின்ற அளவிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே பல கோடி மக்கள் இந்தியத் திருநாட்டிலே இருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

எனவேதான் ஜென்மம்—அது போன்ற நம்பிக்கை அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்தப் பிறவியில்—இந்த ஜென்மத்தில் மனிதனுடைய வாழ்க்கையில் நாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம்; எத்தனை காலம் வாழ்ந்தோம்; எத்தனை வருடங்கள் நம்முடைய வாழ்வு நீண்டது—நீளப் போகிறது என்று கவலைப்படுவதைவிட, வாழ்ந்த காலத்திலே எப்படி வாழ்ந்தோம் என்கின்ற அந்தக் கவலைக்கு நம்மை நாம் ஆளாக்கிக் கொள்ள வேண்டும்.

கவிச் சக்ரவர்த்தி பாரதியார் நாற்பது ஆண்டுகூட வாழவில்லை. ஆனால் அவர் வாழ்ந்த அந்தக் குறைந்த காலத்தில் எவ்வளவு பெரிய சுவையை அவர் இந்த உலகத்திலே விட்டுச் சென்றிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பது அல்ல; வாழ்ந்த காலத்திலே நாட்டிற்கு என்ன செய்தோம்; சமுதாயத்திற்கு என்ன செய்தோம்; மொழிக்கு என்ன செய்தோம் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் எல்லாம் படித்த காலம் எனக்குப் பசுமையாக நினைவிற்கு வருகிறது. திருவாரூர் பள்ளியிலே நான் படித்துக் கொண்டிருந்த பொழுது, அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தைப் பற்றி இங்கே சொன்னார்களே—நம்முடைய நண்பர்கள் பழனியப்பன் அவர்களும், செஞ்சி ராமச்சந்திரன் அவர்களும். அந்த அண்ணாமலை பல்கலைக் கழகத்திலேதான் இன்றைய நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் பயின்றார். இன்றைய தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அங்கேதான் பயின்றார். என்னுடைய நண்பர் மதியழகன் அவர்கள் அங்கேதான் பயின்றார்.

தென்னற்காடு மாவட்டத்தினுடைய கறுப்பு இளவரசர் என்று பாராட்டப்பட்ட என்னுடைய ஆருயிர் நண்பர் கடலூர் இளம்வழுதி அங்கேதான் பயின்றார்.

அவர்களையெல்லாம் நான் அந்தக் காலத்திலேயே அறி வேன். அவர்கள் எல்லாம் அங்கே பயின்ற அந்தக் காலத் திலேதான் பேரறிஞர் அண்ணு அவர்களை அங்கே அழைத்து உரையாற்றுமாறு ஏற்பாடு செய்தார்கள். எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கிடையே பேரறிஞர் அண்ணு அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே உரையாற்றச் சென்றார் கள். அவருக்கு அப்போது தரப்பட்ட தலைப்புக்கள் இரண்டு. முதலிலே உரையாற்றிய போது 'ஆற்றோரம்' என்ற தலைப் பிலே பேரறிஞர் அண்ணு பேசினர்.

அடுத்து ஒருமுறை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே, பேரறிஞர் அண்ணு அவர்கள் "ஏ தாழ்ந்த தமிழகமே!" என்ற தலைப்பிலே பேசினர்.

'ஆற்றோரம்' என்ற தலைப்பிலே அண்ணு அவர்கள் அங்கே பேசியபோது எடுத்துச் சொன்ன கருத்து, நாடே எதிர்பார்த்தது. 'என்ன, அண்ணு அவர்களை ஒரு பல்கலைக் கழகத்திற்கு அழைத்து ஆற்றோரத்தைப் பற்றிப் பேசச் சொல்லி இருக்கிறார்கள். அதைப்பற்றி என்ன பேசப் போகிறார் என்று நாடே மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தது.

ஆனால் அண்ணு பேசினர். 'இந்திய நாட்டினுடைய நாகரிகத்தைப்பற்றி உண்மையிலே எழுத வேண்டுமேயானால், அந்த நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தமிழனுடைய வாழ்க்கை—இலக்கியம் இவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இந்தியாவினுடைய வரலாறு; இன்றைக்கு கங்கையாற்றோரத்திலே இருந்து எழுதப்படுவதற்குப் பதிலாக காவிரியாற்றோரத்தில் இருந்து எழுதப்பட வேண்டுமென்று தன்னுடைய உரையைத் தொடங்கினர்.

அந்தக் கருத்து, அறிஞர் அண்ணு அவர்களுக்கு முன்பே, 'மனோன்மணீயம்' சுந்தரம் பிள்ளை அவர்கள் இந்த நாட்டுக்கு விட்டுச் சென்ற கருத்துக்களிலே ஒன்று. 'மனோன்மணீயம்' சுந்தரம்பிள்ளையே சொல்லி இருக்கிறார். இந்தியாவினுடைய

முழுமையான வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமே யானுல் அந்த வரலாறு, கங்கை நதி தீரத்திலே இருந்து புறப் படுவதற்குப் பதிலாக, எழுதப்படுவதற்குப் பதிலாக காவேரி தீரத்திலே இருந்து எழுதப்பட வேண்டும். இந்தக் கருத்தினைப் பேராசிரியர் மனேன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

அந்தக் கருத்தை மையமாக வைத்துத்தான் பேரறிஞர் அண்ணு அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலே உரை யாற்றிய போது 'கங்கையாற்று நாகரிகம், காவேரியாற்று நாகரிகத்தை அடக்கிட — ஒடுக்கிட முனைந்தது. அதிலே ஒருவாறு வெற்றியும் பெற்றது. எனவேதான் சொல் கிறேன். காவேரியாற்றேரத்தில் இருந்து வரலாறு எழுதப் பட்டாக வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

இன்றைக்கு காவேரி என்றுல், நம்முடைய உள்ளத்திலே எல்லாம் குடைந்து கொண்டிருக்கின்ற பிரச்சினை 'காவேரி தகராறு எப்பொழுது தீரும்' என்பதுதான்.

ஆனுல், அந்தக் காவேரியின் கரைகளினுடைய வரலாறு— காவேரி தீரத்தினுடைய வரலாறு — அந்தக் காவேரிக்குக் கரை கட்டிய மன்னர்களுடைய வரலாறு-இவைகளைப் பற்றி எண்ணுகிற, ஏக்கப் பெருமூச்சு விடுகிற, எண்ணிஎண்ணி பெருமைப்படுகின்ற மாணவர்களுடைய தொகை குறைந்து கொண்டே வருகின்ற காட்சியை நான் கண்டு கொண்டே வருகின்றேன்.

இன்றைய தினம் மாணவர்களுடைய கவலை இன்னும் வேதனையோடு சொல்ல வேண்டுமானுல், ஒவ்வொரு கல்லூரியிலேயும் — பல்கலைக் கழகமானுலும் — கல்லூரி யானுலும் அல்லது வேறு கல்விக்கூடங்களானுலும் அங்கெல் லாம் மாணவர்கள் எந்த வகையிலே பிரிக்கப்பட்டிருக் கிறார்கள்?

ஒரு காலத்திலே வ.வே.சு. அய்யர் அவர்கள் சேரமாதேவியிலே நடத்திய குருகுலத்தில், மாணவர்களை ஜாதிவாரியாகப் பிரித்து, அவர்களுக்கு சமபந்தி உணவு படைக்கமாட்டேன் என்று சொன்ன காரணத்திற்காக காங்கிரஸ் இயக்கத்திலேயே பெரும் தளபதியாக விளங்கிய பெரியார் ராமசாமி, வ.வே.சு. அய்யர் அவர்களை எதிர்த்து சேரமாதேவியிலே போராட்டம் நடத்தி அந்த இயக்கத்திலிருந்தே வெளிவரக் கூடிய நிலைமை உருவாயிற்று ஒரு காலத்தில்.

அதற்குப் பிறகு குடந்தையிலே தண்ணீர் குடிப்பதிலே கூட வேறுபாடு.

இன்னின்ன ஜாதிக்கார மாணவர்கள் இன்னின்ன பானைகளிலே தண்ணீர் குடித்தாக வேண்டும். இந்தப் பானையிலே அவர் கைபடக் கூடாது: அந்தப் பானையிலே அவர் கைப்படக் கூடாது என்கின்ற அளவிற்கு ஜாதிப் பாகுபாடு குடந்தை கல்லூரியிலே தோன்றி அதற்காக ஒரு போராட்டமே ஏற்பட்டது.

இது குடந்தை, சேரமாதேவி என்று நான் குறிப்பிட்ட இந்த இரண்டு ஊர்களோடு மாத்திரமல்ல; நாடு தழுவிய ஒரு நிலையாக இருந்தது.

அவைகள் எல்லாம் போக்கப்படத்தான் இந்த நாட்டிலே உள்ள பெரியவர்கள், தியாகிகள், சீர்திருத்தவாதிகள், புரட்சிக்காரர்கள், சமுதாய மறுமலர்ச்சியை விரும்பியவர்கள் போரிட்டார்கள்— வென்றார்கள்

ஆனால் இன்றைக்கு நிலை என்ன? இன்றைக்கு நம்மை வேறு யாரும் பிரிக்க வேண்டாம்; நம்மை நாமே பிரித்துக் கொள்கிறோம்.

எந்தக் கல்லூரியானாலும் அல்லது எந்தக் கல்விக்கூடமானாலும் பல்கலைக் கழகமானாலும், அங்கெல்லாம் மாணவர்கள் எத்தனை ஜாதிகளாகப் பிரிந்து கிடக்கின்றார்கள்? ஜாதிகளாகப் பிரிந்து கிடப்பது இட ஒதுக்கீடுகளைப் பொறுத்த

வரையிலே தேவைதான் என்றாலும்கூட, இதய ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையிலே அது சரியல்ல என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

"ஜாதியிலே, மதங்களிலே, சாத்திரச் சந்தடியிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்" என்று வடலூர் வள்ளலார் பாடினார்.

அந்த வள்ளலார் வாழ்ந்த மாவட்டத்திலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வள்ளலாருக்கு விழா எடுக்கின்றோம்; பூசத் திருவிழா நடத்துகின்றோம்; 'அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங் கருணை' என்றெல்லாம் சொல்லுகின்றோம்.

நம்முடைய பெரியவர் சண்முகனார் அவர்களுக்குக் கூடக் கொஞ்ச காலமாக வள்ளலார் மீது பற்று மிகுந்திருப்பதை நான் கேள்விப்பட்டேன். நம்பிடவில்லை. மேடையிலே கண்டேன். அந்த அளவிற்கு வடலூராருடைய கருத்தை எடுத்துச் சொல்லுகிற நாம் அதைப் பின்பற்றத் தயாராக இருக்கிறோமா?

'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை' என்று ஆரம்பித்து எந்த கொள்கைகளை வள்ளலார் நாட்டுக்குச் சொல்ல முற்பட்டாரோ அந்த புரட்சிகரமான கொள்கைகளையெல்லாம் மறைத்துவிட்டு அவைகள் எல்லாம் ஆறும் திருமுறை என்று— ஆறும் திருமுறைக்கு ஒதுக்கிவிட்டு அவர் கடவுளைப் பற்றி என்னென்ன பாடினார்? என்னென்ன தெய்வங்களை பற்றிப் பாடினார் என்பதை மாத்திரமே மக்களிடத்தில் எடுத்து வைத்து உண்மையான வள்ளலாரை— உண்மையான இராமலிங்க அடிகளை—மறைப்பதிலே நாம் சாமர்த்திய சாலிகளாக இருந்திருக்கிறோமே யல்லாமல், அவருடைய கொள்கைகளைப் பின்பற்றுவதிலே நாம் உண்மையானவர்களாக இருந்திடவில்லை.

பாரதியார் நூற்றுண்டு விழா கொண்டாடுகின்றோம். 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று குழந்தைக்கே சொன்னார். ஆனால் நாம் குமரர்களுக்கு, குமரிகளுக்கே சொல்ல வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறதே ஏன்?

நான் என்ன ஜாதி? முதலியாரா? பார்ப்பனரா என்று இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் காணுகின்ற நிலையை விட — நாம் அத்தனை பேரும் என்ன ஜாதி? தமிழ்ச்சாதியல்லவா?

கரிகால் பெருவளத்தானின் வாழையடி வாழையாக வந்தவர்கள் அல்லவா!

பாண்டியன் நெடுஞ்செழியனுடைய பரம்பரை அல்லவா? சேரன் செங்குட்டுவனின் சந்ததியல்லவர?

எத்தகைய சந்ததி?

எத்தகைய முன்னோர்கள்?

நான் முதலிலே குறிப்பிட்டேனே காவேரி, அந்தக் காவேரிக்கு கல்லணை என்கின்ற இடத்திலே அணை எடுத்தானே திருமாவளவன் கரிகால்பெரு வளத்தான்; அந்த அணையைக் கட்ட — காவேரியின் கரையை உயர்த்த —அவன் இலங்கை வரை சென்று பன்னீராயிரம் சிங்களவர்களை வென்று அவர் களைக் கைதிகளாக ஆக்கிக்கொண்டு தமிழகத்திற்கு வந்து, அந்தக் கைதிகளைக் கொண்டு காவேரிக்கு அணை கட்டினான் என்பது நம்முடைய வரலாறு.

கண்ணகிக்குச் சிலை வைக்க வேண்டும்! எங்கே கல் எடுப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தான் சேரன் செங்குட்டுவன். அந்த நேரத்திலேதான் "காவா நாவிற் கனக விசயரும், ஈங்குமன்னர் தம்முடன்கூடி அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலராகி, செப்பிய மொழிகளை சேரனுக் குணர்த்துவேன்" என்று — வடபுலம் சென்ற ஒரு புலவன்

திரும்பி வந்து ''மன்னவரே! சேரரே! நான் வடபுலம் சென்றிருந்தேன். அங்கே கனகன், விசயன் என்ற இரண்டு மன்னர்கள் தங்களுடைய இரும்புக்கூடத்திலே பேசியதை காதால் கேட்டேன்'' என்றூர்.

''என்ன கேட்டாய்'' என்று வினவியபோது, அந்தப் புலவர் சொன்னூர். ''தமிழகத்திலே உள்ள மன்னர்கள் இமயம் வரையிலே படை எடுத்தார்களாம். என்ன காரணம் தெரியுமா? எம்போல் மன்னர்கள் அப்பொழுது இங்கே இல்லேபோலும்; அதனுல் படையெடுத்தார்கள். புலி, வில், கயல் என்ற இலச்சினைகளை இமயத்தின் நெற்றியிலே பொறித்தார்கள். காரணம் எங்களைப் போன்ற மன்னர்கள் இல்லாததுதான் என்று இழித்துரைத்தார்கள்'' என்று சொன்னதும் சேரன் செங்குட்டுவன் வீறுகொண்டெழுந்தான்.

எழுந்த நேரத்திலே அந்த அவையிலே இருந்த ஒரு நிமித்திகன் கேட்டான்: ''சேர மன்னு! கனகனும் விசயனும் இகழ்ந்தது தமிழ்நாட்டு மன்னர்கள் அத்தனை பேரையும்தான். ஆனுல் உனக்கு மாத்திரம் கோபம் வருவானேன்!'' என்றூன். செங்குட்டுவன் ''தமிழன் என்பதால்!'' என்று சொன்னுன்.

பாண்டியனுக்கோ, சோழனுக்கோ வராத கோபம், உனக்கேன் என்று கேட்டபோது, 'தமிழன் என்பதால் அவர்களுக்கும் சேர்த்துத்தான் நான் போர்முரசம் கொட்டுகிறேன்' என்று சொல்லி தும்பிவாடி, தோரணப்பட்டு, கோட்டையிலே உள்ள வீரர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு வடபுலம் சென்று, இமயமலைக்கு அருகாமையிலே உள்ள குயிலாலுவத்திலே கனகனையும், விஜயனையும் வென்று, அவர்கள் துறவிகளாக உருவம் மாற்றிக் கொண்டு ஓடிய நேரத்தில் அவர்களைக் கைதுசெய்து — கைது செய்யப்பட்டவர்களை மன்னர் முன் கொண்டுவந்து; நிறுத்தியபோது, கண்ணகிக்குச் சிலை வடிக்க இங்கே கல் எடுங்கள்! என்று கல்லை பெயர்க்கச் சொல்லி அந்தக் கல்லைச் சுமந்து தமிழகம்

வரையிலே வருவதற்கு நல்ல எருமைகள் கிடைத்து விட்டன. இவர்களுடைய தலையிலே ஏற்றி அந்தக் கல்லைத் தமிழகத் திற்குக் கொண்டு வாருங்கள் என்று கொண்டுவந்து கண்ணகிக்குச் சிலை எடுத்த சேரன் செங்குட்டுவன் நம்முடைய மூதாதை!

அதை எண்ணிப் பார்க்கிறோமா?

'நீதி வளைந்தது' எனக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் காவியுகு நீரும், ஆவி குடிபோன வடிவுங் கொண்டு, கையில் தனிச் சிலம்போடு பாண்டியனுடைய கொலு மண்டபத்திற் குள்ளேயே வந்து 'என் கணவன் கள்வன் அல்ல!' என்று நீதிக்காகப் போராடி — வாதாடி வென்ற நேரத்தில்நான் தான் கள்வன் — நான்தான் திருடன் என்று கூறி உயிர்விட்டு வளைந்த செங்கோலை நிமிர்த்திக் கொண்டான் நெடுஞ் செழியபாண்டியன்.

அவன் வளைந்த செங்கோலை நிமிர்த்திக் கொண்டான். அந்த நெடுஞ்செழிய பாண்டியனுடைய வாரிசுகளா நாம்? எண்ணிப் பார்க்கிறோமா?

எனவே ஒரு காலத்திலே தமிழகம் எப்படி தழைத் தோங்கி நின்றது! வீரமணம் கமழ்ந்தது! அதற்குப் பிறகு பொலிவிழந்து போன தமிழகத்திலேகூடப் பிற்காலச் சோழர்கள் உருவானார்கள்.

ராஜராஜ சோழனும், ராசேந்திர சோழனும் கடற்படை நடத்தினர்கள். கடாரம் வரையிலே சென்றார்கள்; வென்றார் கள் என்பதுதான் நம்முடைய வரலாறு.

அந்த வரலாறுகளைப் பற்றியெல்லாம் நாம் இன்றைக்குக் கவலைப்படுவதில்லை. நாம் கவலைப்படுவதெல்லாம் 'நாம்' என்றால் என்னையும் சேர்த்துச் சொல்வதாக நீங்கள் எண்ணிக் கொள்ளாதீர்கள். அருமை மாணவக் கண்மணிகளைப் பற்றித் தான் சொல்லுகின்றேன்.

நாம் கவலைப்படுவதெல்லாம் அணிகின்ற உடை எப்படி இருக்க வேண்டும்? நம்முடைய தலை எவ்வாறு வாரிவிடப்பட வேண்டும்? எப்படி எப்படி புதிய புதிய நாகரிகங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன? அந்தச் சிந்தனை வேகத்திற்குத்தகுந்தவாறு அந்த நாகரிகத்தைக் கடைப்பிடிக்க முனைகிறோமேயல்லாமல், நம்முடைய பழம்பெரும் நாகரிகம் வீழ்ந்து விட்டதே- அந்த நாகரிகம் வீழ்ந்து கிடக்கின்ற பள்ளத்தாக்கிலே இருந்து அதை வெளியே எடுத்து ஒளி உலகத்திற்குக் கொண்டு வர வேண்டுமே என்கின்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் இன்றைக்கு மாணவமணிகள் இருக்கின்றார்கள். அவர்கள் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். அந்தக் காலத்திலும் நான் ஏற்கனவே குறிப்பிட்டேனே பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஏ தாழ்ந்த தமிழகமே!' என்று அழைத்தார்களே அந்தக் காலத்திலே— எத்தனை எத்தனை மாணவர்கள் தமிழ் உணர்வு கொண்டிருந்தார்கள். எத்தனையெத்தனை மாணவர்கள் தமிழின உணர்வு கொண்டிருந்தார்கள்!

இன்றைக்கு அந்த மொழி உணர்வும்- இன உணர்வும் அற்றுப் போகின்ற அளவிற்கு 'ஜாதிப்பித்து' என்கின்ற உணர்வு மாணவர்களை மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருக்கிறது.

எனவே பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், அல்லது முன்னேறியோர் என்கின்ற இந்த மூன்று பிரிவினர் தான் நாட்டிலே இருக்க வேண்டும். அதுவும் ஒரு காலவரையறை வரையிலேதான்.

பிற்படுத்தப்பட்டோர் எல்லாம் இன்றைக்கு முன்னேறியிருக்கின்ற மற்றவர்கள் அளவிற்கு — முன்னேறுகின்ற அந்தக் காலவரையறையிலே அது இன்னும் நூறுண்டு காலம்கூட ஆகலாம்; இருநூறுண்டு காலம்கூட ஆகலாம். ஆனால் அதுவரையில் அவர்களுக்கு ஏற்ற இட ஒதுக்கீடு

தேவைதான். ஆனால் அவர்களுக்குள்ளேயே சண்டை சச்சரவு கள் தேவை தானா? மோதல்கள் தேவைதானா?

அன்றைக்கு எழுதி வைத்தார்கள் புராணத்தில் — பிருமா வினுடைய தலையிலே பிறந்தவர்கள் இவர்கள்; தோளிலே பிறந்தவர்கள் இவர்கள்; தொடையிலே பிறந்தவர்கள் இவர் கள்; காலிலே பிறந்தவர்கள் இவர்கள்.

காலிலே பிறந்தவர்கள் தான் பெரும்பான்மையான நாம்!

காலிலே பிறந்தவர்கள் நாம் — நாம் அத்தனை பேர் களும் காலிலே தானே பிறந்தோம் அந்தக் காலத்துப் புரா ணத்தின் கூற்றுப்படி! எல்லோரும் காலிலே பிறந்திருக்கும் போது நாம் ஏன் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொள்ள வேண்டும் என்று காலிலே பிறந்த நாம் 'நீ பெருவிரலிலே பிறந்தாய், நீ அடுத்த விரலிலே பிறந்தாய், நீ நடுவிரலிலே பிறந்தாய், நீ சுண்டு விரலிலே பிறந்தாய் என்று காலிலே எந்த விரலிலே பிறந்தோம் என்று நமக்குள்ளே சண்டை போட்டுக் கொள்வது தேவைதானா என்பதை எனது அருமை மாணவக் கண்மணிகளே நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

நான் மாணவர்களுக்கு மாத்திரம் இந்த வேண்டுகோளை விடவில்லை. பெரியவர்களுக்கும் சொல்லுகிறேன். தமிழ கத்தில் என்றுமில்லாத அளவிற்கு இன்றைக்கு ஜாதிப் பூசல் கள் — சமயச் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. மதச் சண்டைகள் நடைபெற்று வருகின்றன.

அவைகளுக்கெல்லாம் காரணம் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற இளம் தலைமுறை. அந்த இளம் தலைமுறையினு டைய உள்ளத்தில் நச்சு விதைகள் ஊன்றப்படுகின்றன. அந்த ஊன்றப்பட்ட விதைகளை எல்லாம் எடுத்து எறிந்திட வேண்டும்.

நம்முடைய வீரம் செறிந்த வரலாறுகளை மாணவர்கள் படித்திட வேண்டும். நம்முடைய மாணவர்கள் ஒரு காலத்திலே கவிதை எழுதினர்கள்.

சேரர்கள் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டிய அரசு ஏன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்,
கோழை கொள்கை குவிந்தது எவ்விதம்?

வெடித்தன விளுக்கள் வெதும்பிய மனத்தில் என்று கவிதை எழுதப்பட்ட நாடு இந்த நாடு!

மாணவப் பருவத்திலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பார்த்து எங்களுடைய மாணவர் மன்றத்திற்கு ஒரு வாழ்த்துக் கவிதை எழுதி அனுப்புங்கள் என்று கேட்டபோது,

"தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்
வன்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங் காண்
மக்களுடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்
கிளம்பிற்று காண் தமிழ்ச்சிங்கக்கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை"

—என்று எழுதிய பாரதிதாசனுடைய அந்தப் பாடலை இன்னமும் நான் எண்ணியெண்ணி சுவைத்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் காலம் இனி திரும்பி வராதா என்கின்ற அப்படிப்பட்ட அந்த உணர்வு மாணவர்களுடைய உள்ளத்திலே இன்றைக்கு வேர் விட்டுக் கிளம்பியிருக்கிறதா? பீரிட்டு எழுகிறதா?

வேதனையோடுதான் நான் கேட்கிறேன்.

எனவேதான் மாணவர்களை நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வேன்— அப்படிப்பட்ட உணர்வுகளை நீங்கள் பெற்றுக வேண்டும்.

சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கிட நீங்கள் பாடுபட வேண்டும்.

பகுத்தறிவு மணம் கமழ்கின்ற ஒரு சமுதாயத்தை— ஒளிவிடும் சமுதாயத்தை உருவாக்கிட நீங்கள் பாடுபட்டாக வேண்டும். அப்படிப்பட்ட பெரும் பணிகளிலே உங்களை ஈடு படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல்- வகுப்புக் கலவரம்- ஜாதிக்கலவரம் என்கின்ற இந்தப் பேதங்களை வளர்த்துக் கொள்ளக்கூடாது. இதைத்தான் இந்த மாணவர் பேரவை யினுடைய நிறைவு விழாவில்— இந்தக் கல்லூரியினுடைய ஆண்டு விழாவில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

11—4—82 அன்று விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் ஆற்றிய உரை.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வு நூல் நிலையம்
சென்னை-18
முரசொலி அறிவாலயம்